REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 செப்டெம்பர் 24 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

வரு. 88 இல. 227 | September 24, Thursday, 2020 | 20பக்கங்கள் | 30/-






வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நாரஹேன்பிட்டி அலுவலகத்துக்கு நேற்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார். சேவையை பெற்றுக்கொள்வதற்காக வந்த ஒருவர் வழங்கிய புகாரையடுத்தே ஜனாதிபதி இந்த திடீர் விஜயத்தை மேற்கொண்டார்.

### மக்களின் பிரச்சினைகளை கண்டறிந்து தீர்வுகாண

## கிராமங்களுக்கு நேரடியாக விஜயம் செய்யவுள்ள ஜனாதிபதி கோட்டாபய

மக்கள் மத்தியில் சென்று அவர்கள் முகங்கொடுத்து வருகின்ற பல்வேறு பிரச்சினைகளை நேரடியாக இனங்கண்டு தாமதிக்காமல் தீர்வுகளை வழங்குவதற்காக கிராமங்களுக்குச் செல்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திட்டமிட்டுள்ளார்.

மக்கள் முகங்கொடுத்து வருகின்ற பிரச்சினைகளை தான் நேரடியாகக் கண்டு அவர்களின் கவலைகளை கேட்டு சரியான தெளிவொன்றை பெற்று நிவாரணங்களை வழங்குவது அவரது எதிர்பார்ப்பாகும்.

முதல் விஜயமாக பதுளை மாவட்டத்தின் ஹல்துமுல்லை பிரதேச செயலகப் பிரிவு தெரிவு செய்யப்பட்டுள்ளது. மக்கள் சந்திப்பு ஹப்புத்தளை 100 ஏக்கர் கிராமத்தில், குமாரதென்ன பாடசாலையில் நாளை வெள்ளிக்கிழமை (25) காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

கிராமிய மக்கள், நீண்டகாலமாக தீர்த்து வைக்கப்படாத பொருளாதார மற்றும் சமூக பிரச்சினைகளினால் அல்லல்பட்டு வருவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் 06

## கல்வியமைச்சின் விசேட அறிவித்தல்

கல்வி அமைச்சு
MINISTRY OF EDUCATION

நாட்டிலுள்ள தேசிய பாடசாலைகளில் இடை வகுப்புகளுக்கு மாணவர்களை சேர்ப்பது மறுஅறிவித்தல் வரை இடை நிறுத்தப்படுவதாக கல்வி அமைச்சு 06

### வனவளம், தொல்பொருள், மகாவலி அதிகார சபைகளால் மக்கள் பாதிப்பு;

# யாழ். செல்லும் அமைச்சர்களின் கவனம் வன்னிக்கும் அவசியம்



### அதிகம் பாதிப்புற்ற மக்கள் அங்கிருப்பதாக செல்வம் M.P சுட்டிக்காட்டு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

வனவள திணைக்களம், தொல்பொருள் திணைக்களம் மற்றும் மகாவலி அதிகார சபை என்பன வன்னி மக்களுக்கு மிகவும் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்தி வருகின்றன. இது தொடர்பாக கவனம் செலுத்தாவிட்டால் அந்த மக்களின் வாழ்க்கைக்கு பெரும் பாதிப்பு ஏற்படுமென தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2019ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டுக்கான நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் 2019ஆம் ஆண்டுக்கான மூன்றாவது காலாண்டு செயலாற்றுகை அறிக்கை என்பன மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

அமைச்சர்கள் வன்னி மாவட்டத்தின் ஊடாகவே யாழ்ப்பாணத்துக்கு செல்கின்றனர். அவ்வாறாக செல்லும் போது, வன்னி மாவட்டத்துக்கும் வந்து தமது கவனத்தை செலுத்த வேண்டுமென்று கோருகிறேன்.

வன்னி மாவட்டம் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளது. 06

**20 ஆவது திருத்தத்திற்கு எதிராக உயர்நீதிமன்றில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியினர் மனுத்தாக்கல்** 03

## வடக்கில் விளையாட்டுத் துறையை முன்னேற்ற தேவையான நடவடிக்கை

### நிதி ஒதுக்கீடு உட்பட சகலதும் ஏற்பாடு – அமைச்சர் நாமல்



**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

முல்லைத்தீவு, மன்னார் மாவட்ட விளையாட்டு மைதான நிர்மாணப்பணிகளை பூர்த்தி செய்யவும் வவுனியா, மன்னார், யாழ். மாவட்ட விளையாட்டு பாடசாலைகளை முன்னேற்றவும் தேவையான நடவடிக்கை எடுத்துள்ளதாக இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். இவற்றுக்கு தேவையான நிதியை வரவு 06

## நீர்நிலைகளின் அபிவிருத்திக்கு உதவ நோர்வே தயார் நிலையில்

### டக்ளஸிடம் நோர்வே தூதுவர் தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் பரந்து காணப்படுகின்ற களப்பு நீர் நிலைகளில் நீர் வேளாண்மையை விருத்தி செய்வதற்கு நோர்வே அரசாங்கத்தின் ஆரோக்கியமான பங்களிப்பை எதிர்பார்ப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.



இலங்கைக்கான நோர்வே தூதுவர் றைன் ஜொனார்லி எஸ்கெண்டல் நேற்று கடற்றொழில் 06

### 20க்கு எதிராக

## சம்பந்தனும் மனுத்தாக்கல்



20ஆவது திருத்த வரைபுக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் மனுத்தாக்கல் செய்துள்ளார். ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் விசேட மனு ஒன்றும் மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையம் சார்பாக 06

## பாராளுமன்ற பொதுக் குழுக்களுக்கு தலைவர் தெரிவு தொடர்பில் சர்ச்சை

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**





பாராளுமன்ற பொதுக் குழுக்களுக்கு தலைவர்களை நியமிக்கும் விவகாரம் தொடர்பில் நேற்று பாராளுமன்றத்தில் சர்ச்சை ஏற்பட்டது. குழுக்களின் தலைமை பொறுப்பு எதிரணிக்கு வழங்கப்பட வேண்டுமென எதிரணி கோரியதோடு ஆளும் தரப்பில் அதற்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

பாராளுமன்றம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் கூடியது.

வாய்மூல விடைக்காக ஆளும் தரப்பிற்கும் எதிர்த்தரப்பிற்கும் அவகாசம் வழங்குவது தொடர்பில் 06

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் விசாரணைகள் நிறைவு

### நீதிமன்றுக்கு அறிவித்தது CID

2019 ஏப்ரல் 21 ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத்தில் நடந்த பயங்கரவாத தாக்குதல் சம்பந்தமாக ஆரம்பிக்கப்பட்ட விசாரணைகள் நிறைவடைந்துள்ளதாக குற்றவியல் விசாரணை திணைக்களம் நேற்று நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளது.

இப்பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு, விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே குற்றவியல் விசாரணை திணைக்கள அதிகாரிகள் இதனை தெரிவித்துள்ளனர். விசாரணை அறிக்கை சட்ட மாஅதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். 06

## பெருந்தோட்ட சேவையாளர் காங்கிரஸ் தலைவராக ஜீவன்



பெருந்தோட்டச் சேவையாளர் காங்கிரஸின் தலைவராக இ.தொ.காவின் பொதுச் செயலாளரும், இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இ.தொ.கா. தலைமையகமான சௌமிய பவனில் நேற்று முன்தினம் நடைபெற்ற பெருந்தோட்ட சேவையாளர் காங்கிரஸ் நிர்வாக குழு கூட்டத்தின் போதே இந்நியமனம் வழங்கப்பட்டுள்ளது. 06

## கோபா குழுவின் தலைவராக திஸ்ஸ விதாரண நியமனம்



அரசாங்க கணக்குகள் பற்றிய பாராளுமன்ற குழுவின் (கோபா குழு) தலைவராக லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண நியமிக்கப்பட்டுள்ளார். ஆகஸ்ட் 27 அன்று சமர்ப்பிக்கப்பட்ட ஒரு முன்மொழிவு பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் 22 உறுப்பினர்களைக் கொண்ட கோபா குழு 06

## இனவாத உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்திய சஜித் அணி

### தே.ஐ.மு தலைவர் அஸாத் சாலி கண்டனம்



தேசிய காங்கிரஸ் தலைவரின் பாராளுமன்ற உடை தொடர்பில், சந்தர்ப்பம் பார்த்து கூச்சலிட்டதால், சிலரின் இனவாத உள்ளக் கிடக்கைகளை உலகம் அறிந்துகொள்ள முடிந்துள்ளதாக தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மேல்மாகாண முன்னாள் ஆளுநருமான அஷாத் சாலி தெரிவித்தார்.

பாராளுமன்ற சம்பிரதாயங்களை மீறி, ஆடையணிந்து வந்ததாக தேசிய காங்கிரஸ் தலைவர் மீது எதிர்க்கணைகள் தொடுத்த ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள், சபாநாயகரின் அனுமதியுடன் மீண்டும் 06

## எம்.பிக்களின் பாதுகாப்பிற்கே பொலிஸார்; அவர்களது கோவைகளை தூக்கி செல்வதற்கல்ல

### மக்கள் மீது நம்பிக்கையில்லாதோரே மேலதிக பாதுகாப்பு கோருகின்றனர்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



பாராளுமன்ற உறுப்பினர்களுக்கன்றி பொதுமக்களுக்காக அதிகளவு பொலிசாரை சேவையில் ஈடுபடுத்துவதே அரசாங்கத்தின் நோக்கமென அமைச்சர் சமல் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக வழங்கப்படும் பொலிஸாரின் எண்ணிக்கையை அதிகரிக்க முடியாதென குறிப்பிட்ட அவர் பொது மக்கள் தொடர்பில் நம்பிக்கை இல்லாதவர்களே பொலிஸ் பாதுகாப்பு கோருகின்றனர் என்றும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரன கேள்வி ஒன்றை எழுப்பி பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக 06

## விளையாட்டுத்துறைக்கு பொருத்தமான அமைச்சர்

### நாமலுக்கு சார்ள்ஸ் MP பாராட்டு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**



பொருத்தமான நபருக்கு பொருத்தமான அமைச்சு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் எமது வாழ்த்துகளை தெரிவிப்பதாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

வாய்மூல விடைக்காக விளையாட்டுத்துறை அமைச்சரிடம் கேள்வி எழுப்பிய அவர் இடையீட்டு கேள்வியொன்றை முன்வைக்கையில் 06



சஜித் அணிக்கு வாக்களித்தமைக்காக சிறுபான்மை மக்கள் உண்மையிலேயே பெருமைப்பட வேண்டும்...!

என்ன அப்படி சொல்றீங்க??

பின்ன என்னத்த சொல்ல...? தேசியப்பட்டி–யலில நாமம்,

இப்ப பாராளுமன்றத்துக்குள்ளேயே பரி–காசம், அவர் ஒன்றுமே தெரியாத அப்பாவி மாதிரி ரசிச்சுக் கொண்டிருக்கிறார்... எங்க போய் முடியப் போகுதோ தெரியல..!!

## நாட்டில் ரின்மீன் உற்பத்தி, வர்த்தகம் பாதிப்படைய நல்லாட்சி அரசே காரணம்

### திட்டமிடப்படாத வரிகுறைப்பை ரவி மேற்கொண்டதாக பந்துல குற்றச்சாட்டு

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**




நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் அன்றைய நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க மேற்கொண்ட வரி குறைப்பு காரணமாகவே நாட்டின் ரின் மீன் உற்பத்தி வர்த்தகம் பெரும் பாதிப்படைந்ததென வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு 06

**திலீபனுக்கு நினைவேந்தல் செய்தால் உனக்கு நினைவேந்தல் செய்ய நேரிடும்** 03

## கொழுந்து பறித்துக் கொண்டிருந்த பெண் அருகே மலைப்பாம்பு



**பசறை நிருபர்**

தேயிலை மலையில் கொழுந்து பறிக்கும் பெண் தொழிலாளியின் அருகே 13 அடி நீளமான மலைப்பாம்பொன்று நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

லுணுகலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹொப்டன் தோட்ட பழைய ஸ்டோர் பிரிவில் 13 அடி நீளமும் 36 கிலோ எடைகொண்ட மலைப்பாம்பொன்றையே நேற்று (23) பிடித்துள்ளனர். 06

## முகமாலையில் மீட்கப்பட்டது பெண் புலியின் எலும்புக்கூடு

### அடையாள இலக்கத் தகடுகளும் சிக்கியது



முகமாலை முன்னரங்கில் மீட்கப்பட்ட எலும்புக்கூடு முன்னாள் பெண் போராளி ஒருவருடையதென அடையாளம் காணப்பட்டுள்ளது. கிளிநொச்சி முகமாலை பகுதியை பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்பு செய்து வந்த நிலையில் நேற்றைய தினம் 06

# புத்தாக்கத்துறையில் சிறந்து விளங்கும் நாட்டை உருவாக்குவதாக ஜனாதிபதி உறுதி

## உயர் கல்வி சட்ட திருத்தத்திற்கு நடவடிக்கை

புத்தாக்கத் துறையில் உலகில் சிறந்து விளங்கும் நாட்டை உருவாக்குவதற்கான சூழலை ஏற்படுத்துவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைகளின் கேள்விக்கு ஏற்ற வகையில் சர்வதேச தரம் வாய்ந்த வினைத்திறன்மிக்க தொழில்நுட்ப வல்லுனர்களை உருவாக்குவது முக்கிய தேவையாகும் என்றும் ஜனாதிபதி அவர்கள் மேலும் தெரிவித்தார். சாதாரண தரம் அல்லது உயர் தரத்தில் சித்தியடைந்த, சித்தியடையாத அனைவருக்கும் தொழில்நுட்பம் மற்றும் தொழில்ற் கல்வியை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தை குறுகிய காலத்தில் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் பற்றியும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.





திறன்விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி, புத்தாக்கத் துறை இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக (22) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

பொருளாதாரத்திற்கேற்ற வகையில் இளைஞர் தலைமுறையை கல்வித் துறையில் ஈடுபடுத்துவதன் அவசியம் குறித்து விளக்கிய ஜனாதிபதி அவர்கள், கலை பாடங்களை கற்கும் மாணவர்களுக்கு தகவல் தொழில்நுட்பம், தாதி மற்றும் முகாமைத்துவம் உள்ளிட்ட பல துறைகளில் திறமைகளை வளர்த்துக்கொள்ள



முடியுமென்றும் குறிப்பிட்டார். ஆராய்ச்சி துறையை ஊக்குவிப்பதற்கு அரசு என்ற வகையில் அனைத்து உதவிகளையும் வழங்குவதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். புத்தாக்க நடவடிக்கைகளுக்கு உதவுவதற்கு ஆலோசனை மற்றும் சேவைகளை வழங்குவதை ஒரே நிறுவனத்தின் கீழ் கொண்டு வர உள்ளதாக இராஜாங்க அமைச்சர் டொக்டர் சீத்தா அரம்பேபொல குறிப்பிட்டார்.

கோள் மண்டலத்தை தற்காலத்திற்கு பொருத்தமான வகையில் நவீனமயப்படுத்தவும் நனோ தொழில்நுட்ப நிறுவனம் (SLINTEC) மற்றும் உயிர் தொழில்நுட்ப பூங்கா ஆகிய இரண்டையும் ஒரே வளாகத்தில் தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை இராஜாங்க அமைச்சர் சீத்தா அரம்பேபொல சுட்டிக்காட்டினார்.

தேசிய அடிப்படை (NIFS) நிறுவனம் மற்றும் நனோ தொழில்நுட்ப நிறுவனம் இணைந்து ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்துறைகளில் ஈடுபட வேண்டியதன் அவசியம் பற்றி ஜனாதிபதி தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்கள், தொழிற் கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் பாடத்திட்டங்கள் மற்றும் கலைத்திட்டங்களை தற்காலத்திற்கு ஏற்ற வகையில் அறிமுகப்படுத்துவதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

உயர் கல்வி சட்ட திருத்தத்தின் மூலம் நிறுவன மற்றும் கலைத்திட்டம் தொடர்பில் உள்ள பல பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்க முடியுமென நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.

தொழில்நுட்ப பாடங்களுக்கான ஆசிரியர்கள் மற்றும் ஆலோசகர்களை இணைத்துக் கொள்ளும் போது குறைந்த மட்டத்தில் இருக்கும் சம்பள திட்டங்கள் பெரிதும் பாதிப்பு செலுத்துவதாக நிறுவன தலைவர்கள் தெரிவித்தனர்.

சமுத்திர பொருளாதாரத்தின் விளைவுகளை பெற்றுக்கொள்வதற்கு மீனவ சமூகங்களிடம் சென்று தொழில்நுட்ப அறிவு மற்றும் பயிற்சியை வழங்குவதற்கு சமுத்திர பல்கலைக்கழகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொருளாதார புத்தெழுச்சிக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பெசில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஜனாதிபதியின் செயலாளர் பீ.பி. ஜயசுந்தர, அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள், துறைசார் அமைச்சுக்களின் தலைவர்கள் மற்றும் நிபுணர்கள் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

---

களனிதிஸ்ஸ மின் உற்பத்தியை

## இயங்குநிலைக்கு கொண்டுவர துரித நடவடிக்கை

மர்லின் மரிக்கார்



இயந்திர கோளாறு காரணமாக செயலிழந்துள்ள இலங்கை மின்சார சபையின் கீழுள்ள களனிதிஸ்ஸ மின்சார உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகளை மீண்டும் இயங்கு நிலைக்கு கொண்டு வருவதற்கான துரித நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மின்சக்தி அமைச்சர் டளஸ் அழகப்பெரும பணிப்புரை விடுத்துள்ளார்.

களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக விஜயம் செய்த அமைச்சர் டளஸ் அழகப்பெரும இந்நிலையத்தை விரைவாக இயங்குநிலைக்கு கொண்டு வருவதற்கு தேவையான ஆலோசனைகளை அதிகாரிகளுக்கு வழங்கியுள்ளார்.

இலங்கை மின்சார சபையின் கீழுள்ள களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையம் 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் செயலிழந்துள்ளது. அதனை மீண்டும் இயங்குநிலைக்கு கொண்டு வருவதன் ஊடாக 165 மெகாவார்ட் மின் சக்தியை தேசிய மின்கட்டமைப்புக்கு பெற்றுக்கொள்ள முடியும். இது தொடர்பில் விஷேட கவனம் செலுத்தியுள்ள அமைச்சர் அதற்குத் தேவையான நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்குமாறும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையத்தில் சில இயந்திர பாகங்கள் செயலிழந்துள்ளதால் அவை திருத்தியமைக்கப்படுவதற்காக ஏற்கனவே இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

என்றாலும் உலகளாவிய ரீதியாக பரவும் கொரோனா தொற்று காரணமாக அவற்றை நாட்டுக்கு மீண்டும் கொண்டுவர முடியாத இக்கட்டான நிலைமை ஏற்பட்டிருப்பதாக அதிகாரிகள் இச்சமயம் சுட்டிக்காட்டினர்.

இது தொடர்பில் இந்திய அரசாங்கத்துடன் கலந்தாலோசித்து அவ்வியந்திர பாகங்களை விரைவாக நாட்டுக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிட்ட அமைச்சர், இந்நிலையத்தின் மின் உற்பத்தி நடவடிக்கைகளை மீண்டும் விரைவாக ஆரம்பிப்பதே தமது இலக்கு என்றும் குறிப்பிட்டார்.

---

## கைத்துப்பாக்கியுடன் முன்னாள் கடற்படை வீரர் கைது

மாவத்தகம தினகரன் நிருபர்

கடற்படையிலிருந்து விலக்கப்பட்ட படைவீரரின் இல்லத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைதுப்பாக்கியுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடற்படையில் இருந்து விலக்கப்பட்ட படைவீரரின் உருலேமுல்ல பிரதேசத்திலுள்ள வீட்டில் சோதனையிட்ட போதே அங்கு வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத் துப்பாக்கி மற்றும் அதற்குப் பயன்படுத்தக் கூடிய 4 ரவைகள் கைப்பற்றியதாக அளவ்வ பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்தக் கடற்படை வீரர் கடற்படையினரால் மிக நீண்ட காலத்திற்கு முன்னர் விலக்கப்பட்டவராவர். அவர் கடற்படையில் சேவையாற்றும் போது அங்கிருந்து கொண்டு வந்து மறைத்து வைத்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து உருலேமுல்லயிலுள்ள படைவீரரின் இல்லத்தை பரிசோதனையிட்ட போது வீட்டின் அலுமாரியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கைத்துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கைத்துப்பாக்கி எப்படிக் கிடைத்தது. இந்த துப்பாக்கியின் மூலம் விளைவிக்கப்பட்ட குற்றச் செயல்கள் என்ன என்கின்ற உண்மை நிலையை அறிந்து கொள்வதற்கான மேலதிக விசேட விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அளவ்வ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டியூட்டர் அபேவிக்கிரமவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது பயன்படுத்திய பொருட்களுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

---

## நல்லாட்சியில் 76 நாடுகளில் இருந்து மீன் இறக்குமதி

லோரன்ஸ் செல்வநாயகம்,ஷம்ஸ் பாஹிம்

2015 முதல் 2019 வரையான நல்லாட்சி காலப்பகுதியில் 76 நாடுகளில் இருந்து 38 பில்லியன் ரூபா பெறுமதியான மீன்கள் இறக்குமதி செய்யப்பட்டதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வாய்மூல விடைக்காக மொஹமட் முஸம்மில் எம்.பி எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலே அமைச்சர் இதனை கூறினார்.

2015/2019 காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட மீன் குறித்தும் அதற்கு அனுமதி வழங்கிய கம்பனிகள் குறித்தும் அவர் வினவியிருந்தார்.

மாலைதீவு, பிரான்ஸ், பிரிட்டன், சுவிட்சர்லாந்து உட்பட 76 நாடுகளில் இருந்து கடந்த 4 வருடத்தில் மீன் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. உள்நாட்டில் உற்பத்தி செய்யக் கூடியவற்றின் இறக்குமதியை மட்டுப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. உள்நாட்டு மீன் உற்பத்தியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

---

'மலையக மக்களின் வாழ்க்கை'

## கொழும்பில் புகைப்பட கண்காட்சி 26, 27ஆம் திகதிகளில்

மலையக மக்களின் வாழ்கையை காட்சிப்படுத்தும் புகைப்பட கண்காட்சியொன்று எதிர்வரும் 26,27ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது.

மாற்றுக் கொள்கைகளுக்கான மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தக் கண்காட்சியில் 40 மலையக இளைஞர், யுவதிகளால் வரையப்பட்ட மலையக மக்களின் வாழ்வியலை சித்தரிக்கும் 100 புகைப்படங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

26,27ஆம் திகதிகளில் காலை 10 மணிமுதல் மாலை 06 மணிவரை கொழும்பு 07, லயனல் வென்ட கலை நிலையத்தில் கண்காட்சி நடைபெறவுள்ளது.



மருந்து பொருட்கள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன கொழும்பு, மருதானையிலுள்ள பிரதான மருந்துபொருள் களஞ்சியசாலைக்கு நேரில் விஜயம் செய்து மருந்துப்பொருட்களையும் களஞ்சியசாலை வசதிகளையும் பார்வையிட்ட போது பிடிக்கப்பட்ட படம். இச்சமயம் மருந்து பொருட்கள் விநியோகப் பிரிவு பணிப்பாளர் கபில விக்ரமநாயக்க, பிரதிப் பணிப்பாளர் ஏ.ரி. சுதர்ஷன உட்பட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டிருப்பதையும் படத்தில் காணலாம்.

---

## ஷானி அபேசேகரவுக்கு அரசியல் பழிவாங்கல் ஆணைக்குழுவில் ஆஜராக அறிவித்தல்

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவை அரசியல் பழிவாங்கல் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 28 ஆம் திகதி அவரை ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடற்படை புலனாய்வு பிரிவின் கனிஸ்ட அதிகாரி காமினி செனவிரத்ன மற்றும் பிரதம கனிஸ்ட அதிகாரி கே.பி.சமிந்த ஆகியோர் முன்வைத்த முறைப்பாட்டுக்கமையவே ஆணைக்குழு அவருக்கு அழைப்பு விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கடந்த 2006 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பில் தமக்கு எதிராக மனிதப் படுகொலை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இருவரும் ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளனர்.

இந்த முறைப்பாட்டை ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுப்பெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர் உபாலி அபேரத்ன, சானி அபேசேகர உள்ளிட்ட இருவரை எதிர்வரும் 28 ஆம் திகதி ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு அறிவித்துள்ளார்.

2020 செப்டெம்பர் 24 வியாழக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

**தொழுகை நேரம்**

| | |
|---|---|
| சுபஹ் | 04.44 |
| லுஹர் | 12.04 |
| அஸர் | 03.16 |
| மஃரிப் | 06.07 |
| இஷா | 07.17 |

**இன்றைய சுபதினம்**

சார்வரி வருடம் புரட்டாசி 08

ராகுகாலம் : பகல் : 01.30 – 03.00 வரை
சுபநேரம் : காலை : 10.30 – 12.00 வரை

யோகம்: சித்த யோகம்

நட்சத்திரம்: மூலம் இரவு 11.56 வரை

திதி: அஷ்டமி

தினகரன் விளம்பரம் 0112429367 விற்பனை பிரிவு 0112429444, 0112429378 ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

# 5,000 மெ.தொன் உள்ளூர் உளுந்து உற்பத்தியை 25,000 மெ.தொன்னாக அதிகரிக்க தீர்மானம்

## பசில் ராஜபக்ஷ தலைமையில் ஆராய்வு

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**



உள்ளூரில் உற்பத்தியாகும் உளுந்தை பயன்படுத்துவதன் மூலம் உள்நாட்டு உற்பத்தியை வலுப்படுத்த முடியும் என்பதுடன், அந்நிய செலாவணியை உள்நாட்டுக்குள் தக்கவைத்துக் கொள்ள முடியுமென பொருளாதார புத்துணர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பலசரக்குத்தூள் மற்றும் அப்பளம் உற்பத்தியாளர்களுடன் நேற்றுமுன்தினம் அலரிமாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

சந்தையில் உளுந்து பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் சிறிய மற்றும் நடுத்தர பலசரக்குத்தூள் உற்பத்தியாளர்கள் பாரிய சிக்கல்களை எதிர்கொண்டுள்ளதாக அப்பளம் மற்றும் பலசரக்குத்தூள் உற்பத்தியாளர்கள் இதன்போது சுட்டிக்காட்டினர்.

இறக்குமதி செய்யப்பட்ட உளுந்து மாவின் விலை சுமார் 800 ரூபாவாக உள்ளதுடன், சுத்திகரிக்கப்பட்ட உள்ளூர் உளுந்து ஒரு கிலோவின் விலை 1,300 ரூபாவாக உள்ளது. இதன் விளைவாக, நுகர்வோர் உள்ளூர் உளுந்தை பயன்படுத்துவதைவிட இறக்குமதி செய்யப்பட்ட உளுந்தை உட்கொள்வதை நோக்கி நகர்ந்துள்ளனர்.

20,000 மெ. தொன் உளுந்து நாட்டின் மொத்த தேவையாகவுள்ள போதிலும் தற்போது 06

# 20 ஆவது திருத்தத்திற்கு எதிராக உயர்நீதிமன்றில் ஐ.ம.ச. மனுத்தாக்கல்

## ரஞ்சித் மத்தும பண்டாரவினால் நேற்று சமர்ப்பிப்பு

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்துக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி, உயர் நீதிமன்றத்தில் நேற்று மனுவொன்றை தாக்கல் செய்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் கட்சியின் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார நேற்று இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்தில் சில சரத்துகள் அரசியலமைப்புக்கு முரணானதென அறிவிக்குமாறு மனுவில் கோரப்பட்டுள்ளது.

திருத்தத்தை நிறைவேற்றுவதாக இருந்தால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மற்றும் மக்கள் கருத்துக்கணிப்பு அவசியமென அறிவிக்குமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

இதேவேளை, 20 ஆவது திருத்த சட்டமூலத்தை ஆட்சேபனைக்கு உட்படுத்தி சட்டத்தரணி இந்திக கால்லகே (22) உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்றையும் தாக்கல் செய்திருந்தார்.

சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சில திருத்தங்கள், இலங்கை அரசியலமைப்பிற்கு முரணாகக் காணப்படுவதுடன், அவை நிறைவேற்றப்பட்டால் மக்களின் இறையாண்மைக்கு பாரிய தீங்கு ஏற்படுமென மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படாது, பொதுமக்கள் அபிப்பிராயத்துடன் திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட வேண்டுமென உத்தரவிடுமாறு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## நாணயமாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 128.99 | 135.14 |
| கனடியன் டொலர் | 136.32 | 141.80 |
| யூரோ | 212.61 | 220.13 |
| ஜப்பான் யென் | 1.725 | 1.800 |
| சிங்கப்பூர் டொலர் | 132.86 | 138.14 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 231.86 | 239.57 |
| சுவிஸ் பிராங்க் | 197.18 | 204.85 |
| அமெரிக்க டொலர் | 182.97 | 187.33 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 494.94 |
| குவைத் டினார் | 609.47 |
| ஓமான் ரியால் | 484.76 |
| கட்டார் ரியால் | 51.27 |
| சவூதி ரியால் | 49.77 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.82 |



இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேவிட் மெகினன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமை தமது உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று சந்தித்து கலந்துரையாடியதோடு, மதிய விருந்துபசாரமும் அளித்தார்.

### 13 ஆவது திருத்தச் சட்டம்

# அரசியல் தேவைகளுக்காக சிலர் குழப்பம் விளைவிப்பு

## பாராளுமன்றில் அமைச்சர் டக்ளஸ் சாடல்

**லோரன்ஸ் செல்வநாயகம், ஷம்ஸ் பாஹிம்**

13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக ஒவ்வொருவரும் தங்களது அரசியல் தேவைகளுக்காக பல்வேறு கருத்துக்களை முன்வைத்து குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றனரென குற்றஞ்சாட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இவ் விடயத்தில் அரசாங்கம் இதுவரை எந்தவிதமான தீர்மானங்களையும் மேற்கொள்ளவில்லையெனவும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயற்பாடு தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மாகாண சபை முறைமை எமக்குக் கிடைத்திருந்த காலந்தொட்டு, அதனை எமது மக்கள் நலன் சார்ந்து செயற்படுத்தியிருந்தால், இன்று எமது மக்களின் அனைத்துப் பிரச்சினைகளும் முடிந்தவரையில் தீர்க்கப்பட்டிருக்குமென்பதை தான் தொடர்ச்சியாக தெரிவித்து வருவதாகவும், எனினும் இந்த அதிகாரத்தைப் பெற்றவர்களும், அபகரித்துக் கொண்டவர்களும் அதனை ஒழுங்குற செயற்படுத்தியிருக்கவில்லையெனவும் அமைச்சர் குற்றஞ்சாட்டினார்.

அத்துடன், தேர்தல்கள் ஆணைக்குழு பற்றி கருத்து தெரிவித்த அமைச்சர், 06

# அரசாங்க அதிகாரிகளை தாக்கிய தேரருக்கு நீதிமன்ற அழைப்பாணை

## செப்.30க்கு முன் பொலிஸில் வாக்குமூலமளிக்க பணிப்பு

அரச அதிகாரிகளின் கடமைக்கு தடை ஏற்படுத்தி, இடையூறு விளைவித்தமை தொடர்பில் மட்டக்களப்பு மங்களராமய விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்தன தேரருக்கு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பொலிஸ் நிலையத்திலோ அல்லது நீதிமன்றத்திலோ ஆஜராகி வாக்குமூலம் வழங்க வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு கரடியனாறு பகுதியில் தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த விஹாரை அமைந்துள்ள இடத்தின் ஒரு சிறிய பகுதியில் சிலர் விவசாய நடவடிக்கையை முன்னெடுப்பதாக அம்பிட்டிய சுமணரத்தன தேரர் தனது முகப்புத்தகத்தின் ஊடாக காணொளி ஒன்றை வெளியிட்டு தெரிவித்திருந்தார்.

அதன் பின்னர் அந்த பகுதிக்கு நேற்று நில அளவையாளர்கள் வருகைத் தந்து அளவீடுகளை முன்னெடுத்த போது அதற்கு அம்பிட்டிய சுமணரத்தன தேரர் எதிர்ப்பை வெளியிட்டிருந்தார்.

தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் உரிய முறையில் அளவை நடவடிக்கையை முன்னெடுக்கவில்லையென தெரிவித்தே தேரர் எதிர்ப்பை தெரிவித்திருந்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளை 06

# இ.தே.தோ.தொழிலாளர் சங்க உத்தியோகபூர்வ பொது செயலாளராக வடிவேல் சுரேஷ்

## நீதிமன்ற தீர்ப்பையடுத்து நேற்று பதவியேற்பு

**கொழும்பு கோட்டை தினகரன் நிருபர்**

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் உத்தியோகபூர்வ பொதுச் செயலாளராக வடிவேல் சுரேஷ் நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைமைப் பீடத்தில் அண்மைக்காலமாக நிலவிவந்த குழறுபடிகளையடுத்து நேற்று கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்த நிலையில் இலங்கை தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளராக பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷும் சங்கத்தின் தலைவராக ஹரின் பெர்ணான்டோ ஆகியோர் வழமை போன்று தொடர்ந்தும் தலைமைப்பதவிகளை வகிக்க முடியுமெனவும், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் அனைத்து உத்தியோகபூர்வ நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நீதிமன்ற தீர்ப்பையடுத்து இராஜகிரியவிலுள்ள இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைமைக் அலுவலகமான தொழிலாளர் இல்லத்திற்கு வருகை தந்த சங்கத்தின் பொதுச் செயலாளர் வடிவேல் சுரேஷ் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

கடந்த குறுகிய காலமாக இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைமைப் பீடத்திலும் சங்கத்தின் உத்தியோகபூர்வ செயற்பாடுகளுக்கும் ஏற்பட்டிருந்த பிணக்குக்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பை வழங்கியுள்ளது. அதன் அடிப்படையில் சங்கத்தின் தலைவராக ஹரின் பெர்ணான்டோவும் பொதுச் செயலாளராக வடிவேல் சுரேஷ் ஆகிய நானும் தொடர்ந்து செயற்படுவோம்.

# தினகரன் நிருபர் இர்பான் ஸக்கரியாவின் தாயார் காலமானார்

தினகரன் பத்திரிகையின் ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர் இர்பான் ஸக்கரியாவின் தாயார் எம். ரஸீனா ஸக்கரியா நேற்று (23) காலமானார்.

ஐந்து பிள்ளைகளின் தாயாரான இவர் இறக்கும் போது வயது 70. அன்னாரின் ஜனாஸா இன்று 24 காலை 08 மணிக்கு ஹம்பாந்தோட்டை புதிய பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்படும்.

# சிஹாரா ஹலால்டீன் எழுதிய இருநூல்களின் வெளியீடு

ரோயல் கல்வி நிலையத்தின் பிரபல ஆங்கில ஆசிரியையான சிஹாரா ஹலால்டீன் எழுதிய 'ஆங்கில செயல்முறைப் பாடப் புத்தகமும்', 'ஆங்கில இலக்கணமும் மாணவர் வழிகாட்டி' ஆகிய இருநூல்களின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் 26ஆம் திகதி சனிக்கிழமை மாலை 03.30 மணிக்கு கொழும்பு, தேசிய நூலக ஆய்வுமையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம அதிதியாக சர்வதேச லயன் கழகத்தின் முன்னாள் தலைவர் லயன் மஹிந்த அமரசூரிய கலந்து கொள்வதுடன் இந் நூல்களின் முதற்பிரதியை டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசீம் உமர் பெற்றுக் கொள்வார்.



ஊடகவியலாளர் ஷங்க அமரஜித்தின் ஊடக அனுபவங்களை மையமாகக்கொண்டு அவரால் எழுதப்பட்ட 'WEDAKATA NETHI POTHA' (பயனற்ற புத்தகம்) என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. நூலாசிரியர் ஷங்க நூலை வெளிட்டு வைத்த பின் தனது கையெழுத்திட்டு வழங்கிய போது. (படம் துஷார பெர்னாண்டோ)

### கிழக்கில் தமது கட்சிக்காரரை பொலிஸார் மிரட்டினராம்

# திலீபனுக்கு நினைவேந்தல் செய்தால் உனக்கு நினைவேந்தல் செய்ய நேரிடும்

## பாராளுமன்றத்தில் கஜேந்திரன் எம்.பி சுட்டிக்காட்டி உரை

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரதேச சபை உறுப்பினர் குணராசா குணசேகரன் என்பவரை மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி ஒருவர், அழைத்து, “திலீபனுக்கு நினைவேந்தல் செய்தால் உனக்கு நினைவேந்தல் செய்வதற்கு எவரும் இருக்கமாட்டார்கள்” என்று அச்சுறுத்தியிருப்பதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

"வடக்கு, கிழக்கில் எங்கள் உரிமைக்காக உயிர் நீத்தவர்களை நினைவுகூர முடியாதென்று நீதிமன்றம் கட்டளையிட்டிருக்கின்றது.

அதேபோன்று வவுனியா வடக்கு நெடுங்கேணியிலே வெடுக்குநாறி சிவன் ஆலயத்தில் திருவிழா நடத்துவதற்கு நிர்வாகம் முயன்றபோது பொலிஸார் வலிந்து சென்று அதனைத் தடை செய்யுமாறு வழக்குத் தாக்கல் செய்தனர். திருவிழாவை நடத்த முடியும் அதனைத் தடுக்கமுடியாது என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால், நீதிமன்றத்தின் கட்டளையை மீறி நெடுங்கேணி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் திருவிழாவை நடத்தவிடாது குழப்பிக் கொண்டே இருக்கின்றனர். ஆனால், எங்களுடைய நினைவேந்தல் விடயத்தில், நீதிமன்றம் சொன்னதை அவ்வாறே கடைப்பிடித்து வீடுகளில் சாமிக்குக் கூடப் பூவைக்க முடியாத அளவுக்குப் பொலிஸாரின் கெடுபிடிகள் உச்ச அளவில் நடைபெற்று வருகின்றன. 06

# மாணவி மர்ம மரணம்; சடலம் கட்டிலின் கீழிலிருந்து மீட்பு

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**



பலாங்கொடை ஒழுகன்தொட்ட பிரதேசத்தில் 16 வயது மாணவி வீட்டின் கட்டிலுக்கு கீழிருந்து (22) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பலாங்கொடை இந்து கல்லூரியில் கல்வி கற்று வந்த பலாங்கொடை ஒழுகன்தொட்ட பிரதேசத்தை சேர்ந்த மாணவியான கே.லோசினியே (வயது 16) என்ற மாணவியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,

வீட்டில் தனது மகள் மட்டும் இருந்ததாகவும் தாய் வெளியில் சென்றுவிட்டு வீட்டுக்கு வந்தபோது தனது மகளை காணவில்லையென்று தேடியபோது வீட்டின் கட்டிலுக்கு கீழ் சுயநினைவின்றி கிடந்ததை 06

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் புரட்டாதி மாதம் 08ம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 சபர் பிறை 06

### குறள் தரும் சிந்தனை



தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது

தம் பிள்ளைகள் அறிவு மிக்கவராக இருப்பது, தம்மைக் காட்டிலும் இப்பெரிய பூமியில் அழியாமல் தொடரும் உயிர்களுக்கு எல்லாம் இனிது.

# வடக்கின் அபிவிருத்திக்கு தடை போடுவது முறையல்ல

நாட்டில் மூன்று தசாப்த காலமாக நீடித்த உள்நாட்டு யுத்தத்தின் விளைவாக வடமாகாணம் ஏனைய மாகாணங்களை விடவும் உட்கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட எல்லா அபிவிருத்திகளிலும் பின்னடைந்து காணப்படுகின்றது. இதன் விளைவாக யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதைத் தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் வடமாகாணத்தை ஏனைய மாகாணங்களைப் போன்று மீளக்கட்டியெழுப்பி அபிவிருத்தி செய்வதற்கான பரந்த அடிப்படையிலான நடவடிக்கைகளை முன்னெடுத்தது.

என்றாலும் 2015 இல் நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து அந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் தடைப்பட்டன. இந்த நிலையில் 2019 நவம்பரில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் பதவிக்கு வந்ததைத் தொடர்ந்து ஏனைய மாகாணங்களைப் போன்று வடமாகாணத்தையும் அபிவிருத்தி செய்வதில் விசேட கவனம் செலுத்தப்பட்டிருப்பதோடு நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் வடக்கை துரிதமாகக் கட்டியெழுப்ப முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்ததைப் போன்று, மீண்டும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு செயற்படுவதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்திருக்கிறார்.

கரைச்சி பிரதேச செயலகத்தின் அனுமதி பெறாமல் சட்டவிரோதமாக நிலம் அபகரிக்கப்பட்டு கிளிநொச்சி நகரில் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு (ச.தொ.ச) கட்டடமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு த.தே. கூ. யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் பாராளுமன்றத்தில் எழுப்பியிருந்த கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தக் கட்டடத்தை நகர அபிவிருத்தி அதிகார சபை நிர்மாணித்திருக்கின்றது. அதற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கேற்ப இக்கட்டடம் அமைக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக வடக்கு மக்களின் பொருளாதார முன்னேற்றம் கருதி இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. அதேநேரம், இக்கட்டடத்தின் ஊடாக அத்தியாவசியப் பொருட்களை நியாய விலையில் வடக்கு மக்களால் பெற்றுக் கொள்ள வாய்ப்பு கிடைக்கப் பெறும். அத்தோடு வடக்கு மக்களின் உற்பத்திகளை சந்தைப்படுத்தவும் இந்நிலையம் வாய்ப்பாக அமையும். இந்த ஏற்பாடுகள் வடக்கின் வறிய மக்களுக்கு பெரும் நிவாரணமாகவும் விளங்கும்.

இருந்த போதிலும் சிறிதரன் எம்.பியின் இக்கூற்று வடபகுதி மக்களின் நன்மை கருதி அரசாங்கம் முன்னெடுக்கும் நடவடிக்கைகளை தடுப்பதற்கான முயற்சியா? என்ற கேள்வியையும் ஏற்படுத்தியிருக்கிறது.

உட்கட்டமைப்பு உள்ளிட்ட எல்லா அபிவிருத்திகளிலும் ஏனைய மாகாணங்களைப் போன்று வடமாகாணமும் அபிவிருத்தி அடைய வேண்டும். அதுவே வடபகுதி மக்களின் எதிர்பார்ப்பு ஆகும். வடமாகாணமும் இந்த நாட்டின் ஒரு பகுதியே. அதனால் முழு நாடும் ஏற்றதாழ்வுகள் இன்றி அபிவிருத்தி அடைய வேண்டும். அதனால் வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு அரசியல் பேதங்களுக்கு அப்பால் ஒத்துழைப்பு நல்கப்படுவது மிக அவசியம். இதில் மக்கள் பிரதிநிதிகளும் கவனம் செலுத்த வேண்டும்.

ஏனெனில் வடபகுதி மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் தமது அபிவிருத்தி ஆதங்கத்தை வெளிப்படுத்தி இருப்பதையும் மறந்து விட முடியாது. இது தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வாக்கு வங்கியில் பெரும் சரிவு ஏற்பட காரணமாக அமைந்திருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அதனால், மக்களின் தேவையையும் எதிர்பார்ப்பையும் கருத்தில் கொண்டு செயற்படவேண்டிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளுக்கு உரியதாகும். வடமாகாணம் ஏனைய மாகாணங்களைப் போன்று சம அபிவிருத்தியைப் பெற்று அங்குள்ள மக்களின் வாழ்வில் சுபீட்சமும் முன்னேற்றமும் ஏற்பட வேண்டும்.

கரைச்சி பிரதேச செயலகத்திற்குட்பட்ட காணியில் நகர அபிவிருத்தி அதிகார சபை கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு கட்டடத்தை நிர்மாணித்தாலும், அக்கட்டடத்தின் ஊடான சேவைகள் வடக்கு மக்களுக்கே சென்றடையவிருக்கின்றன. அந்த சேவைகள் வட மாகாண மக்களுக்கு பெரும் நிவாரணமாகவும் சலுகையாகவும் அமையும். இது மக்கள் நலன் சார்ந்த நடவடிக்கை என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆகவே மக்களின் நலன்களை முன்னிறுத்தி அரசாங்கம் முன்னெடுக்கும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு முன்வர வேண்டும். அது தமக்கு வாக்களித்துள்ள மக்களுக்கு செய்யும் பாரிய சேவையாகவும் அமையும்.

editor.tkn@lakehouse.lk

# நாட்டைச் சூழவுள்ள கடற்கரையை தூய்மைப்படுத்தும் திட்டம் ஆரம்பம்

## தேசிய கடலோர பாதுகாப்பு வாரம்







சர்வதேச கடற்கரை தூய்மைப்படுத்தல் தினத்துடன் இணைந்ததாக, இலங்கையைச் சூழவுள்ள கரையோரப் பகுதியை துப்புரவு செய்யும் நடவடிக்கைகள் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலின் பேரில் மேற்கொள்ளப்பட்டன.

அதன்படி நாடு முழுவதும் 1,700 கி.மீ நீளமுள்ள கடற்கரையோரம் தூய்மைப்படுத்தப்பட்டது.

பிரதமரின் ஆதரவின் கீழ் கடந்த 19 ஆம் திகதி கல்கிசை கடற்கரையில் கடற்கரை தூய்மைப்படுத்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து வாரம் முழுவதும் நாட்டின் கடற்கரையோரமெங்கும் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாட்டின் பிற பகுதிகளைப் போலவே வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் கடற்கரையை துப்புரவு செய்யும் பணிகளில் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பாடசாலை மாணவர்கள், உள்ளூர் மக்கள் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் கடற்கரையில் யாழ் புங்குடுதீவு கடற்கரையை சுத்தம் செய்யும் வைபவம் கடந்த 22ம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிபிள்ளை மகேசன் கலந்து கொண்டார்.

இந்தியாவில் இருந்து வந்து கரையொதுங்கும் குப்பைகளால் யாழ்ப்பாணக் கடற்கரை மாசுபடுகிறது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல் தூரம் 19 கி.மீ ஆக இருப்பதே இதற்குக் காரணம் ஆகும். இந்தியாவில் கொட்டப்படும் குப்பைகளில் பெரும்பாலானவை பிளாஸ்டிக் போத்தல்கள் ஆகும். அவை இலங்கையில் வந்து கரையொதுங்குகின்றன.

பூமியின் மேற்பரப்பில் 70 வீதம் கடலால் சூழப்பட்டுள்ளது. உலகளாவிய நீர் மூலத்தில் 97 சதவீதம் கடல்நீர் ஆகும். மீதமுள்ள 3 சதவீத நீர் மட்டுமே பனிப்பாறைகள், ஆறுகள், நீரோடைகள், நீர்த்தேக்கங்கள், மண்நீர் போன்றவற்றில் காணப்படுகின்றது.

கடலோர மண்டலம் கடலில் இருந்து நிலம் வரை 300 மீற்றர் வரையும், கடல் மண்டலம் கடற்கரையிலிருந்து கடல் வரை 200 கடல் மைல் வரை நீண்டுள்ளது. மனித நடவடிக்கைகள் காரணமாக இலங்கையின் கடற்கரைகள் மற்றும் பெருங்கடல்கள் மாசுபடுகின்றன. இது சுற்றுச்சூழல் மற்றும் சமூக பொருளாதார சிக்கல்களை உருவாக்கியுள்ளது. நில மாசுபாடு பற்றி நாம் அடிக்கடி பேசினாலும், கடல் மாசுபாடு குறித்து நாம் சிறிதளவே கவனம் செலுத்துகிறோம். ஆனால் நில மாசுபாட்டின் இறுதி முடிவு கடல் சூழலை மாசுபடுத்துவதாகும்.

கடல் மாசுபாட்டில் 90 சதவீதம் நிலப்பரப்பு மாசுபாட்டால் ஏற்படுகிறது. நில நடவடிக்கைகளால் உருவாகும் கழிவுகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ கடல் சூழலில் சேர்க்கப்படுகின்றன. அதே நேரத்தில் ஆறுகள் போன்ற நிலத்தை அடிப்படையாகக் கொண்ட இடங்களில் இருந்து மறைமுகமாக கழிவுகள் கடலுக்குள் செல்கின்றன.

கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை என்பது இலங்கையில் 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கடல் மாசு தடுப்பு, தணிப்பு மற்றும் கடல் மாசுபாட்டைக் கட்டுப்படுத்தும் சட்டத்தால் நிறுவப்பட்ட ஒரு நிறுவனம் ஆகும். தற்போது, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் கீழ் உள்ள கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை கடல் மாசுபாட்டைத் தடுக்க பல்வேறு செயல்பாடுகளையும் திட்டங்களையும் செயல்படுத்துகிறது.

## பிரதமரின் அறிவுறுத்தலின் பேரில் துப்புரவுப் பணிகள்

கடல் சூழலில் காணப்படும் திண்மக் கழிவுகள் கடல் கழிவுகள் என்று அழைக்கப்படுகின்றன. இவை நீண்ட காலமாக சிதைவதில்லை மற்றும் கடல் சூழலில் கலந்து இருக்கும். பல கடல் கழிவுகளின் சிதைவு காலங்கள் கீழே உள்ள அட்டவணையில் உள்ளவாறு காட்டப்பட்டுள்ளன. கடல் கழிவு வகைகள் கரையும் காலம் இவையாகும்.

புகைபிடித்தல் துண்டு 10_ 12 ஆண்டுகளுக்குப் பிறகு, இறப்பர் காலணி 50_ 80 ஆண்டுகள்,

அலுமினிய கொள்கலன்கள் 200 ஆண்டுகள், பிளாஸ்டிக் போத்தல்கள் 450 ஆண்டுகள்,

கண்ணாடி 1_ 2 மில்லியன் ஆண்டுகள்.

கடல் மாசுறல் பற்றி மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக 'ஓசின் கொன்வென்சி' என்னும் அரச சார்பற்ற நிறுவனத்தின் தலைமைத்துவத்தின் கீழ் 1986 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் டெக்சாஸ் கடற்கரையில் சுமார் 2,800 தன்னார்வலர்களால் இந்த தூய்மைபடுத்தல் நடவடிக்கை தொடங்கப்பட்டது. அப்போதிருந்து, இந்த நாள் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் மூன்றாவது சனிக்கிழமையன்று சர்வதேச கடற்கரை தூய்மை தினமாக கொண்டாடப்படுகிறது.

2008 ஆம் ஆண்டு முதல் இலங்கையும் இந்த நாளைக் கொண்டாடுகிறது, தற்போது உலகெங்கிலும் 100 க்கும் மேற்பட்ட நாடுகள் இந்த நாளைக் கொண்டாடுகின்றன. மாசு இல்லாமல் கடல் சூழலை பராமரிப்பதன் முக்கியத்துவம் மற்றும் கடல் வளங்களை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றி பொதுமக்களுக்கு விளக்குவதற்காக 2016 முதல் செயல்பட்டு வரும் சர்வதேச கடலோர சுத்திகரிப்பு தினத்திற்கு ஏற்ப, ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மூன்றாவது சனிக்கிழமை தொடங்கும் வாரத்தை தேசிய கடல் வள பாதுகாப்பு வாரமாக இலங்கை அரசு அறிவித்துள்ளது.

அதன்படி, 2020 தேசிய கடல் வள பாதுகாப்பு வாரம் செப்டம்பர் 19 முதல் 25 வரை நடைபெறுகின்றது. இந்த வார விழா கடல் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை தலைமையின் கீழ் நடைபெறுகின்றது. மேலும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, சுற்றுலா அமைச்சு,

இலங்கை கடற்படை, சிவில் பாதுகாப்புத் துறை, கடலோர பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவ திணைக்களம் ஆகிய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயற்படுகின்றன.

**விடப்ளியூ.கே.பிரசாத் மஞ்சு...**
*(நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் ஊடக செயலாளர்)*

# கிழக்கு உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்களுக்கான அனைத்து கொடுப்பனவுகளிலும் மாற்றம்

கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு தொடர்பாக அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை விடுத்துள்ளார்.

ஆளுநரின் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் இதுவரை நடைமுறையில் இருந்து வந்த கொடுப்பனவுகளில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது.

மாநகரசபை, நகரசபை, பிரதேசசபை ஆகியவற்றின் தலைவர்கள், உபதலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான மாதாந்த மற்றும் தொலைபேசி, எரிபொருள் பாவனை உள்ளிட்ட சகல கொடுப்பனவுகளிலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மாநகரசபை முதல்வருக்கு தொலைபேசிப் பாவனைக்கொடுப்பனவாக மாதம் 4000 ரூபாவும் பிரதிமுதல்வருக்கு 2500 ரூபாவும் உறுப்பினர்களுக்கு 1000 ரூபாவும் வழங்கப்படவேண்டும்.

அதேபோன்று நகரசபை தவிசாளருக்கு தொலைபேசிப் பாவனைக் கொடுப்பனவாக மாதம் 3000 ரூபாவும் பிரதிதவிசாளருக்கு 2000 ரூபாவும் உறுப்பினர்களுக்கு 1000 ரூபாவும் வழங்கப்படவேண்டும்.

இதேவேளை பிரதேசசபை தவிசாளருக்கு தொலைபேசிப் பாவனைக் கொடுப்பனவாக மாதம் 2500 ரூபாவும் உபதவிசாளருக்கு 1500 ரூபாவும் உறுப்பினர்களுக்கு 1000 ரூபாவும் வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி தலைவர்களுக்கான தொலைபேசிக் கொடுப்பனவு குறைக்கப்பட்டிருக்கின்ற அதேவேளை, உறுப்பினர்களுக்கு புதிதாக 1000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதை சுட்டிக்காட்ட முடியும். உறுப்பினர்களுக்கு இதுவரை உறுதிப்படுத்தப்பட்ட தொலைபேசிக் கொடுப்பனவு நடைமுறை இருக்கவில்லை.

இதேவேளை வாகனங்களின் எரிபொருள் பாவனைக் கொடுப்பனவிலும் கட்டுப்பாடு கொண்டு வரப்பட்டுள்ளது.

அலுவலகரீதியான கருத்தரங்குகள் மற்றும் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக நாளொன்றுக்கு மாநகரமுதல்வருக்கு 1500ரூபாவும் தங்குமிட வசதிக்காக 3000 ரூபாவும் வழங்கப்படும். பிரதி முதல்வருக்கும் ஏனைய உறுப்பினர்கள் பங்குபற்றுவதற்காக 1250 ரூபாவும் தங்குமிட வசதிக்காக 2500 ரூபாவும் வழங்கப்படும்.

அலுவலக ரீதியான கருத்தரங்குகள் மற்றும் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக நாளொன்றுக்கு நகரசபைத் தவிசாளருக்கு 1250 ரூபாவும் தங்குமிட வசதிக்காக 2500 ரூபாவும் வழங்கப்படும். பிரதித் தவிசாளர் ஏனைய உறுப்பினர்கள் பங்குபற்றுவதற்காக 1000 ரூபாவும் தங்குமிட வசதிக்காக உபதவிசாளருக்கு 2000 ரூபாவும் உறுப்பினர்களுக்கு 1500 ரூபாவும் வழங்கப்படும்.

அலுவலக ரீதியான கருத்தரங்குகள் மற்றும் நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக நாளொன்றுக்கு பிரதேசசபைத் தவிசாளருக்கு 1250 ரூபாவும் தங்குமிட வசதிக்காக 2500 ரூபாவும் வழங்கப்படும். உபதவிசாளருக்கும் ஏனைய உறுப்பினர்களுக்கும் பங்குபற்றுவதற்காக 1000 ரூபாவும் தங்குமிட வசதிக்காக உபதவிசாளருக்கு 2000 ரூபாவும் உறுப்பினர்களுக்கு 1500 ரூபாவும் வழங்கப்படும். இக்கொடுப்பனவுகள் பிரதேசசபை அமைந்துள்ள மாவட்டத்திற்கு வெளியே இடம்பெறும் உத்தியோகபூர்வ கருத்தரங்கு மற்றும் நிகழ்வுகளுக்கு மட்டுமே பொருந்தும் எனவும் மாதத்திற்கு 10 நாட்களுக்கு மேற்படலாகாது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உபசரணைச் செலவாக மாதாந்தம் மாநகர முதல்வருக்கு 3000 ரூபாவும் பிரதி முதல்வருக்கு 1500 ரூபாவும் வழங்கப்படும். நகரசபை தலைவருக்கு 2500 ரூபாவும் உபதலைவருக்கு 1250 ரூபாவும் பிரதேசசபைத் தவிசாளருக்கு 2000 ரூபாவும் உபதவிசாளருக்கு 1000 ரூபாவும் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக அதிவிசேச வர்த்தமானியில் பல கொடுப்பனவுகளிலும் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதேவேளை கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத் கிழக்குமாகாண உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு தொடர்பாக அண்மையில் வெளியிட்ட அதிவிசேடவர்த்தமானி அறிவித்தலில் மாற்றம் செய்ய வேண்டும் என அம்பாறை மாவட்ட பிரதேசசபைத் தலைவர்கள் நடத்திய ஊடக மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த ஊடகமாநாடு காரைதீவு பொது நூலக கேட்போர் கூடத்தில் காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக அங்கு பிரதேசசபைத் தவிசாளர்களின் கலந்துரையாடல் ஒருமணி நேரம் இடம் பெற்றது. அதன் பின்னர் ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் மாநாடு இடம்பெற்றது.



அம்மாநாட்டில் தவிசாளர்களான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில்(காரைதீவு), இராசையா வில்சன் கமலராஜ்(திருக்கோவில்), தங்கையா கிரோஜாதரன்(ஆலையடிவேம்பு) ஆகியோர் விளக்கமளித்தனர்.

அங்கு தவிசாளர் கே.ஜெயசிறில் கூறியதாவது: "அரசாங்கம் எமது கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சினால் நடைமுறைப் படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களுக்கான நிதியை இன்னும் விடுவிக்கவில்லை. எனவே அதனை உடனடியாக வழங்கி மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து உள்ளூர் நிர்வாகத்தை வளர்த்தெடுக்க முன்வர வேண்டும்.

ஜனாதிபதி பட்டதாரிகளுக்கும் 1இலட்சம் இளைஞர், யுவதிகளுக்கும் வேலைவாய்ப்பு வழங்குவது போன்று எமது சபைகளில் பணியாற்றும் அமைய ஊழியர்களை நிரந்தரமாக்க வேண்டும். கிழக்கு ஆளுநர் கடந்த யூலை மாதம் 13 ஆம் திகதி வெளியிட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் நல்ல பல வியடங்களுள்ளன. அதேவேளை எமது உரிமைகள், சலுகைகள் பல மறுக்கப்பட்டிருக்கின்றன. நாட்டில் வேறெந்த மாகாணத்திலும் இந்த நடைமுறை இல்லை. எனவே அவரை வெகுவிரைவில் நாம் சந்தித்து கலந்துரையாடி அதில் சில மாற்றங்களை கொண்டு வர தீர்மானித்துள்ளோம்.

நாட்டில் ஒரே நாடு, ஒரே சட்டம் என்று கூறி வருகின்ற அதேவேளை உள்ளூராட்சி மன்றங்களிலும் 9 மாகாணங்களிலும் ஒரே சட்டம் அமுலாகுவதை உறுதிப்படுத்த வேண்டும். எமது சபைகளில் போதுமான வாகனங்கள் இல்லாமையினால் திண்மக்கழிவகற்றல் தொடக்கம் பல செயற்பாடுகளுக்கு தடையாகவுள்ளது. எனவே வாகனங்கள் வழங்கப்பட வேண்டும். ஆளணி வழங்கப்பட வேண்டும்."

இவ்வாறு கிழக்கு உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் தமது எதிர்ப்புகளை வெளிக்காட்டி வருகின்றனர். தலைவர்கள் கூடி கூட்டங்களையும் நடத்தி வருகின்றனர். அதற்கெதிராக போர்க்கொடி தூக்கியுள்ளனர். எனவே இவ்வறிவித்தல் அமுலாகுமா அல்லது விலக்கிக் கொள்ளப்படுமா அல்லது சில திருத்தங்களுடன் வெளிவருமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

**வி.ரி.சகாதேவராஜா...**
*காரைதீவு குறூப் நிருபர்*

'பொதுமக்களின் பணத்தை வீணடித்து கண்காட்சி நடத்த நாம் தயாரில்லை' என்று கூறுகிறார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரும், தொழில் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா.

# பொதுமக்களின் பணத்தை வீணடித்து கண்காட்சி நடத்த நாம் தயாரில்லை

**கேள்வி: அமைச்சரவை அமைக்கப்பட்டு நாளாகி விட்டது. திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதற்கான வேலைகள் எப்போது ஆரம்பமாகும்?**

**பதில்:** அதிகாரம் உள்ளதென்பதற்காகவும், எமக்கு பொறுப்புகள் வழங்கப்பட்டதென்பதற்காகவும் பொதுமக்களின் பணத்தை வீணடித்து கண்காட்சி நடத்த நாம் தயாரில்லை. எம்மிடமுள்ள வளத்தை பயன்படுத்தி நிறுவனங்களை மேம்படுத்துவதோடு மக்களுக்கு திருப்தியான சேவையை பெற்றுகொடுக்க வேண்டுமானால் அந்த நிறுவனங்களை ஒவ்வொன்றாக ஆராய வேண்டும். நாம் கொழும்பு மாவட்டத்தில் 'சிசு செரிய' பஸ் போக்குவரத்தை பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கவுள்ளோம். கொழும்பில் மாத்திரம் 200 சிசு செரிய பஸ்கள் உள்ளன. கொழும்பில் அச்சேவையை ஆரம்பித்து பின்னர் அதனை நாடு பூராவும் விஸ்தரிக்கவுள்ளோம்.

**கேள்வி: நீங்கள் கூறுவதைப் பார்த்தால் பஸ் மற்றும் புகையிரத சேவைகள் நட்டத்தில் இயங்குவதாகவே தெரிகின்றது. அதன்படி பஸ், ரயில் கட்டணங்கள் அதிகரிக்கப்படுமா?**

**பதில்:** இல்லை, இவ்வேளையில் நாம் ஒரு போதும் பஸ், ரயில் கட்டணங்களை அதிகரிக்க மாட்டோம் .இந் நிறுவனங்களை நட்டத்தில் இருந்து மீட்க புதிய திட்டங்களை செயல் படுத்தவுள்ளோம். புகையிரதங்களைப் பயன்படுத்தி பொருட்களைக் கொண்டு செல்வது போன்ற நடவடிக்கையை நாம் பஸ் வண்டிகளிலும் மேற்கொள்ளவுள்ளோம். பஸ் வண்டிகளில் பின்பக்க ஆசனங்களை அகற்றி அவ்விடங்களில் கிராமங்களில் இருந்து விவசாயப் பொருட்களை ஏற்றி, இறக்க இடமளிக்கவுள்ளோம்.

**கேள்வி: அன்று எதிர்க் கட்சியில் இருந்த போது நல்லாட்சி அரசாங்கத்தின் ஊழல் மோசடி பற்றி பேசினீர்கள். போக்குவரத்து அமைச்சின் மீது நீங்கள் குற்றம் சுமத்தினீர்கள். அன்று நீங்கள் தெரிவித்த ஊழல் மோசடி குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுப்பீர்களா?**

**பதில்:** ஆம், நாம் போக்குவரத்து அமைச்சில் நடைபெற்ற ஊழல் மோசடிகள் குறித்து ஆராய்ந்து வருகின்றோம். நாம் அத்தகவல்களை fcid இடம் கையளிக்க மாட்டோம். அதற்குப் பொறுப்பான பொலிசாரிடம் கையளித்து குற்றம் செய்தவர்களுக்குஎதிராக சட்டத்தை செயல்படுத்துமாறு கூறுவோம்.

**கேள்வி: கோட்டை புகையிரத நிலையத்தில் நீங்கள் மேற்கொள்ள உள்ள மாற்றங்கள் எவை?**

**பதில்:** ரயில் நிலையத்தில் ரயில் வரும் வரை பயணிகள் காத்திருக்கின்றார்கள். அதன் பின்னர் அதில் பயணம் செய்து தங்கள் கிராமத்தில் உள்ள கடைகளில் பொருட்களை வாங்கிக் கொண்டு செல்கின்றார்கள். அதனால் நாம் அனைத்து



அரச நிறுவனங்களும் செயல்படுத்தும் விற்பனை நிலையங்களைத் திறந்து அவர்களுக்கு தேவையான பொருட்களை மலிவு விலையில் வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளோம். விமான நிலையத்தில் தீர்வையற்ற கடைகள் உள்ளது போல ரயில் நிலையத்தில் அவ்வாறான கடைகளைத் திறக்கவுள்ளோம். நல்ல உணவகங்களையும் அமைப்பதோடு மலசலகூட வசதிகளையும் மேம்படுத்த உள்ளோம்.

**கேள்வி: அமைச்சுப் பதவி மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளை எவ்வாறு நோக்குகின்றீர்கள்?**

**பதில்:** நாம் தொழிற்சங்கங்களின் வேண்டுகோளுக்கு விசேட கவனம் செலுத்துவோம். கோரிக்கைகள் நியாயமானவை என்றால் அவர்கள் போராட்டம் நடத்துவதற்கு முன்னரே அவற்றை வழங்குவோம்.

**கேள்வி: தொழிலாளர் தீர்ப்பாயத்தில் உள்ள வழக்குகளுக்கு சில சந்தர்ப்பங்களில் தீர்வு காண நீண்ட காலம் எடுக்கின்றது. அதற்காக குறிப்பிட்ட காலப் பகுதியை நிர்ணயிக்க முடியாதா?**

**பதில்:** அது கொஞ்சம் சிரமமான விடயம். உள்ள சாட்சியங்களின் எண்ணிக்கை, நீதிமன்றங்களிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை என்பவற்றைப் பொறுத்து காலம் அதிகரிக்கும். ஆனால் காலங் கடத்தாது விரைவில் தீர்வு காண வேண்டியது நீதிபதிகளின் பொறுப்பாகும்.

**கேள்வி: ஊழியர் சேமலாப நிதியம், ஊழயர் நம்பிக்கை நிதியம் என்பவற்றின் நேரடி தொலைபேசி செயல்படாததால் அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாதுள்ளதல்லவா?**

**பதில்:** நான் அது குறித்து ஆராய்வேன், எதிர்காலத்தில் அவ்வாறு நடைபெற இடமளிக்க மாட்டேன்.

**கேள்வி: கொரோனா தொற்றால் நான்கு இலட்சம் பேரின் தொழில் இழக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சி தலைவர் கூறுகின்றார். அது பற்றி ஆராயப்படுகின்றதா?**

**பதில்:** இது பற்றி தற்போது ஆராயப்படவில்லை. ஆனால் கொரானா காரணமாக வேலையிழந்தவர்கள் பற்றி ஆராய்ந்து அவர்களுக்கு சலுகை வழங்கும் திட்டமொன்றை உருவாக்கவுள்ளோம். அது குறித்து தொழிலாளர் ஆலோசனைச் சபையில் கலந்துரையாடப்பட்டது.

**கேள்வி: வெளிநாட்டிலிருந்து வந்த பணியாளர்களுக்கும் சலுகைகள் வழங்கப்படுமா?**

**பதில்:** தற்போது அது பற்றி தெளிவான நிலைமை இல்லை. ஆனால் அவர்கள் பற்றியும் தேடிப் பார்க்க வேண்டும். ஆனால் பெருமளவில் சம்பளம் பெற்றவர்கள் நிலைமை சீரானவுடன் பழைய வேலைக்குத் திரும்பவே விரும்புகின்றாரகள்.

**கேள்வி: எதிர்காலத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்லும் இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா?**

**பதில்:** உண்மையில் அது குறித்து கவனம் செலுத்தியுள்ளோம். நாம் ஜப்பான்,கொரியா, இஸ்ரேல் போன்ற நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். தற்போதைய கொரோனா தொற்று காரணமாக வீசா மத்திய நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. நிலைமை சீரடைந்ததும் அவர்களை அனுப்ப வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சேவைகள் மத்திய நிலையம் மற்றும் தனியார் பிரிவினரையும் இணைத்து அவர்களுக்கு தேவையான ஒதுழைப்பை வழங்கவுள்ளோம்.

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவுடன் சந்திப்பு

## 'நாம் ஒருபோதும் பஸ், ரயில் கட்டணங்களை அதிகரிக்க மாட்டோம். இந்நிறுவனங்களை நஷ்டத்தில் இருந்து மீட்க புதிய திட்டங்களை செயற்படுத்தவுள்ளோம்'

அநுர பிரேமலால்...
*தமிழில்: வீ.ஆர்.வயலட்*

---

நிலைபேறான அல்லது பேண்தகு அபிவிருத்தியை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்துவதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் 2030 நிகழ்ச்சி நிரலே நிலைபேறு அபிவிருத்தி இலக்குகளாகும். இது 17 அபிவிருத்தி இலக்குகளையும் (goals) 169 குறியிலக்குகளையும் (targets) 244 குறிக்காட்டிகளையும் (Indicators) உள்ளடக்கியுள்ளது.

# நிலைபேறு அபிவிருத்தி இலக்குகளை எட்டுவதில் கொரோனா அச்சுறுத்தல் ஏற்படுத்தியுள்ள சவால்

2015ம் ஆண்டு செப்டெம்பர் 25ம் திகதி இலங்கை உட்பட 193 ஐ.நா உறுப்புரிமை நாடுகளினால் கையெழுத்திடப்பட்ட இந்நிகழ்ச்சி நிரலானது 2016 முதல் நடைமுறைக்கு வந்தது. நிலைபேறு அபிவிருத்தி இலக்குகளானது 2016 – 2030 வரையான 15 வருட காலப் பகுதிகளை கொண்டமையைப் பெற்று பல்வேறு பரிணாமங்களூடாக வளர்ச்சி பெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சூழலையும் மனித உயிர்களையும் பாதுகாப்பதை உறுதிப்படுத்துவதற்கான நிலைபேறு அபிவிருத்திக்காக உலகை ஈடுபடுத்தும் 'நிகழ்ச்சி நிரல் 21' ஆனது பிரேசில் நாட்டு ரியோடி ஜெனிறா நகரில் 'பூமி மாநாடு' (earth summit) பெயரில் 1992 ஜுன் மாதம் நடைபெற்ற போது அதில் 178 நாடுகளின் பங்குபற்றுதலுடன் 'நிலைபேறு அபிவிருத்தி இலக்குகள்' பற்றிய எண்ணக்கரு முன்வைக்கப்பட்டது.

இதன் தொடராகவே 2000ம் ஆண்டு 8 அபிவிருத்தி இலக்குகளுடனும் 21 குறியிலக்குகளுடனும் 'மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள்' உருவாக்கப்பட்டு வறுமை ஒழிப்பு, கல்வி, சுகாதாரம் மற்றும் மருத்துவம் தொடர்பான அபிவிருத்தி இலக்குகளை 2015இல் அடைந்து கொள்ளும் வேலைத் திட்டங்கள் சகல நாடுகளிலும் நடைமுறைப்படுத்தப்பட்டன.

இதன் பிண்ணணியில் 2002இல் South Africa இல் நடைபெற்ற 'உலக மகாநாட்டிலும்', பிரேசில் நாட்டில் 2012 ஜுலையில் நடைபெற்ற நிலைபேறு அபிவிருத்திக்கான மகாநாட்டிலும் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் விளைவாகவும், மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளினால் அடைந்து கொண்ட வெற்றியினாலுமே, நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐ.நாவில் உயர்மட்ட அரசியல் கூட்டமைப்பை உருவாக்குவதற்கும் மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளின் கூட்டமைப்பு அபிவிருத்தி இலக்குகளாக உருவெடுப்பதற்கும் காரணமாகின. 2000ம் ஆண்டு ஐ.நாவினால் அறிமுகப்படுத்தப்பட்டு உலகின் பல நாடுகளினால் அமுல்படுத்தப்பட்டதான 15 வருட கால எல்லைகளைக் கொண்ட மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகரமாக அடைந்த போதிலும், ஒருசில நாடுகளில் பொதுவாக இலங்கையைப் போன்ற வளர்முக நாடுகளில் அபிவிருத்தி தொடர்பாக அடையப்படவேண்டிய விடயங்கள் நிறையவே காணப்படுகின்றன. மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை விட அதிகமாகவும் அதேநேரம் சகல விடயங்களையும் உள்ளடக்கியதாகவும் நிலைபேறு அபிவிருத்தி இலக்குகள் உருவாக்கப்பட்டுள்ளதால் இது உலகை மிக வேகமாக கவர்ந்துள்ளது எனலாம்.

மேலும் மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை விட சிவில் சமூகம் மற்றும் தனியார் துறை ஆகியவற்றின் பங்களிப்புக்களுக்கான வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றமையினால் மக்கள் மத்தியிலும் தனியார் துறையிலும் SDG அதிகம் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதேபோல், மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை விட SDG மிக அதிகமாக மனித உரிமைகள் மற்றும் அவற்றின் தாக்கங்கள் பற்றியும் சமாதானம், பொருளாதாரம், சூழல் போன்றவை பற்றியும் அதிகம் பேசுகின்றமையினாலும் உலகில் பெரும் வரவேற்பை பெற்றுள்ளது.

இதன் பின்னனியிலேயே 2013ம் ஆண்டு ஐ.நாவின் பொதுச்சபையானது SDG தொடர்பான முன்மொழிவை விருத்தி செய்வதற்காக 30 பேர் கொண்ட திறந்த செயற்குழுவை உருவாக்கியது. இதன் மூலம் முன்மொழியப்பட்ட SDG ஆனது 2015ம் ஆண்டு பல்வேறு சுற்றுப் பேச்சுவார்த்தையின் பின்னர் உலகில் ஓர் முக்கிய கொள்கையாகவும் அபிவிருத்தியின் வழிகாட்டியாகவும் உருவாக்கப்பட்டது.

வறுமையை அனைத்து மட்டங்களிலும் இல்லாமல் ஆக்குதல், பசியால் வாடுதலை பூச்சிய நிலைக்குக் கொண்டு வருதல், ஆரோக்கியமான வாழ்க்கையை உருவாக்குதல், தரமான கல்வி, ஆண் பெண் பால்நிலை சமத்துவம், அனைவருக்கும் நீர், ஏற்றுக் கொள்ளக் கூடியதும் நம்பகரமானதுமான நவீன வலுச்சக்தி, பொருளாதார விருத்தி, சகலருக்குமான உட்கட்டமைப்பு வசதிகள், ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல், சுத்தமான நகர அமைப்பை ஏற்படுத்தல், நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதிப்படுத்தலும் பாதுகாத்தலும், காலநிலை மாற்றத்தின் தாக்கத்தைக் குறைத்தல், நீர்வாழ், நிலவாழ் உயிரினங்களை பாதுகாத்தல், சமாதானத்தையும் சுபீட்சத்தையும் ஏற்படுத்தல் மற்றும் இவை அனைத்திற்குமான பூகோளவியல் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளல் என்பவை போன்ற 17 இலக்குகளும் உலகில் ஒரு மனிதனுடன் சம்பந்தப்பட்ட சகல விடயங்களையும் உள்ளடக்குவது SDG இன் மிகச் சிறப்பான அம்சமாகும்.

***SDG அமுல்படுத்துவதில் இலங்கையின் நிலை:***

நிலைபேறு அபிவிருத்தி இலக்குகளை இலங்கையில் அமுல்படுத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் அரசாங்கம் ஏற்படுத்தி வருகின்றது. இதற்கான அமைச்சு உருவாக்கப்பட்டு, பின்னர் ஜனாதிபதி செயலகத்துடன் இணைக்கப்பட்டதுடன் இவ்விடயப் பரப்பானது தற்போது மக்களிடம் கொண்டு செல்லப்பட்டு வருவது மாத்திரமின்றி, இலங்கையின் கொள்கை மற்றும் திட்டங்களுக்குள் இது உட்படுத்தப்பட்டும் இவ்விலக்குகளை அடைந்து கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. இருப்பினும் 15 வருட காலக்கெடுவுடன் உருவாக்கப்பட்ட SDG ஐந்து வருடங்கள் பூர்த்தியான நிலையில், இலக்குகளின் அடைவு மட்டங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்படவில்லை என்பது பலரதும் கருத்தாகும்.

***நிலைபேறு அபிவிருத்திற்கான சட்டம்:***

இலங்கையில் அபிவிருத்தியை அடைவதில் எதிர்நோக்குகின்ற பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் SDG அமுல்படுத்துவதில் சிக்கல் நிலைமை காணப்படுகின்ற போதிலும் அரசாங்கத்தின் விஷேட முன்னேற்பாடுகளினால் தற்போது SDG அமுலாக்கம் துரிதப்படுத்தப்பட்டு வருகின்றது. இலங்கையில் நிலைபேறு அபிவிருத்திற்கென 2017ம் ஆண்டின் 19ம் இலக்கச் சட்டம் பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டு, SDG அமுல்படுத்தலை அத்தியாவசியமாக்கியுள்ளது.

இலங்கை 30 வருட கால யுத்த வடுக்களுடன் இருக்கும் ஓர் நாடு என்பதனாலும், இங்கு காணப்படும் ஏழ்மைக் குழுக்கள், மாற்றுத்திறனாளிகள், பெண் தலைமை தாங்கும் குடும்பங்கள், அடிக்கடி ஏற்படும் அனர்த்தங்களும் அதனால் ஏற்படும் அழிவுகளும் என்பன பேன்ற விளைவுகள் கவனத்திலெடுக்கப்பட்டு, அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டிய தேவை அரசுக்கு உள்ளது. அதேநேரம் மக்களினதும், மக்கள் பிரதிநிதிகளினதும் பழைமை வாய்ந்த அணுகுமுறைகள், அபிவிருத்தியின் புதிய மாற்றத்துடனான புதிய எண்ணக்கருக்களுக்கு எதிராக காணப்படலாம் என்பது தேசிய மீளாய்வு அறிக்கையில் 'நிலை பேறு அபிவிருத்தி இலக்குகளில் பதி னேழாம் இலக்கான 'பங்குபற்றுதல்' இல க்கு முழுமையாக சீராக்கப்படாமல் 26% மாத்திரம் சீராக்கப்பட்டுள்ளது என்பதன் மூலம் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அதாவது, மக்களினதும், பொறுப்புள்ள குழுக்களினது பங்குபற்றுதல் தன்மை குறையும் போது அபிவிருத்தியை முன்னெடுப்பதில் இலங்கை பல்வேறு சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்படும் என்பதையே இது குறித்து நிற்கிறது.

## கொவிட் 19 தாக்கத்திலிருந்து உலகை பாதுகாத்து SDG ஐ அடைந்து கொள்வதற்காக ஐ.நா முன்வைத்துள்ள பரிந்துரைகள்

உலகில் பல இலட்சம் மனித உயிர்களை காவுகொண்டதும், மிக வேகமாக பரவி வருவதுமான கொரோனா வைரஸின் தாக்கம் பல்வேறு துறைகளையும் வெகுவாக பாதிப்படையச் செய்ததுடன் உலக மக்களை SDG இன் பக்கம் கவனம் செலுத்தவேண்டிய சூழலையும் உருவாக்கியுள்ளது. SDG இல் காணப்படும் 17 இலக்குகளில் வறுமையை இல்லாதொழித்தல், உணவுப் பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி, சமத்துவம், பாதுகாப்பான நீர், மின்சாரம், வேலைவாய்ப்பு, சிறந்த நகர உருவாக்கம், காலநிலை, சமாதானம் மற்றும் பங்குபற்றுதல் என்பன போன்ற இலக்குகளில் அதிகமாக கவனம் செலுத்துதல் வேண்டும் என ஐ.நா கோரிக்கை விடுத்துள்ளது.

கொரோனாவின் தாக்கத்தினால் மக்களின் வருமானம் குறைந்ததோடு சமூகத்தில் ஏழ்மையின் தாக்கம் என்பன வறுமையை ஒழித்தல் எனும் இலக்கின் அடைவு மட்டத்தை பாதிக்கச் செய்கின்ற அதேநேரம் உணவுப்பாதுகாப்பின்மை, அதனை பங்கிடுவதில் உள்ள சிக்கல்கள் என்பன பட்டினியை அதிகரித்து அதிக சமூகப் பிரச்சினையை உருவாக்க வழியை ஏற்படுத்துகிறது.

மேலும் கொரோனாவின் பின்னனியில் பெண்களின் பொருளாதார நிலை வெகுவாக பாதிப்புக்கு உள்ளாக்கப்பட்டதோடு பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளதாகவும் பெண்கள் சமத்துவம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஐ.நா சுட்டிக்காட்டியுள்ளது. அதுமாத்திரமன்றி பொருளாதார நடவடிக்கைகளை முடக்கப்பட்டுள்ளதும், குறைந்த வருமானம், குறைந்தளவிலான வேலை மற்றும் வேலையின்மை என்பனவும் இதன் தாக்கமாக பதியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நகரங்களின் சனநெரிசல்கள் பெருகியமை, யுத்தம் நடைபெறும் இடங்களின் சமாதான நடவடிக்கைகள் தடைப்பட்டமை போன்றனவும் சிறந்த அபிவிருத்தியை அடைய முடியாத நிலையை உருவாக்கியுள்ளது.

சமூக இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகள் பேணல் என்பனவற்றால் அபிவிருத்தியின் பால் மக்களின் பங்களிப்பு வெகுவாக பாதிப்படைந்துள்ளதாக ஐ.நா தனது அறிக்கையில் தெளிவுபடுத்தியுள்ளது. இவ்வாறான தாக்கங்களிலிருந்து உலகை பாதுகாப்பதற்கான பல்வேறு விடயங்கள் அடங்கிய அறிக்கையொன்றினை ஐ.நா சபையானது வெளியிட்டுள்ளது என்பதோடு அதனை ஏற்று நடைமுறைப்படுத்துமாறும் பல்வேறு நாடுகளையும் அது கேட்டுக் கொண்டுள்ளது.

ஐ.நா சபையானது கொரோனாவின் தாக்கத்திலிருந்து உலகை பாதுகாத்து SDG ஐ அடைந்து கொள்வதற்காக மூன்று வகையான பரிந்துரைகளை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இவ்வறிக்கையின்படி தொற்றுநோயின் விளைவின் அளவை குறைப்பதற்கான உலக பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்தல், பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குதல் போன்றவற்றின் மூலம் SDG ஐ அடைவதற்கான வழிவகைகளை மேற்கொள்வதோடு, அரசியல் பொருளாதார ஒருமித்த சிந்தனையுடனும் ஒற்றுமையுடனும் அனைத்து தலைவர்களும் ஒரே வகையான வேலைத் திட்டங்களை தனது சக்திக்கு ஏற்ற மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு விரைவாக தொழில்படுவதன் மூலம் SDG ஐ அடைந்து கொள்வதனூடாக கொரோனா தாக்கத்திலிருந்து விடுபட முடியும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்காக மனிதனை மையமாகக் கொண்ட உற்பத்தியை அதிகரித்தல், வர்த்தக தடைகளை நீக்குதல், வர்த்தக பராமரிப்பு மற்றும் விநியோக சங்கிலியை மீண்டும் நிறுவுதல், வெளிப்படையான பொருளாதார கொள்கைகளை உருவாக்குவதோடு, பொது நிதி ஏற்பாட்டை வலுப்படுத்தல், பிராந்திய நாணய நிதி ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்தல், தனியார் துறையின் பங்களிப்பை அதிகப்படுத்தல், கட்டமைப்பு நெறிமுறைகளை உருவாக்கல், பாதிக்கப்பட்ட நாடுகளுக்கான உதவிகளை அதிகரித்தல், மனித உரிமையை பாதுகாத்தல், சிறு மற்றும் நடுத்தர உரிமைகளுக்கு ஆதரவளித்தல், வேலை வாய்ப்புக்களை உருவாக்கல், புதிய தொழில்நுட்பத்துடனான கல்வியை மேம்படுத்தல் போன்ற விடயங்களில் ஒவ்வொரு நாளும் அதிக கவனம் செலுத்தும் போது கொரோனா தாக்கத்தின் விளைவுகளிலிருந்து விடுபடுவதுடன் 2030இல் SDG ஐ முழுமையாக அடையக்கூடிய வாய்ப்பினையும் பெற்றுக் கொள்ள முடியும் என ஐ.நா வலியுறுத்தியுள்ளது.








ஏ.எஸ்.எம்.பாயிஸ்...
*திட்டமிடல் பணிப்பாளர்,*
*கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு,*
*திருகோணமலை*

## கல்வியமைச்சின்...

அறிவித்துள்ளது. கல்வியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இம்முறை கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 12 ஆம் திகதி தொடக்கம் நவம்பர் மாதம் 06 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ளது.

இந்த பரீட்சைக்காக நாடு முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 2,648 மத்திய நிலையங்களில் பரீட்சை நடைபெறவிருப்பதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பீ.சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

அதேநேரம் 2020 ஆம் ஆண்டுக்கான தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி நடைபெறவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## சம்பந்தனும்...

பாக்கியசோதி சரவணமுத்து, சட்டத்தரணி நாகானந்த கொடித்துவக்கு, அனில் காரியவசம் ஆகியோரும் நேற்று 20ஆவது திருத்தத்திற்கு எதிராக விசேட மனுக்களை தாக்கல் செய்துள்ளனர்.

இந்த நிலையில், தற்போது 20ஆவது திருத்த வரைபுக்கு எதிராக மொத்தம் ஆறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

20 ஆவது அரசியலமைப்பு திருத்த வரைபு எதிர்க்கட்சியின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் பாராளுமன்றத்தில் (22) நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் ஒரு வார காலத்தினுள் இதற்கு எதிராக யாரேனும் உயர் நீதிமன்றத்தை நாடினால் 21 நாட்களுக்கு 20ஆவது திருத்தம் தொடர்பாக எந்த முன்னெடுப்பையும் பாராளுமன்றத்துக்குள் முன்னெடுக்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

## கோபா குழுவின் தலைவராக...

நியமிக்கப்பட்டது. புதிய பாராளுமன்றத்தின் கோபா குழு உறுப்பினர்கள் விபரம்: உதய கம்மன்பில,துமிந்த திஸாநாயக்க,தயாசிறி ஜயசேகர,லசந்த அழகியவண்ண, சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, செஹான் சேமசிங்க,பிரசன்ன ரணசிங்க,திஸ்ஸ அத்தநாயக்க,ஹரின் பெர்னாண்டோ,நிரோஷன் பெரேரா, பைஸல் காஷிம்,அசோக அபேசிங்க, புத்திக பத்திரண,காதர் மஸ்தான்,சிவஞானம் சிறிதரன்,உபுல் கலப்பத்தி, பீ.வை.ஜீ. ரத்னசேக்கர,வீரசுமன வீரசிங்ஹ,ரஞ்சித் பண்டார,மொஹமட் முஸாமில்,ஹரின் அமரசூரியஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## ஈஸ்டர் ஞாயிறு...

இந்த வழக்கில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ மற்றும் முன்னாள் பொலிஸ் மாஅதிபர் பூஜித் ஜயசுந்தர ஆகியோரும் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர். குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் அறிவிப்பையடுத்து கொழும்பு மேலதிக நீதவான் ஆர்.யூ. ஜயசூரிய, வழக்கு விசாரணைகளை எதிர்வரும் மார்ச் மாதம் 17 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

## இனவாத உள்ளக்கிடக்கையை...

அதே ஆடையுடன் அதாஉல்லா பாராளுமன்றம் வந்து அமர்ந்ததில், பல படிப்பினைகள் உள்ளதையும் அறிந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

"தேசிய காங்கிரஸ் தலைவரின் ஆடையைப் பார்த்து "அல்கைதா, ஐ.எஸ்.ஐ.எஸ், இஸ்லாமிய அடிப்படைவாதி" எனக் கூச்சலிட்ட ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்கள், அரசியல் நோக்கிலே செயற்பட்டுள்ளனர். அதாஉல்லாவின் ஆடையில் அடிப்படைவாதம், பயங்கரவாதச் சாயல் இருந்திருந்தால், மீண்டும் அந்த ஆடையுடன் சபைக்கு வருவதற்கு சபாநாயகரின் அனுமதி கிடைத்திருக்காது. நடைமுறையில் சில தவறுகள் இருந்ததாலே அவர் வெளியேற்றப்பட்டு, மீண்டும் சபைக்குள் அனுமதிக்கப்பட்டார். இதைக் கூடப் பொறுத்துக்கொள்ளும் மனவளர்ச்சி சஜித் பிரேமதாச தலைமை தாங்கும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களுக்கு இல்லாமல் போனமை கவலையளிக்கிறது.

ஒரு தவறைக் கண்டிப்பதற்கு எம்.பிக்களுக்கு உரிமை உள்ளதுதான். எனினும், எதிர்க்கட்சி எம்.பிக்கள், அதாஉல்லாவுக்கு எதிராகப் பிரயோகித்த சொற்கணைகள், வங்குரோத்து அரசியலுக்கு வயிறு வளர்க்கும் முயற்சியாகவே நான் பார்க்கிறேன்.

## விளையாட்டுத்துறைக்கு...

இவ்வாறு கூறினார். முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு மைதான பணி ஆரம்பிக்கப்படாதது குறித்தும் மன்னார் மாவட்ட விளையாட்டு மைதான பணிகள் ஸ்தம்பிதமாகியுள்ளது பற்றியும் மன்னார் எமில் நகர மைதானப் பணி ஆரம்பிக்கப்படாதது குறித்தும் அவர் கேள்வி எழுப்பியிருந்தார்..

இதன் போது மேலும் கருத்துத் தெரிவித்த அவர், முல்லைதீவு,மன்னார் மாவட்ட மைதானங்கள் மற்றும் மன்னார் நகர எல்லையிலுள்ள எமில் நகர பொது விளையாட்டு மைதானம் என்பவற்றை நிர்மாணிக்க அமைச்சரின் நேரடி கண்காணிப்பின் கீழ் 2021 வரவு செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்குமாறு கோருகிறேன் என்றார்.

இரு வாரங்களுக்கு முன்னர் நான் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தேன்.முல்லைத்தீவு, கொக்குதொடுவாய் பகுதிகளில் எமது மக்களின் விவசாய நிலங்களை மகாவலி அதிகார சபை அதிகாரிகள் விவசாயம் செய்ய விடாமல் தடுத்துள்ளமை பற்றியும் கூறினேன்.

இதனை கண்காணிக்க அதிகாரிகளை அனுப்புமாறு கோரினேன். அவர்களுக்கு தமது சொந்த இடத்தில் விவசாயம் செய்ய முடியாதுள்ளது. இது பற்றியும் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

## 5,000 மெ.தொன் உள்ளூர்... (03 ஆம் பக்கத் தொடர்)

5,000 மெ.தொன் மட்டுமே இலங்கையில் பயிரிடப்படுகிறது.

விவசாயத்துறையில் தொடங்கப்பட்டுள்ள சுபீட்சமான வேலைத் திட்டங்களின் பிரகாரம் இந்த ஆண்டு முதல் உளுந்து உற்பத்திக்கான ஏக்கர்களை அதிகரிக்கவும் ஆண்டொன்றுக்கு 25,000 மெ.தொன் உளுந்தை உற்பத்தி செய்யவும் எதிர்பார்க்கப்படுவதாகவும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

## அரசியல் தேவைகளுக்காக... (03 ஆம் பக்கத் தொடர்)

தே ர்தல் ஆணைக்குழு உறுப்பினர் ஒருவரினது தன்னிச்சையான போக்கு கடந்த காலங்களில் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு தொடர்பில் மக்கள் மத்தியில் ஒரு கேள்வியைத் தோற்றுவித்திருந்ததெனவும் சுட்டிக் காட்டினார். திலீபனை நினைவு கூர்வதை கையிலெடுத்துள்ள ஒரு கூட்டத்தின் ஐக்கியம், வாக்கு கொள்கைக்காகவே அன்றி மக்கள் ந லனுக்கான ஐக்கியமல்ல எனவும் தெரிவித்தார்.

## அரசாங்க அதிகாரிகளை... (03 ஆம் பக்கத் தொடர்)

பௌத்த துறவி தாக்கியதால் இப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது. இந்த இடம் தொல்பொருள் திணைக்களத்திற்கு சொந்தமானதென குறிப்பிடும் பெயர் பலகையையும் அங்கு காண முடிந்தது.

இதனையடுத்து மட்டக்களப்பு பொலிஸ் நிலைய அதிகாரிகள் தலையிட்டு அளவீட்டு செயற்பாடுகள் நிறைவு பெறும் வரை விவசாய நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டாமென அறிவுறுத்திய நிலையில் பிரச்சினை சுமுகமடைந்தது.

எவ்வாறாயினும் அம்பிட்டிய சுமணரத்தன தேரரின் கட்டுப்பாட்டிலிருந்த தொல்பொருள் ஆராய்ச்சி திணைக்களத்தின் மூன்று அதிகாரிகளும் விடுவிக்கப்பட்டு மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

## திலீபனுக்கு நினைவேந்தல்... (03 ஆம் பக்கத் தொடர்)

எங்களுடைய உரிமைகளுக்காக உயிர்நீத்தவர்களை நினைவுகூருவதற்காக நாங்கள் தொடர்ச்சியாக குரல் கொடுத்துக்கொண்டே இருப்போம். உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் நினைவேந்தலுக்காக நாங்கள் தொடர்ந்து போராடிக்கொண்டிருப்போம் என்றார்.

## 16 வயது மாணவி மர்ம... (03 ஆம் பக்கத் தொடர்)

கண்ட தாய் கதறி அழுந்ததையடுத்து அயலவர்கள் மாணவியை வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றபோது அவர் உயிரிழந்துள்ளதாக வைத்தியர் தெரிவித்தனர்.

மே ற்படி மாணவி கொலை செ ய்யப்பட்டுள்ளாரா? அல்லது தற்கொலை செய்து கொண்டுள்ளாரா? என்பது குறித்து பொலிசார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யானைகள் சரணாலயம் மீண்டும் திறப்பு

**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

கொரோனா தொற்று காரணமாக மூடப்பட்டிருந்த யானைகள் சரணாலயம் பொது மக்களின் பார்வைக்காக (21) திறந்து வைக்கப்பட்டது. யானைகள் சரணாலயம் கொரோனா தொற்று காரணமாக பல மாத காலமாக பொது மக்களின் நடமாட்டம் இடை நிறுத்தப்பட்டிருந்ததுடன் நேற்று முன்தினம்(21) மீண்டும் திறக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## பெருந்தோட்ட சேவையாளர்...

பெருந்தோட்ட சேவையாளர்கள் இன்று தோட்டங்களின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் பாடுபடுகின்றனர். இவர்களது வாழ்வு செழிப்பாக உயர வழிவகைகள் செய்து கொடுக்கப்படவேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும். எதிர்காலத்தில் தோட்டச் சேவையாளர்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படுமென இதன் போது ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார். நடப்பு வருட நிர்வாக சபைக்கு புதிய நிர்வாக தெரிவுகளில் தலைவராக ஜீவன் தொண்டமான், பொதுச் செயலாளராக பொன்னையா சிவராஜா ஆகியோர் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

## கொழுந்து பறித்து...

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, ஹொப்டன் தோட்ட பழைய ஸ்டோர் பிரிவிலுள்ள தேயிலை மலையொன்றில் கொழுந்து பறித்து கொண்டிருந்த பெண் தொழிலாளி அருகே வித்தியாசமான சத்தம் கேட்டுள்ளது. இதை உணர்ந்த அவர், அருகில் சென்று அவதானித்த போது மலைப்பாம்பொன்று இருப்பதை கண்டு உடனடியாக சக தொழிலாளர்களுக்கு அறிவித்துள்ளார். விரைந்து செயற்பட்ட தொழிலாளர்கள் மலைப்பாம்பை பிடித்து லுணுகலை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். லுணுகலை பொலிஸார் பாம்பை வனவிலங்கு அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுத்தனர். இச்சம்பவம் இப்பகுதியில் உள்ள தொழிலாளர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

## நாட்டில் ரின்மீன் உற்பத்தி,...

ரின் மீன் இறக்குமதி செய்வதற்காக கடந்த காலங்களில் வருடாந்தம் 2.5 பில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது.

உள் நாட்டிலும் இதற்கு சிறந்த சந்தை வாய்ப்பு இருந்தது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் பல ரின் மீன் உற்பத்தி நிறுவனங்கள் நாட்டில் உருவாக்கப்பட்டன. இதன்மூலம் தரமான ரின் மீன்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க மேற்கொண்ட நடவடிக்கைகளால் திறந்த இறக்குமதி சூழ்நிலையில் பெரும்பாலனவர்கள் ரின் மீன் இறக்குமதி செய்ய முற்பட்டனர்.

அதன் விளைவாக உள்ளூர் ரின் மீன் உற்பத்தி தொழிற்சாலைகளை மூட வேண்டிய நிலை ஏற்பட்டது.

தற்காலிக இலாபத்திற்காக முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க மேற்கொண்ட தீர்மானத்தினால் அதற்கான சந்தை பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அதனை நிவர்த்தி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில்நேற்று வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது ஹேஷா விதானகே எம். பி. எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## எம்.பிக்களின் பாதுகாப்பிற்கே...

வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்பு 04 பேரிலிருந்து இரண்டாக குறைக்கப்பட்டிருக்கின்றது. பாதாள உலக கோஷ்டி மற்றும் போதைப்பொருள் வர்த்தகர்களின் அச்சுறுத்தல் பாரியளவில் காணப்படும் தற்போதைய சூழ்நிலையில் போதைப்பொருளுக்கு எதிராக குரல்கொடுக்கும் உறுப்பினர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டிருந்த பொலிஸாரின் எண்ணிக்கை இரண்டாக குறைக்கப்பட்டிருப்பது எமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும். அதனால் இதுதொடர்பில் அரசாங்கம்நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டிருந்தார்.

அதற்கு பதிலளித்த அமைச்சர் சமல் ராஜபக்ஷ, தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

நாட்டில் 85,000 பொலிஸ் அதிகாரிகளே இருக்கின்றனர். அவர்களில் 38,000 பேர் மக்கள் பிரதிநிதிகளின் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றனர். மக்கள் பிரதிநிதிகளுக்கு பொது மக்கள் தொடர்பில் நம்பிக்கை இருக்கவேண்டும். அவ்வாறு நம்பிக்கை இல்லாதவர்களே பொலிஸ் பாதுகாப்பு கோருகின்றனர்.

அவ்வாறு இல்லாவிட்டால் உறுப்பினர்களின் கோப்புகளை தூக்கிச்செல்லவா பொலிஸ் பாதுகாப்பு கோருகின்றனர் எனக் கேட்கத் தோன்றுகிறது.

## முகமாலையில் மீட்கப்பட்டது...

மதியம் 03 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிபதி த.சரவணராஜா மற்றும் சட்ட வைத்திய அதிகாரிகள் முன்னிலையில் அகழ்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன்போது சோதியா படையணியை சேர்ந்த இரு பெண் போராளிகளின் இலக்க தகடுகள் மீட்கப்பட்டுள்ளதுடன், மண்டையோட்டுடன் கூடிய ஒரு தொகுதி எலும்புக்கூடுகளும் மீட்கப்பட்டிருந்தன.

விடுதலைப்புலிகளால் வழங்கப்படும் த.வி.பு ஞா 0302 மற்றும் த.வி.பு. ஞ 0188 என்ற அடையாளங்கள் பொறிக்கப்பட்ட இலக்கத்தகடுகளே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்டுள்ள எலும்புக்கூடுகள் B+ மற்றும் O+ இரத்த வகையைச் சேர்ந்தவர்களது உடல் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவ் அகழ்வுப் பணிகளின் போது எதிரியிடம் அகப்பட்டால் தமது உயிரை மாய்ப்பதற்காக விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்படும் சைனட் குப்பி ஒன்றும், பெண் போராளிகள் இடுப்பில் அணியும் பட்டியும், உரப்பைகள், விடுதலைப்புலிகளின் வரிச் சீருடைகள், பச்சை நிற சீருடைகள், பாதணி ஒன்று, பற்றிகள், சம்போ போத்தல்கள் போன்றவையும் மீட்கப்பட்டுள்ளன.

இதேவேளை, துப்பாக்கி ஒன்று, இரண்டு கைக்குண்டுகள், 08 மகசின், 03 கோல்சர் கவர் போன்றவையும் இந்த சந்தர்ப்பத்தில் மீட்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்த நிலையில் இன்றைய தினமும் தொடர்ந்தும் அகழ்வுப்பணிகளை முன்னெடுக்க கிளிநொச்சி மாவட்ட நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

## பாராளுமன்ற பொதுக்...

முதலில் சர்ச்சை ஏற்பட்டதோடு குழுக்களுக்கு தலைவர் நியமனம் தொடர்பிலும் கடும் வாதப் பிரதிவாதம் ஏற்பட்டது. ஆளும் தரப்பு எம்.பிக்களுக்கு வாய்மூல விடைகளை கேட்க குறைவான சந்தர்ப்பமே வழங்கப்பட்டுள்ளதாக மொஹமட் முஸம்மில் தெரிவித்தார்.

முஜீபுர் ரஹ்மான் எம்.பி கூறுகையில்,..

ஆளும் தரப்பு எம்.பிக்களுக்கு ஆளும் தரப்பு குழுக்கூட்டங்களில் கேள்வி எழுப்ப முடியும்.எதிரணிக்கு இங்கு தான் வாய்ப்புள்ளது என்றார்.

சாந்த பண்டார எம்.பி கூறுகையில்,..

கடந்த ஆட்சியில் ஆளும் தரப்பு எம்.பிக்கள் தான் கூடுதலான வாய்மூல கேள்விகளை முன்வைத்தனர் என்றார்.

புத்திக பதிரண எம்.பி,...

பொதுக்குழுக்களின் தலைமை பாதி பாதி இரு தரப்பிற்கும் வழங்க வேண்டும்.கோப் குழுவுக்கு ஆளும் தரப்பு நியமித்துள்ளதால் நிதி குழுவுக்கு எதிரிணியை நியமிக்க வேண்டும் என்றார்.

எஸ்.எம்.மரிக்கார் எம்.பி,...

கோப் குழு தலைவராக ஆளும் தரப்பு எம்.பி சரித்த ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.ஒப்பீட்டளவில் அவர் பொறுத்தமானவர்.பாராளுமன்ற அமர்வு நேரடியாக காண்பிக்கப்படுகிறது.பொதுக் குழுக் கூட்டங்களும் நேரடியாக காண்பிக்கப்பட்டன. அவற்றை திருத்தி தாமதித்து காண்பிக்க அரசு தயாராகிறது.

2015 / 2019 காலப்பகுதியில் செயற்பட்ட அரச நிறுவனங்கள் குறித்தே ஆராயப்பட இருக்கிறது. எனவே நேரடி ஒலி,ஒளிபரப்பிற்கு அனுமதிக்க வேண்டும். இதற்கு பதிலளித்த சபாநாயகர் இக் குழுக்களே தலைவரை தெரிவு செய்வதாக கூறினார்.

## யாழ். செல்லும்...

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இந்த நிலைமை உள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் மிகவும் கஷ்டப்படுகின்றனர். இந்த மாவட்டத்தில் மலசல கூடம் தொடர்பான பிரச்சினை பாரிய பிரச்சினையாக உள்ளது. மலசல கூடங்களே இல்லாத கிராமங்களும் இங்குள்ளன. அங்கு பெண்கள் தமது இயற்கை கடனை கழிப்பதற்காக காடுகளுக்குள் செல்ல வேண்டும்.

சில இடங்களில் தண்ணீர் இல்லாத நிலைமையும் காணப்படுகிறது. அமைச்சர்களுக்கு வன்னி மாவட்டத்திற்கும் வந்து ஆராய்ந்து தேவையான நடவடிக்கை எடுக்க பிரதமர் உத்தரவிட வேண்டும்.

இதேவேளை எமது மக்கள் போருக்கு பின்னர் பல பிரச்சினைகளை சந்தித்துள்ளனர். மீள்குடியேற்றம் ,விவசாயம் தொடர்பான பிரச்சினைகளுக்கும் உள்ளாகின்றனர். குளத்து நீரையும் பயன்படுத்த முடியாத நிலையில் மக்கள் இருக்கின்றனர். இது தொடர்பாக கவனம் செலுத்தாவிட்டால் மக்களின் வாழ்க்கையில் இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். அபிவிருத்திக் குழு கூட்டங்களில் நாங்கள் இது தொடர்பாக கூறியுள்ளோம்.

அபிவிருத்திக் குழு கூட்டங்களில் இந்த நிறுவனங்களுடன் தொடர்புடைய அதிகாரிகளும் கலந்து கொள்ள வேண்டும்.

நானும், சக பாராளுமன்ற உறுப்பினர் வினோவும் கோயில் ஒன்றுக்கு சென்று திரும்பிய பின்னர் அந்த கோயிலுக்கு செல்வதற்கு பொது மக்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏன் என்று தெரியவில்லை. 26 ஆம் திகதி வரையில் தடை விதிக்கப்பட்டுள்ளது. வழிபாட்டுக்கு மக்கள் வருவதை தடுக்க கூடாது. இந்த விடயத்தில் பொலிஸார் தலையிடக் கூடாது. வழிபாட்டுக்கு செல்வதற்கு பொலிஸாரினால் தடையுத்தரவு பிறப்பிக்க முடியாதென்றும் அவர் தெரிவித்தார்.

## வடக்கில் விளையாட்டுத்...

செலவுத் திட்டத்தினூடாக ஒதுக்க உள்ளதாகவும் அவர் கூறினார்.

வடக்கிலுள்ள விளையாட்டு மைதான அபிவிருத்தி தொடர்பில் சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டு மைதானத்திற்கு காணி தெரிவு செய்யப்பட்டு இணைப்புக் குழுக் கூட்டத்தில் அனுமதி பெறப்பட்டது. ஆனால் அந்தக் காணிக்கு தனியார் உரிமையாளர் ஒருவர் உரிமை கொண்டாடும் நிலையில் நிர்மாணப்பணிகள் தடைப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்ட விளையாட்டு மைதானம் 32 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டது. இணைப்பு குழு அனுமதி பெறப்படவுள்ளதோடு 2021 இல் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்படும்.

மன்னார் எமில் நகர பொது விளையாட்டு மைதான பணி தொல்பொருள் பிரச்சினையால் தடைப்பட்டது. அந்தப்பிரச்சினை தற்போது தீர்ந்துள்ளது. விளையாடக் கூடிய நிலையில் மைதானம் உள்ளதால் அதனை பயன்படுத்த முடியும். எதிர்வரும் காலத்தில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

வடக்கிலுள்ள விளையாட்டு மைதானங்களுக்கு நிதி ஒதுக்குவது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. தேவையான நிதி ஒதுக்கப்படும்.கடந்த காலத்தில் கிளிநொச்சியில் சகல வசதிகளுடன் விளையாட்டு மைதானம் நிர்மாணிக்கப்பட்டது. ஆனால் கடந்த காலத்தில் அது பயன்பாடின்றி நாசமடைந்தது. அரசியல் நோக்கில் கட்டடங்கள் கட்டுவதால் பயனில்லை.தேவையான வசதிகளை நாம் வழங்குவோம். வவுனியா, மன்னார், யாழ் மாவட்டங்களில் விளையாட்டு பாடசாலைகளை முன்னேற்றவும் அவற்றுக்கு 200 ஓடுபாதை நிர்மாணிக்கவும் இருக்கிறோம்.130 மீற்றர் செயற்கை ஓடுபாதை அமைக்கவும் இருக்கிறோம்.

மன்னாரில் விளையாட்டு பாடசாலை கிடையாது. கல்வி அமைச்சு இதற்கு அனுமதி வழங்கியுள்ளது. அதன் பணிகளும் ஆரம்பிக்கப்படும் என்றார்.

## நீர்நிலைகளின் அபிவிருத்திக்கு...

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை மாளிகாவத்தையிலுள்ள அமைச்சு அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது மேலும் தெரிவித்த அமைச்சர்,

கடந்த காலங்களில் நோர்வே நாட்டிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட இலங்கை பாராளுமன்ற உறுப்பினர் குழுவில் அங்கம் வகித்து சென்ற போது, நீர் வேளாண்மையில் நவீன தொழில்நுட்ப பயன்பாட்டின் மூலம் நீர் வேளாண்மையில் நோர்வே வெற்றிகரமாக செயற்பட்டு வருவதை தன்னால் அவதானிக்க முடிந்ததாக சுட்டிக்காட்டினார்.

அத்துடன் இலங்கையில் வடக்கு, கிழக்கு உட்பட நாடு முழுவதும் 92 களப்பு நீர்நிலைகள் காணப்படுகின்ற நிலையில் நோர்வே அரசாங்கம் இவ் விடயத்தில் தன்னுடைய பொருளாதார மற்றும் தொழில் நுட்ப உதவிகளை வழங்குவதுடன் தமது அனுபவத்தையும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

அமைச்சரின் இக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நோர்வே தூதுவர், ஏற்கனவே இலங்கையின் கடற்றொழில் சார் அபிவிருத்தி திட்டங்களுக்கு நோர்வே பெருமளவு நிதியை செலவிட்டுள்ளதாகவும், எதிர்காலத்திலும் அமைச்சர் கேட்டுக் கொண்டதைப் போன்று தொழில் நுட்ப உதவி உட்பட்ட உதவிகளை வழங்குவததோடு அனுபவங்களை தொடர்ந்தும் பகிர்ந்து கொள்ளத் தயாராக இருப்பதாவும் தெரிவித்தார். மேலும், கடற்றொழில் அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத் திட்டங்களிலும் நாரா எனப்படும் தேசிய நீரியல் வள ஆராய்ச்சி நிறுவனத்துடனும் இணைந்து செயற்பட நோர்வே அரசாங்கம் ஆர்வமாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் நோர்வேயில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுகின்ற மீன்பிடிப் படகுகளை உருவாக்குதல் மற்றும் மீன்களை பழுதடையாமல் பாதுகாத்து பதனிடுதல் மற்றும் களஞ்சிப்படுத்தல் செயற்பாடுகளை இலங்கையில் விருத்தி செய்வதற்கு தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குதவற்கும் நோர்வே ஆர்வமாக இருப்பதாகவும் தெரித்தார்.

## கிராமங்களுக்கு நேரடியாக...

காலத்தில் நாடு முழுவதும் மேற்கொண்ட விஜயங்களின்போது அது தெளிவாகியதாகவும் குறிப்பிட்டார்.

வாழ்வாதார பிரச்சினை, காணி மற்றும் வீடின்மை, காணிகளுக்கு உறுதிகள் இல்லாதிருத்தல், சுகாதார மற்றும் போக்குவரத்து சேவைகள் போதுமானதாக இல்லாமை, பிள்ளைகளின் கல்வி பிரச்சினைகள் மற்றும் பாடசாலையின் குறைபாடுகள், விவசாய மற்றும் குடிநீருக்கான நீரை பெற்றுக்கொள்வதில் உள்ள பிரச்சினை, காட்டு யானைகள் ஊருக்குள் வருதல், விவசாய உற்பத்திகளை விற்க முடியாமை அவ்வாறு இனங்காணப்பட்ட பிரச்சினைகளில் முதன்மையானவையாகும்.

கிராமிய மக்களுக்கு உள்ள கஷ்டங்களை புரிந்துகொண்டு, அவற்றை உடனடியாக தீர்ப்பதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய அரச நிறுவனங்களின் ஊதாசீனம் மற்றும் செயற்திறனின்மை போன்றவை பிரிதொரு பிரச்சினையாகும்.

ஜனாதிபதி, மிக முக்கிய கிராமங்களில் கண்காணிப்பு விஜயங்களை மேற்கொள்ளும்போது மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும். செலவழிக்கப்படும் பணம் குறைத்துக்கொள்ளப்படும். கொழும்பிலிருந்து அதிகாரிகள் குழு அழைத்துச் செல்லப்பட மாட்டார்கள்.

மக்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பிரதேச அதிகாரிகள் மாத்திரம் பங்குபற்றுவர். மக்கள் சந்திப்புக்கு வருகை தந்து, தமக்குள்ள பிரச்சினைகளை அறியத்தருமாறு ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

முன்வைக்கப்படும் பிரச்சினைகளுக்கு முடியுமான வகையில் உடனடியாக தீர்வுகளை வழங்குவது ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும். தீர்ப்பதற்கு காலம் எடுக்கக்கூடிய பிரச்சினைகள் மாத்திரம் பின்னர் தீர்த்து வைப்பதற்காக குறித்துக் கொள்ளப்படும்.

நாளை கண்காணிப்பு விஜயத்திற்காக தெரிவு செய்யப்பட்டிருப்பது ஹல்துமுல்லை பிரதேச செயலக பிரிவின் இரண்டு கிராம சேவகர் பிரிவுகளாகும்.

அதில் 222 குடும்பங்கள் வசிக்கின்றனர். அவர்களின் பிரதான வாழ்வாதாரமாக இருப்பது நெல், மிளகு மற்றும் கறுவா பயிர்ச் செய்கையுடன்கூடிய கலப்பு விவசாயம் ஆகும். மக்கள் சந்திப்பு இடம்பெறும் குமாரதென்ன பாடசாலையில் 17 மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.

# ஆஸி. கரையில் சிக்கிய 380 திமிங்கிலங்கள் பலி



அவுஸ்திரேலியாவின் தொலைதூர தெற்குப் பகுதி கடற்கரையில் சிக்கி இருக்கும் சுமார் 470 திமிங்கிலங்களில் அதிகமானவை இறந்திருப்பதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். தொடர்ந்து உயிருடன் இருப்பவற்றை காப்பாற்றுவதற்கு மீட்பாளர்கள் போராடி வருகின்றனர்.

டஸ்மேனிய மாநிலத்தில் மக்யூரி துறைமுகத்தின் கரடுமுரடான மணல்திட்டு பகுதியில் பைலட் இன திமிங்கிலங்கள் சிக்கி இருப்பது கடந்த திங்கட்கிழமை முதல் முறை அவதானிக்கப்பட்டது.

கடந்த இரண்டு நாட்களாக கடுமையான மீட்பு நடவடிக்கைகள் இடம்பெற்று வந்த நிலையில் குறைந்தது 380 திமிங்கிலங்கள் இறந்திருப்பதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். மெக்யூரி துறைமுகத்திற்கு அருகே திமிங்கிலங்கள் இறந்த நிலையில் கரை ஒதுங்கி இருக்கும் காட்சிகளை அதிகாரிகள் வானில் இருந்து படம்பிடித்துள்ளனர்.

நேற்று பின்னேரம் சுமார் ஐம்பது திமிங்கிலங்கள் விடுவிக்கப்பட்டு ஆழ் கடலுக்கு அனுப்பப்பட்டன. இந்நிலையில் தொடர்ந்து 30 திமிங்கிலங்கள் அந்த மணல்திட்டில் உயிருடன் உள்ளன. இந்த வகை திமிங்கிலங்கள் 23 அடி நீளத்திற்கு வளரும் என்பதோடு 3 தொன் எடை வரை இருக்கும்.

டஸ்மேனிய மாநிலத் தலைநகர் ஹோபார்டில் இருந்து சுமார் 200 கிலோமீற்றர் தூரத்திலேயே இந்த திமிங்கிலங்கள் நிர்க்கதியான நிலையில் சிக்கியுள்ளன. இது நவீன அவுஸ்திரேலிய வரலாற்றில் மிகப் பெரிய சம்பவம் என்பதோடு உலகில் மிகப் பெரிய சம்பவங்களில் ஒன்றாகவும் உள்ளது. எனினும் இவ்வாறு திமிங்கிலங்கள் கூட்டமாக வந்து சிக்கிக் கொள்ளும் நிகழ்வு விஞ்ஞானிகளுக்கு மத்தியில் மர்மமாக உள்ளது.

# ஒக்டோபர் நான்கில் உம்றா யாத்திரை மீண்டும் ஆரம்பம்



கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக ஏழு மாதங்களுக்கு முன்னர் இடைநிறுத்தப்பட்ட உம்றா யாத்திரைக்கு வரும் ஒக்டோபர் 4 ஆம் திகதி தொடக்கம் படிப்படியாக அனுமதி அளிக்கப்படும் என்று சவூதி அரேபிய உள்துறை அமைச்சு அறிவித்துள்ளது. இஸ்லாமிய புனிதத் தலங்களில் கொரோனா தொற்று பரவும் அச்சம் காரணமாக கடந்த மார்ச் மாதம் உம்றா யாத்திரை இடைநிறுத்தப்பட்டதோடு உலகெங்கும் இருந்து மில்லியன் கணக்கான முஸ்லிம்கள் ஒன்றுகூடும் ஆண்டின் ஹஜ் கடமையும் மட்டுப்படுத்தப்பட்டதாக இடம்பெற்றது.

இந்நிலையில் முதல் கட்டமாக வரும் ஒக்டோபர் 4 ஆம் திகதியில் இருந்து உம்றா வழிபாட்டில் ஈடுபட ஒரு நாளைக்கு சவூதி அரேபியாவுக்குள் இருக்கும் பிரஜைகள் மற்றும் குடியிருப்பாளர்கள் 6,000 பேருக்கு அனுமதி அளிக்கப்படும் என்று உள்துறை அமைச்சு வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

உம்றாவில் பங்கேற்போர் எண்ணிக்கை நாளுக்கு 20,000 ஆக அதிகரிக்கப்பட்டு வரும் நவம்பர் 1 ஆம் திகதி தொடக்கம் சவூதிக்கு வெளியில் உள்ள யாத்திரிகர்களுக்கும் அனுமதி அளிக்கப்படவுள்ளது. உலகில் மில்லியன் கணக்கான முஸ்லிம்களை ஈர்க்கும் உம்றா யாத்திரை ஆண்டின் எந்த நேரத்திலும் ஈடுபட முடியுமான வழிபாடாகும்.

இந்தப் பெருந்தொற்றின் அச்சுறுத்தல் விலகும்போது முழுமையான வழக்கமான அளவில் யாத்திரிகர்களுக்கு அனுமதி அளிக்கப்படும் என்று அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வளைகுடா பிராந்தியத்தில் அதிகபட்சமாக சவூதி அரேபியாவில் 330,000க்கும் அதிகமான கொரோனா வைரஸ் தொற்று சம்பவங்கள் பதிவாகி இருப்பதோடு 4,500க்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

## மலேசியாவில் திடீர் ஆட்சி மாற்றத்திற்கு வாய்ப்பு:

# பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவு இருப்பதாக அன்வர் இப்ராஹிம் அறிவிப்பு

புதிய அரசு ஒன்றை அமைப்பதற்கு தேவையான பெரும்பான்மை பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கிடைத்திருப்பதாக மலேசிய எதிர்க்கட்சித் தலைவர் அன்வர் இப்ராஹிம் நேற்று தெரிவித்துள்ளார்.

கடந்த 2018 ஆம் ஆண்டு தேர்வு செய்யப்பட்ட ஆளும் கூட்டணி அரசு அதிகாரப் போட்டி காரணமாக ஏழு மாதங்களுக்கு முன் கவிழ்க்கப்பட்ட நிலையிலேயே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

தற்போதைய பிரதமர் முஹ்யத்தீன் யாசினின் தலைமை குறித்து அதிருப்தி அடைந்துள்ள பல்வேறு கட்சிகளின் எம்.பிக்கள் பலரும் தம்மை அணுகி இருப்பதாக அன்வர் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.

தனது மனைவியுடன் நேற்று செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்ற அவர், பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு காரணமாக முஹ்யத்தீன் நிர்வாகம் வீழ்ச்சி அடையும் என்றும் மக்கள் விருப்புடன் தமது அரசு ஆட்சி அமைக்கும் என்றும் தெரிவித்தார்.

எனினும் தமக்கு ஆதரவளிப்பவர்களின் எண்ணிக்கையை வெளியிட மறுத்த அவர், மன்னருடனான சந்திப்புக்குப் பின்னர் அதனை வெளியிடுவதாகவும் தெரிவித்தார். மன்னர் தற்போது கோலாலம்பூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

எதிர்வரும் திங்கட்கிழமைக்குள் மாமன்னரைச் சந்திக்க இயலும் என தாம் நம்புவதாக அவர் கூறியுள்ளார்.



"கடவுளுக்கு நன்றி. தற்போது எனக்கு உறுதியான, போதுமான பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு உள்ளது. இதுகுறித்து மாமன்னரிடம் தெரிவிப்பேன்" என்றார் அன்வர்.

அவரது இந்த அறிவிப்பை அடுத்து மலேசிய பங்குச்சந்தைப் புள்ளிகள் 2 வீதம் அளவுக்குக் குறைந்தன.

அன்வரின் அறிவிப்பில் நம்பிக்கை ஏற்படும் பட்சத்தில் மாமன்னர் அவரை சந்திக்கக்கூடும். எனவே மாமன்னரின் முடிவுக்காக மலேசிய மக்கள் காத்திருக்கின்றனர்.

2018 ஆம் ஆண்டு அதிகாரத்தை இழந்த கட்சிகளுடன் ஆளும் பகத்தான் ஹரப்பான் கூட்டணியில் அதிருப்தி அடைந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்தே ஒரு வார அரசியல் இழுபறிக்கு பின் கடந்த மார்ச் மாதம் புதிய அரசு ஒன்று உருவாக்கப்பட்டது. அன்வர் தலைமையிலான பகத்தான் ஹரப்பான் கூட்டணி கடந்த 2018ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் அப்போதைய பிரதமர் நஜீப் தலைமையிலான அரசை வீழ்த்தி ஆட்சியைப் பிடித்தது. பகத்தான் ஹரப்பான் கூட்டணி சார்பில் மகாதீர் மொஹம்மத் பிரதமரானார். அச்சமயம் சிறையில் இருந்த அன்வர் இப்ராஹிம் பின்னர் விடுதலையானார்.

மகாதீர் மொஹம்மதிற்கு பின்னர் மலேசியாவின் அடுத்த பிரதமராக அன்வர் இப்ராஹிம் பொறுப்பேற்பார் என்று முன்னர் எதிர்பார்க்கப்பட்டது. மகாதீர் திடீரென்று பதவி விலகியதை அடுத்துத் முஹ்யத்தீன் யாசின் பிரதமர் பதவியைக் கைப்பற்றினார்.

# ஐ.நா பொதுக் கூட்டத்திலும் சீனா – அமெரிக்கா முறுகல்



கொரோனா வைரஸ் தொற்றை சீனா பரப்பியதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் நியூயோர்க்கில் நடைபெறும் ஐ.நா ஆண்டு பொதுச்சபைக் கூட்டத்தில் குற்றம் சாட்டியது சீன மற்றும் அமெரிக்க முறுகலை மேலும் அதிகரித்துள்ளது.

இந்தப் பெருந்தொற்றுக்கு சீனா பொறுப்புக் கூற வேண்டும் என்று டிரம்ப் குறிப்பிட்டார்.

எனினும் எந்த நாட்டுடனும் பனிப்போர் ஒன்றில் ஈடுபட தமது நாடு எதிர்பார்க்கவில்லை என்று சீன ஜனாதிபதி சி ஜின்பின் தனது உரையில் குறிப்பிட்டார். பல விவகாரங்கள் தொடர்பில் உலகின் இரு வல்லரசு நாடுகளான சீனா மற்றும் அமெரிக்காவுக்கு இடையே பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்நிலையில் வீடியோ மாநாடு வழியாக நடைபெறும் பொதுச் சபைக் கூட்டத்தில் உலகத் தலைவர்கள் முன்னர் பதிவு செய்யப்பட்ட உரைகளையே வழங்கியுள்ளனர்.

சீனா தனது நாட்டில் உள்நாட்டு விமான சேவைக்கு தடைவிதித்துவிட்டு வெளிநாட்டு விமான சேவைக்கு அனுமதி வழங்கி கொரோனாவை உலகிற்கு பரப்பி இலட்சக்கணக்கான உயிரிழப்புகளை ஏற்படுத்தி விட்டதாகவும் இதன்போது டிரம்ப் சாடினார்.

# கொவிட்–19: அமெரிக்காவில் 200,000ஐ தொட்ட உயிரிழப்பு



கொரோனா வைரஸ் தொற்றினால் அமெரிக்காவில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 200,000ஐ தாண்டி இருப்பதாக ஜோன் ஹொப்கின்சன் பல்கலைக்கழக தரவுகள் தெரிவிக்கின்றன.

உலகில் வேறு எந்த நாட்டை விடவும் அமெரிக்காவில் 6.8 மில்லியனுக்கும் அதிகமானோருக்கு நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் வடக்கு டகோடா மற்றும் உத்தாஹ் உட்பட பல மாநிலங்களில் நோய்த் தொற்றுச் சம்பவங்கள் அதிகரித்திருக்கும் நிலையிலேயே உயிரிழப்பு எண்ணிக்கை 200,000ஐ தொட்டுள்ளது.

இந்த புதிய உயிரிழப்பு எண்ணிக்கை பயங்கர விடயம் என்று குறிப்பிட்ட அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் இந்த வைரஸை சீனா மட்டுப்படுத்தி இருக்க வேண்டும் என்று சாடினார்.

எனினும் வைரஸ் தொற்றுக்கு எதிரான தமது செயற்பாடுகளை பாதுகாத்து பேசிய டிரம்ப், கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை எடுக்காமல் இருந்திருந்தால் இரண்டு, இரண்டரை அல்லது மூன்று மில்லியன் பேர் இறந்திருக்கக் கூடும் என்றார்.

எனினும் டிரம்பின் நிர்வாகம் நோய்ப்பரவலைக் கையாளத் தவறியதைப் புள்ளிவிவரங்கள் காட்டுவதாக விமர்சகர்கள் கருதுகின்றனர்.

# நடிகர் டொம் குரூஸ் விண்வெளிப் பயணம்

பிரபல ஹொலிவுட் நடிகர் டொம் குரூஸ் விண்வெளிக்குச் செல்லவுள்ளார். விண்வெளியில் படமாக்கப்படும் திரைப்படத்திற்காக அவர் செல்வது அதிகாரபூர்வமாக உறுதிசெய்யப்பட்டுள்ளது.

எலன் மாஸ்க் அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையமான நாசா ஆகிய தரப்புகளுடன் அவர் கைகோர்த்து அதில் ஈடுபடுவது குறித்து இந்த ஆண்டு ஆரம்பத்தில் தகவல்கள் வெளிவந்தன.

அடுத்த ஆண்டு ஒக்டோபரில் அவர் விண்வெளி செல்வது உறுதியாகிவிட்டதாக ஊடகங்கள் கூறுகின்றன. அந்தத் திரைப்படத்தின் இயக்குநராக டவுக் லிமன் உள்ளார்.

அல்மனக் விண்கலம், நாசா ஆகியவை விண்வெளித் திரைப்படத் திட்டம் குறித்து ட்விட்டரில் உறுதிசெய்துள்ளன. அந்தப் படத்திற்கான மொத்த செலவு சுமார் 200 மில்லியன் டொலர் என மதிப்பிடப்பட்டுள்ளதாக என்.எம்.ஈ செய்தி நிறுவனம் தெரிவித்தது. இந்த விண்வெளிப் பயணத்திற்கான பயிற்சிகளிலும் டொம் குரூஸ் ஈடுபட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.



## இஸ்ரேலுடன் உறவுக்கு எதிர்ப்பு:

# அரபு லீக் பொறுப்பை பலஸ்தீனம் நிராகரிப்பு




அரபு உடன்படிக்கையை அவமதித்து இஸ்ரேலுடன் உறவை ஏற்படுத்தியதைக் கண்டித்து அரபு லீக் கூட்டங்களின் தற்போதைய தலைமை பொறுப்பில் இருந்து பலஸ்தீனம் விலகிக் கொண்டுள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் பஹ்ரைன் நாடுகள் இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்தியது துரோகச் செயலாகக் கருதும் பலஸ்தீனம், அது பலஸ்தீன சுதந்திர நாட்டை உருவாக்குவதில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி இருப்பதாக கூறுகிறது.

இஸ்ரேலுடன் இராஜதந்திர உறவை ஏற்படுத்தியதற்கு அரபு லீக் மூலம் கண்டனம் வெளியிடும் பலஸ்தீனத்தின் முயற்சி இம்மாத ஆரம்பத்தில் தோல்வி அடைந்தது.

இந்நிலையில் அடுத்த ஆறு மாதங்களுக்கு அரபு லீக் கூட்டங்களுக்கு தலைமை பொறுப்பு பலஸ்தீனத்திற்கு கிடைத்துள்ளது.

எனினும் அந்தப் பொறுப்பு தமக்குத் தேவையில்லை என்று ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையின் ரமல்லா நகரில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் பலஸ்தீன வெளியுறவு அமைச்சர் ரியாத் அல் மாலிக்கி தெரிவித்தார்.

"லீக் கௌன்சிலின் தற்போதைய அமர்வின் தலைமை பொறுப்பை கைவிட பலஸ்தீனம் தீர்மானித்துள்ளது. (இஸ்ரேலுடன்) இராஜதந்திர உறவை ஏற்படுத்த அரபிகள் அவசரம் காட்டும்போது அதன் தலைமை கௌரவமாக இருக்காது" என்று மாலிக்கி தெரிவித்தார்.

# சிகிச்சை முடிந்து வெளியேறினார் அலெக்சி நவல்னி



நஞ்சூட்டப்பட்ட ரஷ்ய எதிர்க்கட்சி தலைவர் அலெக்சி நவல்னி சிகிச்சை முடிந்து ஜெர்மனி மருத்துவமனையில் இருந்து வெளியேறியுள்ளார்.

நவல்னியின் உடல்நிலை முன்னேற்றம் கண்டிருப்பதால் அவர் மீதான தீவிர மருத்துவ பராமரிப்பு முடிவடைந்துள்ளது என்று பெர்லின் நகரில் உள்ள சரிட் மருத்துவமனை தெரிவித்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினை கடுமையாக விமர்சித்து வந்த நவல்னிக்கு நவிசொக் என்ற நரம்பு மண்டலத்தை தாக்கும் விசம் செலுத்தப்பட்டிருப்பதாக ஜெர்மனி குறிப்பிட்டது.

கடந்த ஓகஸ்ட் 20 ஆம் திகதி சைபீரியாவில் இருந்து வரும் விமானம் ஒன்றில் மயங்கி விழுந்ததை அடுத்தே அவர் ஜெர்மனி மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

ஜனாதிபதி புட்டினின் உத்தரவின் பேரிலேயே அவர் விசமூட்டப்பட்டிருப்பதாக நவல்னியின் ஆதரவாளர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.

# நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் குடியிருக்காதோரின் காணி உரிமைகளை ரத்துச் செய்ய பணிப்பு

ஓமந்தை விஷேட நிருபர்

ஓமந்தையில் அரச ஊழியர்களுக்காக வழங்கப்பட்ட காணிகளில் வீடுகளை அமைத்தும் இதுவரைக் குடியிருக்காதோரின் காணிகளை ரத்துசெய்யுமாறு வட மாகாண ஆளுநர் எம்.சாள்ஸ் தெரிவித்துள்ளார். இக்காணிகளை வீடுகள்,காணிகள் இல்லாதோருக்கு வழங்குமாறும் ஆளுநர் கேட்டுள்ளார்.வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்திலே ஆளுநர் இதைத் தெரிவித்தார்.

வவுனியா மவாட்ட ஒருங்கிணைப்புக் கூட்டம் ஆளுநர் சாள்ஸ் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபனின் இணைத் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் வவுனியா மாவட்டத்தில் கடந்த 2009 ஆண்டு அரச உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்ட காணிகள், அவற்றில் குடியேறியோர், வீடுகளை நிர்மாணித்தும் இதுவரை அவற்றில் குடியேறாதோர் ஆகியோரின் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டன. ஓமந்தை பகுதியில் உள்ளோருக்கே இக்காணிகள் வழங்கப்பட்டன.

இவற்றில் 131 வீடுகள் யாருமற்ற நிலையில் வெறுமையாக இருப்பதாக வீடமைப்பு அதிகார சபை அதிகாரி ஒருவர் இதன்போது தெரிவித்தார்.

இதற்கு கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், ஓமந்தையைப் போலவே வவுனியா சாளம்பைக்குளம் மற்றும் சிங்கள பிரிவுகளிலும் வீட்டுத் திட்டத்தைப் பெற்றபின்னர் பொதுமக்கள் வசிக்காத வீடுகள் பல இருக்கின்றன. அவையும் அரசினால் வழங்கப்பட்ட வீட்டுத்திட்டங்களே. எனவே அவற்றிற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனத் தெரிவித்தார்.

ஓமந்தை அரச ஊழியர் வீட்டுத் திட்டத்தில் வீடுகள் உள்ள பலருக்கு வவுனியா நகரப் பகுதியிலும் வீடுகள் உள்ளன. இதுபற்றி எனக்கும் தெரியும்.

எனவே நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் வசிக்காதவர்களது காணிகளை ரத்துசெய்து விட்டு, வீடற்றோருக்கு அவற்றை வழங்க நடவடிக்கைகளை எடுக்குமாறு ஆளுநர் தெரிவித்தார்.

சாளம்பைக்குளம் மற்றும் சிங்கள பகுதிகளில் இவ்வாறான நிலைமைகள் இருந்தால் இதுபற்றியும் ஆராயுமாறு பிரதேசசெயலாளர்களுக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார்.

# அம்பாள்புரம், ஆறாம்கட்டை பகுதிகளில் மாணவர்கள் அவதி



(பரந்தன் குறூப்நிருபர்)

முல்லைத்தீவு அம்பாள்புரம், ஆறாம்கட்டை பகுதிகளில் உரிய போக்குவரத்து வசதிகள் செய்யப்படாததால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இப்பகுதியிலுள்ள சுமார் 45 இற்கும் மேற்பட்ட மாணவர்கள்18 கிலோ மீற்றர் தூரம் கால்நடையாகவே பாடசாலைக்கு செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. சுமார் பத்து வருடங்களாக இம்மாணவர்கள் இந்த அவல நிலையை எதிர் கொள்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள மிகவும் பின்தங்கிய பகுதியிலே, அம்பாள்புரம் ஆறாம்கட்டை கொல்லவிளாங்குளம் ஆகிய கிராமங்கள் உள்ளன. போக்குவரத்து வசதியில்லாதமை, பிரதான வீதி புனரமைக்கப்படாமை என்பவற்றால் இப்பகுதி பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் தொடர்ந்தும் பல்வேறு கஸ்டங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

கடுமையான வெயில், மழை மற்றும் நீண்ட காட்டுப் பாதை எனப் பல்வேறு கஸ்டங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக பெற்றோர்களும் மாணவர்களும் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி மாணவர்களின் போக்குவரத்துப் பிரச்சினை தொடர்பில் 2010ம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக முறையீடு செய்தும் இதுவரை இப்பிரச்சினைக்கு எவரும் தீர்வு காண முன்வரவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# வடமாகாணத்தில் சுற்றுலா அபிவிருத்தி திட்டம் ஆரம்பம்

(பருத்திதுறை விசேட நிருபர்)





உலக சுற்றுலா தினத்தை முன்னிட்டு வட மாகாணத்தில் சுற்றுலா துறை அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம் நேற்று (23) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சனச இண்டர் நஷனல் நிறுவனம் கனடாவின் நிதி உதவியுடன் ,டி ஐ டி அமைப்பின் ஆலோசனையின் கீழ்,இத்திட்டம் ஆரம்பமானது.

வட மாகாணத்தில் உள்ளூர் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் இந்நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

"சுற்றுலா துறை அபிவிருத்தி வெகுமதி சங்கிலி " என்னும் கருப்பொருளில்இச்செயற்திட்டம்ஆரம்பமாகியுள்ளது.

ஆரம்ப நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தனியார் விடுதியொன்றில் வட மாகாண ஆளுநர் திருமதி பி எஸ் எம் சாள்ஸ் தலைமையில் இடம்பெற்றது.கொரோனாவுக்கு பின்னர் உணவகம் மற்றும் விடுதிகளின் பாதுகாப்பு மற்றும் நடவடிக்கை தொடர்பில் விளக்கமளிக்கும் செயலமர்வும் இதன்போது இடம்பெற்றது. அத்துடன் விடுதிகள் மற்றும் உணவகங்களுக்கான கொரோனா பாதுகாப்பு உபகாரணங்களும் இங்கு வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் சனச இண்டர் நஷனல் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் சமடணி கிரிவந்டெனிய,சனச அபிவிருத்தி வங்கியின் தலைவர் லக்ஸ்மன் அபயசேகர, நிகழ்ச்சி திட்ட தலைவர் ஹர்ஷி அபேநாயக்க, உட்பட விடுதி, உணவகம் மற்றும் சுற்றுலா கற்கை நெறியை விளக்கும் நிறுவன பிரதி நிதிகள் எனப் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

# இளங்கோபுரத்தில் வாள்வெட்டு; குடும்பஸ்தர் படுகாயம்

(புதுக்குடியிருப்பு நிருபர்)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட இளங்கோபுரம் பகுதியில், நேற்று முன்தினமிரவு (22) இடம்பெற்ற வாள்வெட்டு சம்பவத்தில், குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்தார். இதையடுத்து சிகிச்சைக்காக இவர், யாழ். போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

நாற்பது வயதுடைய குடும்பஸ்தரான க.காந்தராஜ் என்பவரே வாள்வெட்டிற்கு இலக்காகியுள்ளார்.இவ்வாள் வெட்டுச் சம்பவம் தொடர்பில்,பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் சட்டவிரோத செயற்பாடுகளால் சிறுவர்கள் பாதிக்கப்படுவதாகவும் இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தவர் மீதே வாள்வெட்டு தாக்குதல் இடம்பெற்றதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர். இது குறித்து புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் கேட்டபோது, வாள்வெட்டுக் குழு தொடர்பில் மூவரைக் கைது செய்ததாகத் தெரிவித்தனர்.

## இளைஞர்களின் முன்மாதிரியான செயற்பாடுகளுக்கு யாழில் வரவேற்று

புளியங்கொட்டை, விதைகளை யாழ்பாணத்தில் காணப்படும் பெரு நிலங்களில் இளைஞர்கள் விசிறி வருகின்றனர்.

நாயன்மார்கட்டு,செம்மணி பிரதேசங்களிலும் வாதரவத்தை, கைதடி, வண்ணாத்திப்பாலம் போன்ற வெளிகளிலுமே இவ்வாறு புளியங்கொட்டைகளை விசிறியுள்ளனர்.

இந்நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபடு வதற்கும் இவ்விளைஞர்கள் தீர்மானித்து உள்ளனர்.மேலும் இப்பகுதிகளில் பனை விதைகளை நடுவதற்கென, பனங் கொட்டைகளை சேகரிக்கும் பணிகளிலும் இவர்கள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



சர்வதேச சைகை மொழிகள் தினத்தை முன்னிட்டு தென்மராட்சி செவிப்புலனற்றோர் நலன்புரி நிறுவனத்தின் ஏற்பாட்டில், விழிப்புணர்வுப் பேரணி ஒன்று இடம்பெற்றது. சாவகச்சேரி பகுதியில் நேற்று (23) புதன்கிழமை இடம்பெற்ற இந்நிகழ்வில், தென்மராட்சியில் உள்ள செவிப்புலனற்றோர் ஒன்றிணைந்து மீசாலையிலிருந்து சாவகச்சேரி பஸ் நிலையம் வரை பேரணியாக வந்தனர்.சைகை மொழியின் உரிமைகள், அவற்றின் அவசியம் மற்றும் பாதுகாப்புக் குறித்து சமூகத்திற்கு எடுத்துக் காட்டும் வகையில் இப்பேரணி இடம்பெற்றது. (படம்: சாவகச்சேரி விசேட நிருபர்)

# காணிப்பிரச்சினைக்கு தீர்வு கோரி குடும்பப் பெண் தீக்குளிக்க முயற்சி

(கோவில்குளம் குறூப் நிருபர்)



காணிப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்காததால் தீக்குளிக்க முயன்ற குடும்பப் பெண்ணை பொலிஸார் காப்பாற்றியுள்ளனர். இச்சம்பவம் நேற்றுக் காலை (23) வவுனியா பிரதேச செயலக வளாகத்தில் இடம்பெற்றது.

இதையடுத்து அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது. இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கோவிற்குளம் பகுதியில் வசித்து வரும் இலட்சுகாந்தன் ஞானசுந்தரி என்பவருக்கும் அவரது கணவரின் தாயாருக்குமிடையில் காணிப்பிரச்சினை (பெயர்மாற்றம்) இருந்து வந்துள்ளது. இக்காணிப் பிரச்சினைக்கு பல வருடங்களாக தீர்வு கிடைக்காததாலே, இப்பெண் தீக்குளிக்க முயன்றுள்ளார்.

வவுனியா பிரதேச செயலக வளாகத்தில் மண்ணெண்ணெய் தீப்பெட்டியுடன் காணிப் பிரச்சினை தொடர்பான கடிதங்களை தாங்கிய பதாகையையும் ஏந்தியவாறு இப்பெண் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தார்.

இதனால் அவ்விடத்தில் சற்று பதட்டமான நிலைமை ஏற்பட்டது. இதையடுத்து வவுனியா சிறு குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் விஜயம் செய்து, பெண்ணிடமிருந்த மண்ணெண்ணெய் மற்றும் தீப்பெட்டியை மீட்டெடுத்தனர்.

அதன்பின்னர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண்ணும் பொலிஸாரும் வவுனியா பிரதேச செயலாளர் கமலதாசனுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.பின்னர் பெண்ணின் மாமியாரை அழைத்து பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டது. காணிப்பிரச்சினைக்கு தீர்வு தருவதாக பிரதேச செயலாளர் வாக்குறுதியளித்ததையடுத்து பிரதேச செயலகத்தில் காணப்பட்ட பதட்ட நிலை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

# வவுனியாவில் குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா செட்டிகுளம் மெனிக்பாம் பகுதியில் தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தரின் சடலம் ஒன்றை பொலிஸார் மீட்டுள்ளனர்.

வீட்டில் தூங்கச் சென்ற இந்நபர் அறைக்குள் சென்று தூக்கில் தொங்கியுள்ளார். நேற்று காலை எழுந்திருந்த மனைவி, தனது கணவன் தூக்கில் தொங்கிய நிலையில் இருப்பதை அவதானித்தார். இதுபற்றி பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டு சடலம் மீட்கப்பட்டது. பிரேத பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

இச்சம்பவத்தில் மெனிக்பாம் பகுதியைச் சேர்ந்த சு.நாகேந்திரன் வயது 34 என்ற குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.




உடுவில் மகளிர் கல்லூரியின் அதிபர் கலாநிதி திருமதி பற்றீசியா சுனித்தா ஜெபரட்ணம், கல்வி மற்றும் சமூக அபிவிருத்திக்கான கௌரவ கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.அமெரிக்காவிலுள்ள உலக தமிழ் பல்கலைக்கழகம் இந்த கௌரவத்தை அவருக்கு வழங்கியது. கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இந்நிகழ்வை கல்லூரி சமூகத்தினர் ஏற்பாடு செய்திருந்தனர். தென்னிந்திய திருச் சபையின் பேராயர் கலாநிதி டானியல் தியாகராஜா, முகாமையாளர் திருமதி தயாளினி தியாகராஜா மற்றும் செயலாளர், கலாநிதி வண. சொலமன் ஆகியோரும் இதில் கலந்து சிறப்பித்தனர்.

(படம்: யாழ் தினகரன் விசேட நிருபர்)

# மன்னார் விவசாயிகளின் பிரச்சினைக்கு தீர்வுகாண அதிகாரிகள் கள ஆய்வு விஜயம்

(தலைமன்னார் விஷேட நிருபர்)

மன்னார் கட்டுக்கரைக்குளத்துக்கு வரும் கழிவு நீர் வெளியேறும் பழைமையான வாய்க்காலை சிலர் ஆழப்படுத்தியுள்ளதால், குளத்துக்கு நீர்வருவது தடைப்பட்டு, இக்குளத்தை நம்பி செய்கை பண்ணப்படும் வேளாண்மைச் செய்கை பாதிக்கப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால்,இதுபற்றி கள ஆய்வுகளை மேற்கொண்டு உடனடித் தீர்வு காணவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மன்னார் கட்டுக்கரைக்குளத்திற்கு மல்வத்தோயாவிலிருந்து வரும் நீர் அதிகமானால், இந்நீரை வேறு பக்கம் திருப்ப 16ஆம் மைல் பகுதியில் உள்ள பழைய வடிவாய்க்கால் பயன்படுத்தப்படுகின்றது. இதற்கென மன்னார் பிராதன குளமாகிய கட்டுக்கரைக் குளம் அமைக்கும் காலத்திலேயே இவ்வாய்க்கால் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டுரைக்குளத்தின் மேல் பக்கமாக சுமார் ஆயிரம் ஏக்கரில் விவசாயமும் செய்கை பண்ணப்படுகிறது.

இதில் ஒரு சில விவசாயிகள் காடுகளை துப்புரவாக்கி இடங்களை பிடித்துள்ளனர். சுமார் 200 ஏக்கருக்கு மேல் பலாத்காரமாக இப்பகுதியில் நெற்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.



மறவன்புலவு கிராம பொதுநோக்கு மண்டபம் கிராம அபிவிருத்திச் சபையின் வேண்டுகோளிற்கு இணங்க, மீள் புனரமைக்கப்பட்டுள்ளது. சீலெக்ஸ் காற்றாலை நிறுவனத்தினர் இதைப் புனரமைத்துள்ளனர். இப்பொதுநோக்கு மண்டபத்தை யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் அண்மையில் திறந்து வைத்தார். இதில் சீலெக்ஸ் காற்றாலை நிறுவன அதிகாரிகளும் கலந்து கொண்டனர். அன்றைய தினம் மறவன்புலவு கமக்கார அமைப்பிற்கான அலுவலகம் மற்றும் உரக் களஞ்சியம் ஆகியவையும் திறந்து வைக்கப்பட்டன. (படம்: சாவகச்சேரி விசேட நிருபர்)

# திலீபனின் நினைவு தினம்: நடைபயணத்தை ஒழுங்கு செய்தோரை ஆஜராக உத்தரவு

(ஓமந்தை விஷேட நிருபர்)

தியாகி திலீபனின் நினைவாக வவுனியாவிலிருந்து நல்லூர் வரையிலான நடை பயணத்தை ஏற்பாடு செய்தவர்களை நீதிமன்றில் ஆஜராகுமாறு வவுனியா நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தியாகி திலீபனின் நினைவாக கடந்த 16ஆம் திகதி தமிழ் தேசிய மக்கள் முண்ணியினர் நடைபயணம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தனர்.இந்நடைபவனி வவுனியா நகர சபை, பொங்கு தமிழ் தூபிக்கு முன்பாகவிருந்து நல்லூர் வரையிலும் செல்ல ஏற்பாடாகியிருந்தது.

இந்நடை பயணத்தை நிறுத்துமாறு ஏற்பாட்டாளர்களுக்கு பொலிஸார் தெரிவித்ததுடன், அதற்கான தடை உத்தரவையும் நீதிமன்றில் கோரியிருந்தனர். இதற்கமைய இந்த நடை பயணத்திற்கு நீதிமன்றம் தடைவிதித்து உத்தரவிட்டிருந்தது. இது தொடர்பாக மன்றில் அறிக்கை செய்வதற்காக நடை பயணத்தை ஏற்பாடு செய்த வவுனியா நகர சபை உறுப்பினர் பி.ஜானுயன், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ. கஜேந்திரன் ஆகியோரை எதிர்வரும் 28 நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைக்கப்பட்டுள்ளனர்.

போதைப் பொருள் இல்லாத நாட்டை கட்டியெழுப்ப

# விளையாட்டுத்துறை வழங்கும் பங்களிப்பு மிகப் பெறுமதியானது

## கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யகம்பத்

புளியந்தீவு குறூப் நிருபர்

போதைப் பொருள் இல்லாத நாட்டை கட்டியெழுப்புவதற்கு விளையாட்டுத் துறை வழங்குகின்ற பங்களிப்பு மிக மிக பெறுமதியானதென கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி அனுராதா யகம்பத் தெரிவிக்கிறார்.

அம்பாறை ஹாடி தொழில்நுட்பக் கல்லூரியில் இலங்கையை பிரதிநிதிப்படுத்தி உலக நாடுகளிலும் மற்றும் உள்நாட்டிலும் விளையாட்டுத் துறையில் திறமைகளை காட்டிய வீர, வீராங்கனைகள் 80 பேரை கௌரவிக்கும் 'கலர் நைட்' நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.




அவர் மேலும் தெரிவிக்கையில், இதனை கிழக்கு மாகாணத்திற்கு கிடைத்த கௌரவமாக நான் பார்க்கவில்லை, முழுநாட்டிற்கும் கிடைத்த கௌரவமாகவே பார்க்கிறேன். விளையாட்டுத் துறையின் வெற்றிக்குப் பின்னால் பல நல்ல காரியங்கள் இருப்பதை நான் பார்க்கிறேன். இந்த வெற்றியானது ஒரு நாளிலோ அல்லது ஓரிரு நாட்களிலோ பட்ட கஷ்டத்திற்கு கிடைத்தவையல்ல அவை பல காலமாக நீங்கள் பட்ட கஷ்டத்திற்கு கிடைத்த வெற்றியாகும். அந்த வெற்றியில் நாங்களும் இலங்கையர் என்ற வகையில் பங்கெடுத்துக் கொள்கிறோம்.

விளையாட்டுத்துறை உடலையும் அழகையும் தரவல்லது. அதனால் அதிகளவானோர் உங்களைப் பின்பற்றுவார்கள். அவர்களுக்கெல்லாம் நீங்கள் பழகியவைகளையும் கற்றவைகளையும் பெற்ற அனுபவங்களையும் பழக்கி விடுங்கள். அதனால் அவர்கள் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் திறமைசாலிகளாகவும் திகழ்வார்கள்.

கடந்த சில நாட்களுக்கு முன்பதாக நம் நாட்டில் பல இடங்களில் கைப்பற்றப்பட்ட போதைப் பொருட்களின் தொகையிலிருந்து நம் நாடு எந்தளவுக்கு போதைப் பொருள் பாவனையில் முன்னேறியிருக்கிறது என்பதை அறியலாம். நம்மவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகி விட்டார்கள் என்பதே உண்மை.

# பாடசாலை மாணவர்களுக்கு ஏ.ரி.டி தடுப்பூசி ஏற்றல்



பாண்டிருப்பு தினகரன் நிருபர்

பாடசாலை மாணவர்களுக்கு தொண்டைக்கரப்பன் மற்றும் ஏற்பு வலி ஏற்படாது தடுக்கும் வகையிலான முன்னேற்பாடாக பிராந்திய சுகாதாரப் பணிமனைகள் ஊடாக ஏ.ரி.டி தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது. மண்முனை தென் எருவில்பற்று பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் தரம் 7 இல் கல்வி கற்கும் 12 வயதுக்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது. இதில் பிராந்திய பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான சபாநாதன், விக்னேஸ்வரன், கணேசன் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கான தடுப்பூசியினை வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

# இறக்காமத்தில் நடைபெற்ற சர்வதேச சமாதான தின நிகழ்வு

இறக்காமம் தினகரன் நிருபர்

சர்வதேச சமாதான தினத்தை சிறப்பிக்கும் முகமாக இறக்காமம் பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எம்.நஸீர் தலைமையில் திங்கட்கிழமை(21) பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

சர்வமத தலைவர்களின் பங்குபற்றுதலுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக செயலாளர் வீ.ஜெகதீசன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இதன்போது சர்வமத தலைவர்களுக்கு அன்பளிப்புக்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் இறக்காமம் பிரதேச சபைத் தவிசாளர் ஜே.கலீலுர் ரஹ்மான், சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான அமைப்பின் தலைவர் எம்.ஏ.சி.றியாஸ், உதவிப் பிரதேச செயலாளர் திருமதி நஹிஜா முஸப்பிர், பள்ளிவாசல்களின் நிருவாகிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் அரச அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

# மண் பரிசோதனைக்கான மண்மாதிரிகள் சேகரித்தல்

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

விவசாய ஊக்குவிப்பு வாரத்தை முன்னிட்டு கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தினால் பல்வேறு செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சவளக்கடை மற்றும் அன்னமலை, மத்தியமுகாம் ஆகிய விவசாயப் போதனாசிரியர் பிரிவில் விவசாயிகளின் விளை நிலத்திலிருந்து மண் பரிசோதனைக்கான மண் மாதிரிகள் சேகரிக்கும் நிகழ்வுகள் நடைபெற்றது.

இந் நிகழ்வில், சம்மாந்துறை வலய தலைமைபீட விவசாய போதனாசிரியர் ரசீம் உட்பட உதவி விவசாயப் பணிப்பாளர், வலய பாடவிதான உத்தியோகத்தர்கள், பிரதேச விவசாயப் போதனாசிரியர்கள், விவசாய தொழிநுட்ப உதவியாளர்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# ஐக்கிய மக்கள் சக்தி பாரிய அரசியல் சக்தியாக உருவெடுக்கும்

திருமலை மாவட்ட விசேட நிருபர்

எதிர்வரும் காலங்களில் ஐக்கிய மக்கள் சக்தி பாரிய அரசியல் சக்தியாக உருவெடுக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

காலி தேவகொட பிரதேசத்தில் இடம்பெற்ற கட்சி செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பின் போது கருத்து வெளியிடும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், SWRD பண்டாரநாயக்க ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து வெளியேறி சுதந்திர கட்சியை தோற்றுவித்து முதன்முதல் பாராளுமன்ற தேர்தலை எதிர்கொண்டபோது அவரால் ஒன்பது பாராளுமன்ற உறுப்பினர்களையே பெற முடிந்தது.



ஆனால் நாம் ஐக்கிய மக்கள் சக்தியை நிறுவி முதன் முதல் பாராளுமன்ற தேர்தலை எதிர்கொண்டு ஐம்பத்திநான்கு பாராளுமன்ற உறுப்பினர்களை பெற்றிருக்கிறோம்.

அதுவும் நாம் தேர்தலை எதிர்கொண்டபோது எமக்கு தொகுதி அமைப்பாளர்கள் இல்லை. பிரதேச அமைப்பாளர்கள் இல்லை. எமது கட்சிக்கு ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பு இருக்கவில்லை.

ஆகவே பிரதேச மற்றும் தொகுதி அமைப்பாளர்களை நியமித்து ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பாக செயற்பட்டால் எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் சக்தி பாரிய அரசியல் சக்தியாக உருவாகும்.

அவ்வாறான ஒரு கட்டமைப்பை நிறுவவே எமது தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் கிராமங்கள் தோறும் விஜயம் செய்கிறோம்.

எதிர்வரும் காலங்களில் மூவின மக்களையும் இணைத்துக்கொண்டு ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கம் ஒன்றை விரைவில் எம்மால் அமைக்க முடியும் என நம்புகிறோம் என தெரிவித்தார்.

# காணி ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு விண்ணப்பம் விநியோகம்

(மூதூர் தினகரன் நிருபர்)

முறையான ஆவணங்கள் இல்லாமல் அரச காணிகளை அபிவிருத்தி செய்துள்ள நபர்களுக்கு முறையான காணி ஆவணங்கள் வழங்கும் அரசின் திட்டத்திற்கு அமைய மூதூர் பிரதேச செயலகம் மூலம் உரிய விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. மேலும் உரிய விண்ணப்பங்களை பெற்றுக் கொள்பவர்கள் தனிப்பட்ட விபரம், ஆட்சி செய்யும் காணி விபரம், வேறு காணிகளின் உரிமை தொடர்பான விபரம், காணியின் அமைப்பு, காணி கிடைக்கப்பெற்ற முறை, காணியின் ஆட்சி மற்றும் காணியின் அபிவிருத்தி நிலை உள்ளிட்ட விபரங்களை பூர்த்தி செய்த நிலையில் உரிய விண்ணப்பங்களை இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன் மீள கையளிக்குமாறும் வேண்டப்பட்டுள்ளது.

# வீடுகளில் மனை பொருளாதாரத்தை கட்டியெழுப்ப பல்வேறு வேலை திட்டம்

(அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்)

வீடுகளில் மனைப் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பும் வகையில் விவசாயத் திணைக்களத்தின் மூலம் பல்வேறு வேலைத்திட்டங்கள் கிராம மட்டங்களில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கிராம மட்டங்களில் வாழ்ந்து வரும் மக்கள் மத்தியில் பொருளாதார ஈட்டல்களை மேம்படுத்தி அவர்கள் வாழ்வில் செழிப்பினை ஏற்படுத்தும் வகையில் இந்நடைமுறைகள் புதிய அரசாங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





நாடு தழுவிய ரீதியில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் விவசாய ஊக்குவிப்பு வாரத்தினையொட்டி, பாலமுனை விவசாய விரிவாக்கல் நிலையத்தின் மூலம் ஒலுவில் பிரதேசத்தில் இவ்வாறான வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைவாக, ஒலுவில் நுஜா மகளிர் விவசாய விரிவாக்கல் அமைப்பின் மூலம் மனைப் பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பும் கை வினைப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதன் ஓர் அங்கமாக நவீன முறையில் கேக் தயாரிப்பு, ஐசிங் வேலைப்பாடுகள், நவீன உணவு உற்பத்திப் பயிற்சிகள் போன்றன இவ்வமைப்பின் ஒழுங்கமைப்பின் கீழ் இடம்பெற்றன.

அமைப்பின் தலைவி ஏ.எல்.நயிமா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அம்பாறை விவசாய விரிவாக்கல் பயிற்சிப் பிரிவின் வளவாளர் எஸ்.ஜீவிதா பிரதம வளவாளராக கலந்து கொண்டு இல்லத் தலைவிகளுக்கும் யுவதிகளுக்குமான பயிற்சிகளை வழங்கி வைத்தார்.

# சம்மாந்துறையில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டம்

(சம்மாந்துறை கிழக்கு தினகரன் நிரபர்)

தேசிய டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்தின் கீழ் கல்முனை பிராந்திய சுகாதார பணிப்பாளர் பணிமனைக்கு உட்பட்ட பிரதேசங்களில் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வீடுகளிலும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. இதற்கமைய சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் சோதனை நடவடிக்கையும், களபரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் எஸ்.ஐ.எம். கபீரின் வழி காட்டலின் இடம்பெற்ற இவ்வேலைத்திட்டத்தின் கீழ், சுகாதார மேற்பார்வைப் பரிசோதகர் ஐ.எல்.றாஸிக் தலைமையில் பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் கிராம சேவையாளர்கள், டெங்கு தடுப்பு உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து சம்மாந்துறை பிரதேசங்களில் வீடு வீடாகச் சென்று பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நுளம்பு பரவலில் இனம் காணப்பட்ட 15 பேருக்கு வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. டெங்கு நுளம்பு பரவக்கூடிய 85 இடங்கள் அடையாளம் காணப்பட்டதோடு, டெங்கு உற்பத்தியாகக் கூடிய இடங்களும் கண்டுபிடிக்கப்பட்டு அவற்றை உடன் அழிப்பதற்கான அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

# கல்முனை மாநகர சபை உறுப்பினராக அஸாம்

(கல்முனை விசேட நிருபர்)

கல்முனை மாநகர சபையின் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள மருதமுனையை சேர்ந்த என்.ஏ.எம்.அஸாம் திங்கட்கிழமை (21) கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து, பதவியேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் மாநகர சபையின் நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எம்.ஆரிப், மாநகர சபையின் முன்னாள் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி உறுப்பினர் ஏ.ஜி.எம்.நதீர், முன்னணியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் எம்.ஐ.எம்.மஸீன் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

கல்முனை மாநகர சபையின் உறுப்பினராக பதவி வகித்து வந்த தாஜுதீன் முபாரிஸ், இராஜினாமா செய்ததையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே அஸாம் அக்கட்சியினால் புதிய உறுப்பினராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2018ஆம் ஆண்டு இடம்பெற்ற கல்முனை மாநகர சபைக்கான தேர்தலில் நல்லாட்சிக்கான தேசிய முன்னணிக்கு கிடைத்த ஒரேயொரு ஆசனத்தை கட்சியின் மீளமைத்தல் கொள்கைக்கமைவாக சுழற்சி முறையில் மூன்றாவது உறுப்பினராக இவர் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



காப்போம் அமைப்பினால் வழங்கப்பட்ட சலவை இந்திரம், மின் அழுத்தி என்பன சென் ஜோஸப், கிரேஸ் சிறுவர், முதியோர் இல்லங்களுக்கு திங்கட்கிழமை (21) கையளிக்கப்பட்ட போது. (படம்:கந்தளாய் தினகரன் நிருபர்)

# பொத்துவில் செங்காமத்தில் காட்டு யானைகள் தொல்லை

(ஒலுவில் விசேட நிருபர்)

பொத்துவில் செங்காமம் மீள் குடியேற்றக் கிராமத்தில் அதிகரித்துக் காணப்படும் காட்டு யானைகளின் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, செங்காமம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் எம்.எல். இஸட். ஆப்தீன் தெரிவித்தார்.

பீதியின் காரணமாக மக்கள் மாலை நேரங்களில் தங்கள் குடியிருப்பை விட்டு வெளியேறி பாதுகாப்பை தேடி தங்கள் குழந்தைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கும் சென்று காலையில் வீடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். பாடசாலை மாணவர்கள், பெண்கள், சிறுவர்கள், நோயாளர்கள் போன்றோர் வெகுவாக பாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மின்சார வேலி நிர்மாணிக்குமாறு பொத்துவில் பிரதேச செயலாளர் வனஜீவராசி திணைக்களத்தின் அதிகாரிகள் மற்றும் பிரதேச சபை தவிசாளர் ஆகியோருக்கு பலமுறை அறிவித்தும் எவ்விதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளவில்லையென கிராம அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர் எம்.எல்.இஸட்.ஆப்தீன் மேலும் தெரிவித்தார்.

# நாவிதன்வெளியில் வரட்சி: 08 ஆயிரம் பேர் பாதிப்பு

## பிரதேச செயலாளர் ரங்கநாதன்

(காரைதீவு குறூப் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளிப் பிரதேசத்தில் நிலவும் கடும் வரட்சி காரணமாக 2639 குடும்பங்களைச் சேர்ந்த 8 ஆயிரத்து 279 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாவிதன்வெளிப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 20 கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகளில் 13 பிரிவுகள் வரட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக நாவிதன்வெளிப் பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன் தெரிவித்தார்.

குறிப்பாக மத்திய முகாம், அன்னமலை, வீரச்சோலை, நாவிதன்வெளி , சொறிக்கல்முனை போன்ற பிரதேசங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு தினமும் 44 ஆயிரம் லீற்றர் குடிநீர் மூன்று வவுசர்கள் மூலம் விநியோகிக்கப்பட்டு வருவதாக நாவிதன் வெளிப் பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார்.



பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் இரண்டு பவுசர்கள் மூலமும் பிரதேச சபையின் ஒரு பவுசர் மூலமும் தினமும் சுழற்சி முறையில் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த யூலை மாதம் தொடக்கம் இக்குடிநீர் விநியோகம் இடம் பெற்று வருகிறது.

பின்தங்கிய இப்பிரதேசத்தில் பெரும்பாலான பிரிவுகளில் குழாய் நீர் விநியோகத்திற்கான பிரதான இணைப்பு இல்லாமையே இதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது. பிரதான இணைப்பு இருக்கும் பட்சத்தில் மக்கள் தாமாக முன்வந்து உப இணைப்புகளைப் பெறுவார்கள்.

எனவே தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் இப்பிரதேச மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க பிரதான இணைப்பை வழங்க விரைவாக முன்வரவேண்டும்.



அம்பாறை மாவட்டத்தில் வீடுகளை திருத்துவதற்கு தெரிவு செய்யப்பட்ட 23 குடும்பங்களுக்கு வீட்டு மானிய உதவிக் கொடுப்பனவுக்கான இரண்டாம் கட்டக் காசோலையை, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் பயனாளிகளிடம் வழங்குவதையும், அருகில் மாவட்ட அரசாங்க அதிபர் டி.எம்.எல்.பண்டாரநாயக்க உள்ளிட்டோர்களையும் காணலாம். (படம்: சவளக்கடை குறூப் நிருபர்)

# 'நாணிய நடுக்காடு' கவிதை நூல் வெளியீடு

(மருதமுனைதினகரன் நிருபர்)

மருதமுனையைச் சேர்ந்த ஓய்வுபெற்ற கிராம உத்தியோகத்தர் ஏ.எச்அப்துல் மூாஹிர் எழுதிய கவிதைகளின் தொகுப்பான 'நாணியநடுக்காடு' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மருதமுனை கலாசார மத்திய நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முதன்மை அதிதிகளாக யாழ்ப்பாணம் குடியியல் மேன் முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி ரீ.எல். அப்துல் மனாப், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம்.அன்ஸார், கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஏ.எல்.எப்.றஹ்மான், கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஆர்.முரளீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

# கடலில் கற்தூண்கள் இடப்பட்டதை கண்டித்து களுதாவளை மீனவர்கள் ஆர்ப்பாட்டம்



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு களுதாவளைக் கடலில் கற்தூண்கள் இடப்பட்டதை கண்டித்து கரை வலை மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் நேற்று (23) கடற்கரையில் வைத்து தமது வலைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சிலர் செவ்வாய்கிழமை (22) நள்ளிரவு வேளையில் பாரமான கற்துண்டணங்களை கரையிலிருந்து சுமார் 100 மீற்றர் தூரமளவிற்கு கடலில் ஆங்காங்கே இறக்கி விட்டுச் சென்றுள்ளனர். இதனால் புதன்கிழமை காலையில் தாம் வழக்கமாக கரைவலைவிட்டு இழுக்கும்போது வலை கற்துண்டங்களுக்குள் அகப்பட்டு இழுக்க முடியாத அளவிற்குப் போய்விட்டது.

பாரிய மீன்கள் அகப்பட்டு விட்டதாக நினைத்தோம், பின்னர் அதனை நன்கு கூர்ந்து அவதானிக்கையில் மிகவும் பாரமான கொங்றீட் துண்டங்களில் வலைகள் சிக்கப்பட்டுள்ளதை கண்ணுற்றோம்.

பின்னர் வலைகளை இழுக்க முடியாமல் இடை நடுவே எமது வலைகளை கத்தியால் அறுத்து எடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டோம்.

இது போன்றதொரு நிலமை கடந்த வருடமும் எமக்கு ஏற்பட்டிருந்தது என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கரைவலை மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் அப்பகுதி கடலில் மீன்பிடிப்பதற்கு அனுமதியற்ற சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி ஒரு சிலர் மீன்பிடிப்பதாக கடற்றொழில் திணைகத்திற்கு மீனவர்கள் தெரிவித்திருந்த நிலையில், துரிதமாகச் செயற்பட்ட கடற்றொழில் திணைக்களத்தினர் விசேட அதிரடிப்படையினரின் ஒத்துழைப்புடன் கடலில் பதுக்கி வைத்திருந்த மீன்பிடிப்பதற்கு அனுமதியற்ற 2 வலைகளைக் கைப்பற்றியதுடன் குறித்த நபருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதனைப் பொறுத்துக் கொள்ளாத நபர்களாலேயே தமது கரை வலை மீன்பிடியைத் தடைசெய்யும் வண்ணம் இவ்வாறு கடலில் கற்தூண்களைப் போட்டுவிட்டுச் சென்றுள்ளதாக கரைவலை மீனவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

எனவே அரசாங்கம் சம்மந்தப்பட்ட நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். தமக்கு ஏற்பட்டுள்ள இந்நிலைமை தொடர்பில் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவுள்ளதாக களுதாவளை மீனவர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் செல்லையா இராமலிங்கம் இதன்போது தெரிவித்தார்.

# ஆரோக்கியமான பிரைஜைகளை உருவாக்க ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்



ஒலுவில் விசேட நிருபர்

நாட்டில் ஆரோக்கியமான சிறந்த அறிவுத் திறனுடைய பிரைஜைகளை உருவாக்குவதற்கு எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமென அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் எஸ். அகிலன் தெரிவித்தார்.

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் பாலமுனை ஹுஸைனியா நகர் 'மகிழ்ச்சியான கிராமமாக' தெரிவு செய்யப்பட்டு அக் கிராமத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சுகதார மேம்பாடு தொடர்பான அங்குரார்ப்பண நிகழ்வு செவ்வாய்க்கிழமை (22) சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சுகாதார அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மகிழ்ச்சியான கிராமத்தை உருவாக்கும் திட்டத்தின் கீழ் ஹுஸைனியா நகர் தெரிவு செய்யப்பட்டு, அக் கிராமத்தில் வாழும் மக்களின் சுகாதார மேம்பாடு, வறுமை ஒழிப்பு மற்றும் போதையற்ற முன்மாதிரியான கிரமமாக மாற்றுதல் போன்ற வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளது.

எமது பிரதேசங்களில் போதைப் பொருள் பாவனை என்பது மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இன்று ஆயிரக் கணக்காணக்கானோர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகி உள்ளனர். இந்நிலையில் குறிப்பாக புகைத்தல் பழக்கம் சிறுபராயத்திலிருந்தே சிலரிடம் ஆரம்பமாகிவிடுகின்றது.

பாடசாலை மட்டத்தில் புகைத்தலால் ஏற்படும் தீமைகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டுமென்றார்.

# பத்து வயது மாணவி துஷ்பிரயோகம்; குற்றவாளிக்கு 10 வருட கடூழிய சிறை

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை சிங்கள வித்தியாலயத்தில் கல்வி கற்ற பத்து வயது மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றவாளிக்கு, 10 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்து திங்கட்கிழமை (21) திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தீர்ப்பினை வழங்கினார்.

2010ம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ம் திகதி வரையான காலப்பகுதியில் கடற்படைத் தளத்தில் சிவில் உத்தியோகத்தராக கடமையாற்றிய குற்றவாளி பாடசாலை வளாகத்திலும், நீச்சல் தடாகத்திலும், சிறுமியின் வீட்டிலும் சிறுமியை துஷ்பிரயோகம் மேற்கொண்டதாக குற்றப்பத்திரம் திருகோணமலை மேல் நீதிமன்றில் சட்ட மாஅதிபரால் கடந்த 2019 பெப்ரவரி மாதம் 14ம் திகதி தாக்கல் செய்யப்பட்டது.

குற்றவாளிக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், அவர் மூன்றிலும் குற்றவாளியாக இனங் காணப்பட்டிருந்தார். 10 வயது சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டுக்காக 10 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்ததுடன், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு ஒரு இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு வழங்குமாறும், குறித்த நஷ்ட ஈட்டை செலுத்த தவறினால் கடூழிய சிறைத் தண்டனை விதிக்குமாறும் நீதிவான் தீர்ப்பளித்தார்.

# பொத்துவிலில் அதிகரித்து வரும் போதைப் பொருள் பாவனையை ஒழிக்க செயற்திட்டம்

## பொத்துவில் பிரதேச சபை தவிசாளர்

(திருக்கோவில் தினகரன் நிருபர்)

பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் போதைப் பொருள் பாவனைகள் அதிகரித்து வருவததுடன், இதனைக் இல்லாது ஒழித்து போதைப் பொருள் பாவனையற்ற பிரதேசமாக மாற்றும் நோக்கில் போதைப் பொருள் ஒழிப்பு செயற்திட்ட விழிப்புணர்வு செயலமர்வு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

பொத்துவில் பிரதேச செயலகத்தின் சிறுவர் மகளிர் அபிவிருத்தி பிரிவின் ஊடாக உதவி திட்டமிடல் பணிப்பாளர் எம்.எம்.ஜனூஸ் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற இச் செயலமர்வில் பொத்துவில் பிரதேச அனைத்து மதங்களின் பிரதி நிதிகள், பொத்துவில் பிரதேச தவிசாளர் எம்.எஸ்.அப்துல் வாசீத், பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.யு.அப்துல் சமட் அதிகாரிகள் என பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம்.எஸ். அப்துல் வாசீத், பொத்துவில் பிரதேசத்தில் போதைப் பொருகளின் பாவனைகள் அதிகரித்து காணப்படுவதுடன், பல்வேறுபட்ட சட்டவிரோத செயற்பாடுகளுக்கு போதைப் பொருட்கள் உடந்தையாக இருப்பதாக தெரிவித்தார்.



போதைப் பொருள் பாவனைகளில் ஈடுபடுகின்ற நபர்களுக்கு அரசினால் வழங்கப்படுகின்ற சமுர்த்தி உட்பட, உதவிகளை வழங்காது தடுக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இரண்டு நூல்கள் வெளியீடு

(அன்புவழிபுரம் தினகரன் நிருபர்)

திருகோணமலை எழுத்தாளர்களின் நூல்களின் கையளிப்பும் வெளியீட்டு நிகழ்வும் சனிக்கிழமை (26) திருகோணமலை நகரசபை மண்டபத்தில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் ச. நவநீதன் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழிற்துறைத் திணைக்களத்தின் மாகாணப் பணிப்பாளர் திருமதி.கவிதா உதயகுமார் சிறப்பு விருந்தினராக கல்வி அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.சி.எம். முஸ்இல் கலந்து சிறப்பிக்கின்றனர்.

சூசை எட்வேட் எழுதிய இங்கு வீசியது ஒரு சமாதானக் காற்று என்ற சிறுகதைத் தொகுப்பும், செல்வி. பரமேஸ்வரி அருணாசலம் எழுதிய கூடிவாழ் சிறுவர் கதைகள் என்ற நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

# இடைநிறுத்தப்பட்ட பசுமைப் பூங்கா பணியை விரைவுபடுத்த நடவடிக்கை

(வாழைச்சேனை விசேட நிருபர்)

கடந்த அரசாங்கத்தில் நாவலடி பிரதேசத்தில் அமைக்கப்பட்டு வந்த சகலருக்குமான பசுமைப் பூங்கா திட்டத்தின் பணிகள் இடைநிறுத்தப்பட்ட நிலையில் இருந்தன.

இத்திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் தவிசாளர் ஏ.எம்.நௌபர் தலைமையில் நேற்றுமுன்தினம் (22) இடம்பெற்றது.

இதில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் பெருநகர அபிவிருத்தி அமைச்சின் பணிப்பாளர்களும் மாவட்ட நகர அபிவிருத்தி அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டனர்.

நாடு முழுவதும் அமைக்கப்பட்ட 50 பசுமைப் பூங்கா திட்டங்களை இவ்வருடத்தில் முடிவுறுத்த முடியாத நிலை இருப்பதனால் நாவலடியில் அமைக்கப்பட்ட பூங்கா திட்டப் பணிகளை பகுதி அளவில் இவ்வருடத்திற்குள் முடிவுறுத்தி, காணி உட்பட அனைத்துச் சொத்துக்களையும் பிரதேச சபையின் பராமரிப்பின் கீழ் கொண்டு வருவதுடன், அடுத்த ஆண்டில் இத்திட்டத்தை முழுமைப்படுத்த தேவையான நிதியினை அமைச்சு வழங்குவதற்கும் இ க் க லந் து ரை யா ட லி ல் இணக்கம் காணப்பட்டது.



அட்டாளைச்சேனை மீலாத்நகர் பாவங்காய் வீதியின் முல்லைத்தீவுச் சந்தியில் கிறவல் மணல் ஏற்றிவந்த கனரக டிப்பர் வாகனம் நேற்றுமுன்தினம் (22) வீதியின் அருகிலுள்ள வாய்காலில் குடை சாய்ந்து விபத்துக்குள்ளானதைப் படத்தில் காணலாம். (படம்:ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)

# காத்தான்குடி நபரின் ஜனாசா கட்டாரில் நல்லடக்கம்

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

கட்டாரில் மரணமடைந்த காத்தான்குடியைச் சேர்ந்தவரின் ஜனாசா திங்கட்கிழமை இரவு இஷா தொழுகையின் பின்னர் கட்டார் அபூஹமூர் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. காத்தான்குடியைச் சேர்ந்த சியாத் அகமட் அப்துல் காதர் (வயது 49) என்பவரே இவ்வாறு கட்டாரில் உயிரிழந்தவராவார்.

இவர் கட்டாரில் தொழில் செய்து வந்த நிலையில் சில தினங்களாக நோய்வாய்பட்டு கட்டாரிலுள்ள வைத்தியசாலையில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் திங்கட்கிழமை (21) காலை இவர் உயிரிழந்துள்ளதாக தெரிய வருகின்றது.

புதிய காத்தான்குடி பிரதேசத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் , கட்டாரில் சில வருடங்கள் தொழிலில் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியா தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கியிருந்த 17 பேர் விடுவிப்பு

ஓமந்தை விஷேட நிருபர்



வவுனியா பெரியகாடு இராணுவ முகாம் நிலையத்தில் வெளிநாட்டிலிருந்து விஷேட விமானத்தில் அழைத்துவரப்பட்டு தனிமைப்படுத்தல் நடவடிக்கையில் தங்கவைக்கப்பட்டிருந்த 17 பேர் நேற்று (23) விடுவிக்கப்பட்டுள்ளனர் .

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு சென்றவர்களை, விஷேட விமானத்தில் அழைத்து வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன . இந்நிலையில் கடந்த இரண்டு வரங்களுக்கு முன்னர், குவைத் நாட்டிலிருந்து அழைத்து வரப்பட்டு பெரியகாடு இராணுவ முகாம் தனிமைப்படுத்தில் நிலையத்தில் பலர் தங்கவைக்கப்பட்டிருந்தனர்.இதில் 17 பேரே நேற்று விடுவிக்கப்பட்டனர் .

இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்கள் பதுளை , மாத்தறை , கண்டி, கம்பகா மற்றும் குருநாகல் பகுதிகளை சேர்ந்தவர்களாவர்.இவர்கள் தற்போது தமது இருப்பிடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். வெளிநாடுகளிலிருந்து திரும்பி வருகின்ற இலங்கையரைப் பாதுகாக்கவே தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கின்றோம். இதில் எவரும் அச்சப்படத் தேவையில்லை என பெரிய காடு இராணுவ முகாம் அதிகாரி தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், தொழில் வாய்ப்புக்காக வெளிநாடு சென்றவர்கள் இலங்கைக்கு திரும்பி வரும்போது, நாட்டு சட்டங்களுக்கு அமைவாக தனிமைப்படுத்தல் செயல்முறைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு அழைத்து வருபவர்கள் அச்சமடையத் தேவையில்லை. மக்களின் பாதுகாப்பு மற்றும் உறவினர்கள் குடும்பத்தினரைப் பாதுகாப்பதற்காகவே தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார் .



மதுகம கல்வி வலயத்தில் அன்னாசிகல தமிழ் வித்தியாலயத்தில் சிறுவர் நேயம் தொடர்பில் விஷேட செயற் திட்டத்தை மேற்கொண்ட தர்கா நகர் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் முனவ்பரா இர்பான் தலைமையிலான ஆசிரியர்களை படத்தில் காணலாம்.அதிபர் ஏ.ஸீ.எம்.ரிப்கானும் படத்தில் காணப்படுகிறார். (படம்:பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# மாமனாரை கொலை செய்த குற்றவாளிக்கு 10 வருட சிறை

(ரொட்டவெவ குறூப் நிருபர்)

திருகோணமலை சாம்பல் தீவு பகுதியில் மனைவியின் தந்தையை பொல்லால் அடித்து கொலை செய்த குற்றவாளிக்கு 10 வருட கடூழிய சிறை தண்டனை வழங்கி திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்று (23) தீர்ப்பினை வழங்கியுள்ளார்.

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சாம்பல் தீவு பகுதியில் 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பத்தொன்பதாம் திகதி தனது மனைவியின் தந்தையான நாகராசா பூலோகராசா என்பவரை பொல்லால் அடித்து கொலை செய்த குற்றவாளிக்கு இத்தீர்ப்பு திருகோணமலை மேல் நீதிமன்ற திறந்த நீதிமன்றத்தில் வைத்து வழங்கப்பட்டது. குறித்த குற்றவாளிக்கு நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் குற்றத்திற்கான தீர்ப்பினை வாசித்து காட்டியதுடன், மனைவி கர்ப்பிணியாக இருக்கின்ற போது தனது மனைவியை தாக்கிய நேரத்தில் மனைவியின் தந்தையான நாகராசா பூலோகராசா என்பவரை பொல்லால் அடித்து கொலை செய்த குற்றத்திற்காக 10 வருட கடூழிய சிறை தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டது.

இதேவேளை உயிரிழந்தவரின் மனைவிக்கு ஒரு இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு வழங்குமாறும், அதனை செலுத்தத் தவறும் பட்சத்தில் இரண்டு வருட கடூழிய சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

## முகநூல் ஊடாக களியாட்டம்;

# இளைஞர்கள் குழு பொலிஸாரால் கைது

அநுராதபுரம் தினகரன் நிருபர்

முகநூல் ஊடாக ஒழுங்குசெய்திருந்த களியாட்ட விருந்தோம்பலொன்றுக்கு சென்றுகொண்டிருந்த இளைஞர்கள் குழுவொன்றினை அறலகங்வில பகுதியில் வைத்து பொலன்னறுவ பொலிசார் கைது செய்துள்ளனர். கிடைக்கப்பெற்ற தகவலொன்றுக்கமைய 22 ஆம் திகதி அறலகங்வில பகுதியில் நடாத்திய சுற்றிவளைப்பின்போது மாதுறுஓய பகுதியிலுள்ள விடுதியொனறில் ஒழுங்குசெய்திருந்த மதுபானம் மற்றும் போதைப்பொருள் விருந்தோம்பலுக்காக சென்றுகொண்டிருந்த 16 க்கும் மேற்பட்ட இளைஞர்களை பொலன்னறுவ வலய போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிசார் கைது செய்துள்ளனர்.


இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

**ரூ.75,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்**

05.75% 2022 ''A'' தொடர்களின் கீழ் ரூ. 45,000 மில்லியனையும், 05.35% 2026 ''A'' தொடர்களின் கீழ் ரூ. 30,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2020 செத்தெம்பர் 28ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படுகின்றன.

| தொடர்கள் | 05.75% 2022 ''A'' | 05.35% 2026 ''A'' |
|---|---|---|
| ISIN* | LKB00322K152 | LKB01526C014 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ. 45,000 மில்லியன் | ரூ. 30,000 மில்லியன் |
| ஏற்றுக்கொள்ளலுக்கான உயர்ந்தபட்ச விளைவு வீதம் (%)** | 5.65 | 6.60 |
| நறுக்கு வீதம் | 05.75% ஆண்டொன்றிற்கு | 05.35% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2019 நவெம்பர் 15 | 2011 மாச்சு 01 |
| முதிர்வுத் திகதி | 2022 நவெம்பர் 15 | 2026 மாச்சு 01 |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 15 மே & 15 நவெம்பர் | 01 மார்ச்சு & 01 செத்தெம்பர் |
| ஒன்றுசேர்ந்த வட்டி வீதம் | ரூ. 100.00 இற்கு ரூ. 2.1875 | ரூ. 100.00 இற்கு ரூ. 0.4581 |
| ஏல விற்பனைத் திகதி | 2020 செத்தெம்பர் 28, திங்கட்கிழமை | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2020 செத்தெம்பர் 28, திங்கட்கிழமை மு.ப. 11.00 மணி | |
| தீர்ப்பனவுத் திகதி | 2020 ஒத்தோபர் 02 | |
| விலைக் குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (தொடர்கள் வழங்கப்பட்ட நாளிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்று சேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட மின்னியல் வலையமைப்பு முறைகளினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகைகளை ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களைக் கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| வ்வெஸ்ட் கெப்பிட்டல் ரெஸரீஸ் லிமிடட் | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2458935 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

** குறிப்பிடப்பட்டுள்ள வீதங்கள் கொள்கைத் தீர்மானங்களுக்கேற்ப சீராக்கங்களுக்கு உட்பட்டனவாக இருக்குமென்பதுடன் அதற்கிணங்க அவை இலங்கை மத்திய வங்கியின் வெப்தள விளம்பரத்தில் வெளியிடப்படும்.

**எம்.இசட்.எம். ஆசிம்**
பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர் / பதிவாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்,
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**



மின்னியலாளர்களுக்கு தொழில் உரிமம் வழங்குதல் தொடர்பான மாவட்ட கருத்தரங்குகள்

இரத்தினபுரி
2020 செப்டெம்பர் 30
கேதுமதி ஹோட்டல்
இரத்தினபுரி புதிய நகரம்

கேகாலை
2020 அக்டோபர் 02
கேகாலை
நகரசபை மண்டபத்தில்

திருகோணமலை
2020 அக்டோபர் 04
உவர்மலை/ விவேகானந்தா கல்லூரி



மின்சாரதுறையில் மின்னியலாளர்களாக பணிபுரியும் உங்களுக்கும் தொழில் ரீதியான அங்கீகாரம் கிடைக்கும் வகையில் உரிம முறையொன்று (லைசன்) நடைமுறைக்கு வரவுள்ளது. இது தொடர்பான இலவச மாவட்ட மட்ட கருத்தரங்குக்கு அனைத்து மின்னியலாளர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.


முன்பதிவுகளுக்கு அழைக்கவும் 0770399119

இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு
மின்சாரத் துறையின் ஒழுங்குறுத்துகை அமைப்பு



22.09.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 733,618
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 28,519,510.00
ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 1,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசுகள் 29
NLB










தென்மாகாண தோட்ட தமிழ் பாடசாலை

# ஆசிரியர் பிரச்சினைகளுக்கு துரித தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்

**ஷம்ஸ் பாஹிம்**



தென்மாகாணத்திலுள்ள தோட்டப் பாடசாலைகளில் காணப்படும் ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாத்தறை மாவட்ட பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்க கோரிக்கை விடுத்துள்ளார். மாகாண சபையினால் இதற்கு தீர்வு காண ஓரளவாவது நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் மத்திய அரசுகளினாலோ அல்லது தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுகளினாலோ இதற்கு நியாயம் நிலைநாட்டப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

பெருந்தோட்ட பாடசாலைகளுக்கு ஆசிரிய உதவியாளர்களை நியமிப்பது தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியதாவது,

தோட்டப் பாடசாலைகள் குறித்து இந்த சபையில் கவனம் செலுத்தப்படவில்லை. கடந்த காலங்களில் தோட்டப்பாடசாலைகள் தொடர்பில் மத்திய அரசோ தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சோ குறைவாகவே கவனம் செலுத்தின. மாகாண சபைகளினூடாக நடந்தவை தவிர மத்திய அரசுகளினால் ஆவண செய்யப்படவில்லை.

கடந்த காலத்தில் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்ட போது மன்னார்ரே, வல்வெட்டித்துறை உட்பட வடக்கு , கிழக்கில் இருந்து தான் ஆசிரியர்கள் தெரிவானார்கள். அவர்கள் தொடர்ந்து அங்கு இருக்காமையினால் ஆசிரிய பற்றாக்குறை தொடர்கிறது.

ஆசிரிய உதவியாளர் நியமனத்திற்காக குறைந்தபட்ச தகைமை உயர்தரம் சித்தி என குறைக்கப்பட்டதால் ஓரளவு தீர்வு ஏற்பட்டது. தோட்டப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை பிரதானமானது.இதனை மாகாண சபைகளினால் தீர்ப்பது கடினம். பட்டதாரிகளை தான் நியமிக்க முடியும். தமிழ் மொழி மூல பட்டதாரிகள் குறைவாகவே உள்ளனர்.

தெற்கிலுள்ள சகல ஆசிரிய உதவியாளர்களையும் ஆசிரிய சேவைக்கு இணைக்க வேண்டும்.

தெற்கில் ஆசிரிய உதவியாளர் இல்லாத பல பாடசாலைகள் உள்ளன.லயன் அறைகளில் இருந்து கஷ்டமாக கற்று பல்கலை செல்ல முடியாத மாணவர்கள் உள்ளனர். ஆசிரிய உதவியாளர்கள் நியமிப்பு தொடர்பில் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டும்.இதனூடாக அதிக மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல வாய்ப்பு ஏற்படும்.

தெனியாயவில் 5 தோட்ட பாடசாலைகள் உள்ளன. மாத்தறை மாவட்டத்தில் மொத்தமாக 6 பாடசாலைகள் உள்ளன.காலி மாவட்டத்தில் 4 பாடசாலைகள் உள்ளன.இங்குள்ள ஆசிரியற் பற்றாக்குறைக்கு நியாயமான தீர்வு வழங்கப்பட வேண்டும்.

கல்வித்துறையில் முழுமையான மாற்றம் செய்யப்பட வேண்டும். இதன் போது ஆசியர் பற்றாக்குறை தொடர்பில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்றார்.



இலங்கைக்கான ஆப்கானிஸ்தான் தூதுவர் அஷ்ரப் ஹைதாரி, மேல் மாகாண ஆளுநர் ஓய்வுபெற்ற ஏயார் மார்ஷல் ரொஷான் குணதிலகவை பத்தரமுல்ல,ஆளுநர் செயலகத்தில் சந்தித்து இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பில் சினேகபூர்வ பேச்சு வார்த்தை மேற்கொண்டார். (படம்:பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

போதை ஒழிப்பு திட்டம்;

## மாத்தறை பிராந்திய பொலிஸார் 24 மணிநேர சுற்றிவளைப்பு

**மாத்தறை தினகரன் நிருபர்**

போதைப்பொருள் பாவனையை நாட்டில் இருந்து ஒழிக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் மாத்தறை பிராந்திய பொலிஸார் 24 மணித்தியாலம் சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இதனடிப்படையில் மாத்தறை பொலிஸார் மாத்தறை நகரில் நேற்று மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 10 சந்தேக நபர்களை கைதுசெய்துள்ளதுடன், சந்தேக நபர்களிடமிருந்து 47,000 மில்லி கிராம் கஞ்சாவையும் 4500 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள்களையும் கைப்பற்றியுள்ளனர்.

வெளிநாட்டு குண்டொன்றை வைத்திருந்த குற்றத்திற்காக 10 வருட சிறைத் தண்டனை அனுபவித்த ஒருவரும் இச்சந்தேக நபர்களில் அடங்குவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறை பஸ் நிலையம், மாத்தறை கடற்கரை வீதி, ராகுல சந்தி, உயன்வத்தை ஆகிய பிரதேசங்களிலிருந்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறை பிராந்திய பொலிஸ் அதிகாரி சந்தன ஹேரரத்னவின் ஆலோசனையின் பேரில் மாத்தறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் அசோக்க பிரியந்த தலைமையிலான பொலிஸ் குழுவே திடீர் பரிசோதனையை மேற்கொண்டது.

## பொலிஸ் தடுப்பிலிருந்து தப்பித்த நபர் கைது

**புத்தளம் தினகரன் விசேட நிருபர்**

ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டிருந்த நபரொருவர் மாதம்பை பொலிஸ் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் அங்கிருந்து தப்பிச் சென்ற சமயம் அவரை மாதம்பை பொலிஸார் மீண்டும் கைது செய்துள்ளனர்.

காக்காப்பள்ளி சேனநாயக்க வத்தவைச் சேர்ந்த 25 வயதுடைய நபரே இவ்வாறு மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

2280 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் குறித்த நபரை மாதம்பை பொலிஸார் காக்காப்பள்ளி சேனநாயக்க வத்தையில் வைத்து கைது செய்துள்ளனர். அவரை 07 நாட்களுக்கு தடுத்து வைத்து விசாரிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு விட்டுள்ளது. அதன் பிரகாரம் சந்தேக நபர் மாதம்பை பொலிஸ் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்,

## வரவு செலவு திட்டம் நாட்டு மக்களுக்கு நிறைய நன்மைகளை பெற்றுக்கொடுக்கும்

இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

எதிர் வரும் நவம்பர் மாதத்தில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவு திட்டம் மக்களுக்கு நிறைய நன்மைகளை பெற்றுக்கொடுக்குமென இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரம் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம் வடமத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் அண்மையில் இடம்பெற்றபோது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்து தெரிவிக்கையில், மஹிந்த ராஜபக்ஷவிடம் அரசாங்கத்தை ஒப்படைக்கும் போது வெளிநாட்டு கடன் நூற்றுக்கு ஐம்பது வீதம் அதிகரித்து காணப்பட்டதுடன் உள்நாட்டு கடன் தொகையும் அதிகரித்திருந்தன. ஆனால் கடனைப்பெற்று மக்களுக்கு செய்தது எதுவுமில்லை. எந்தளவுக்கு பொருளாதார நெருக்கடி இருந்தாலும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரின் ஆலோசனைப்படி திடமாக மக்களுக்கு எதிர் வரும் வரவு செலவு திட்டத்தின் மூலம் சலுகைகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.



இம்முறை சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஜனாதிபதி மற்றும் பிரதமர் முழுமையான அரசியல் அதிகாரத்துடன் மக்களை இலக்காக கொண்ட அபிவிருத்தி செயற்திட்டங்கள் பலவற்றை நடைமுறையில் கொண்டு வருவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளோம்.

2015 ஆட்சிக்கு வந்த அரசு அன்று மஹிந்த ராஜபக்ஷவின் அரசினால் முன்னெடுக்கப்பட்ட சகல செயற்திட்டங்களையும் அரசியல் ரீதியாக மாற்றங்களை மேற்கொண்டதனால் ஏற்பட்ட நஷ்டம் சிறிதளவல்ல. அநுராதபுரம் மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தின் மூலம் வெளியான தகவல்களின் அடிப்படையில் அரச அதிகாரிகள் எந்தளவிற்கு பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை யாவரும் அறிவீர்கள்.அனுராதபுரம் மாவட்டத்தில் மாத்திரமல்லாது நாடளாவிய ரீதியில் இது நடைபெற்றுள்ளன.

கடந்த ஐந்து வருடங்களிலும் அபிவிருத்தி திட்டங்கள் முடக்கப்பட்டிருந்தன.இப்போது விவசாயத்திற்கு தேவையான நீரை வரட்சியில்லாத வகையில் வழங்கப்படவுள்ளதுடன் நாடளாவிய ரீதியில் சகலருக்கும் சுத்தமான குடிநீரை வழங்குவது என்ற சவாலை ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ளார் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## பயாகளை கடற்கரை பகுதியில் கொகேன் போதை. பொதி மீட்பு

**பேருவளை விசேட நிருபர்**

பயாகளை, தலுவத்த கடற்கரை பிரதேசத்தில் இருந்து கொகேன் போதைப் பொருள் அடங்கிய பொதியொன்றை பயாகளை பொலிஸார் நேற்று முன்தினம் (22) கைப்பற்றியுள்ளனர்.

மர்மமான பொதியொன்று கடற்கரை பகுதியில் இருப்பதாக பயாகளைப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலொன்றையடுத்து பொலிஸார் அங்கு சென்று பொதியை கைப்பற்றி பரிசோதனை செய்த சமயம் கொகேன் போதைப் பொருள் என கண்டறியப்பட்டுள்ளது.

## கடற்கரை பகுதியிலிருந்து ஹெரோயின் பொதி மீட்பு

**புத்தளம் விசேட நிருபர்**

உடப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளிவாசல்பாடு கடற்கரையில் நேற்று முன்தினம் அலையில் அடித்து வரப்பட்டிருந்த ஹெரோயின் பொதி ஒன்று தொடர்பில் ஆராய்வதற்கு விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக உடப்பு பொலிஸார் தெரிவித்தனர். ஒரு கிலோ கிராம் எடையுடைய இந்த ஹெரோயின் பொதி பள்ளிவாசல்பாடு கடற்கரையில் கரையொதுங்கியிருந்த நிலையில் அதனைக் கண்ட மீனவர் ஒருவர் அது தொடர்பில் உடப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்தே உடப்பு பொலிஸார் குறித்த ஹெரோயின் பொதியினை மீட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று முன்தினம் காலை பெரியபாடு மீனவக் கிராமத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவர் வழமை போன்று கடலுக்குச் செல்வதற்காக சென்ற போது கடற்கரையில் ஒதுங்கியிருந்த இந்தப் பொதியினைக் கண்டதாகவும், பின்னர் அப்பொதியினை எடுத்துப் பார்த்த போது அதில் வெளிநாட்டு இலட்சினையினை அவதானித்ததாகவும், இப்பொதி போதைப் பொருள் பொதியாக இருக்கலாம் என சந்தேகித்து இது தொடர்பில் பிரதேச மீனவத் தலைவர்களுக்கும், உடப்பு பொலிஸாருக்கும் அறிவித்ததாகவும் அம்மீனவர் தெரிவித்துள்ளார்.

குறித்த ஹெரோயின் பொதி சில தினங்களுக்கு முன்னர் கடலில் வீழ்ந்திருக்கக் கூடும் என்றும், அந்தப் பொதியின் வெளிப்பகுதியில் பாசி படர்ந்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.






சர்வதேச இளைஞர் தினம் மற்றும் சர்வதேச ஜனநாயக தினம் உள்ளிட்ட இரண்டு தினங்களையும் கொண்டாடுமுகமாக இலங்கை தேர்தல் ஆணைக்குழு அநுராதபுரம் இரிடேஜ் ஹோட்டலில் நேற்று முன்தினம் விசேட செயலமர்வொன்றினை ஒழுங்குசெய்திருந்தது. இதன்போது கலந்துகொண்ட இளைஞர் யுவதிகளுக்கு ஜனநாயகத்தின் முக்கியத்துவம் குறித்து தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய விளக்கமளிப்பதை படத்தில் காணலாம். படம்:அநுராதபுரம் தினகரன் நிருபர்

## கல்பிட்டி பள்ளிவாசலுக்கு ஜனாஸா மேசை அன்பளிப்பு



**புத்தளம் தினகரன் நிருபர்**

கல்பிட்டி பள்ளிவாசல்துறை அம்மாந்தோட்டம் ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு நீண்ட கால தேவையாக கருதப்பட்டு வந்த ஜனாஸா குளிப்பாட்டும் மேசை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.

வை.எம்.எம்.ஏ.நிறுவனத்தின் புத்தளம் மாவட்ட பணிப்பாளர் முஜாஹித் நிஸாரின் முயற்சியினால் அகில இலங்கை இளம் முஸ்லிம் பெண்கள் அமைப்பின் உதவியின் மூலம் இந்த ஜனாஸா குளிப்பாட்டும் மேசை அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வை.எம்.எம்.ஏ பிரதிநிதிகளான ஆசிரியர் எஸ்.ஆர். முஹ்சி, எம்.சியாத் , இர்பான் ரிஸ்வான் மற்றும் பள்ளி பரிபாலன சபை தலைவர் உள்ளிட்ட ஊர்வாசிகள் பலரும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியின் சுபீட்சமான தூரநோக்கு;

## தென் மாகாணத்தில் 45 பாடசாலைகளை ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை

தென் மாகாண ஆளுநர் விலிகமகே

**வெலிகம தினகரன் நிருபர்**

ஜனாதிபதியின் சுபீட்சமான தூரநோக்கு சிந்தனையின் கீழ் தென் மாகாணத்தில் 45 பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தென்மாகாண ஆளுநர் கலாநிதிவிலிகமகே தெரிவித்தார்.

அகுரெஸ்ஸ மாறை–எஹலபே வித்யாராஜ கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்ட மூன்று மாடிக் கட்டிடத்தை திறந்துவைக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில்,

இவ்வாறான பாடசாலைகளில் சகல வசதிகளையும் கொண்ட வகுப்பறைகள் அமைக்கப்படவுள்ளதோடு, முதல் தரம் முதல் கணனி உபயோகத்துடன் விசேட கல்வி முறை அறிமுகப் படுத்தப்படுகின்றது. இதன் மூலம் பிரபலமான பாடசாலைகளில் நிலவும் போட்டிகள் குறையவாய்ப்புண்டு.

தென் மாகாணத்தில் 1048 மாகாண பாடசாலைகள் உள்ளன. சகல பாடசாலைகளிலும் கல்வி நடவடிக்கையோடு இணைப்பாடவிதான செயற்பாடுகள் மேற்கொண்டு மாணவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமானதாக மாற்றுவதே நோக்கமாகும்.

எமது நாடு 'கொவிட் 19' நோயினால் பாதிக்கப்பட்டபோதும், அதனைக்கட்டுப்படுத்திய ஜனாதிபதி, கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ள விசேட கவனம் செலுத்தினார். ஏனைய நாடுகளோடு நோக்கும்போது தனது நாட்டில் கொவிட் 19 நோயைக் கட்டுப்படுத்திய முறைமையை உலக சுகாதார அமைப்புக்கள் பாராட்டியுள்ளன.

இவ்வாறான இக்கட்டானசூழ்நிலைகளில் கூட இவ்வாறு மூன்றுமாடிக் கட்டடம் ஒன்றை அமைத்ததற்காக அரசாங்கத்திற்கு நன்றிசெலுத்தவேண்டும். மேலும் பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளைக் கண்டறிந்து அதனை தீர்த்து வைக்கவும் எதிர்பார்க்கிறோம்.

எமது பிரதான வேண்டுகோள் பரீட்சைபெறுபேறுகளை உயர்த்துவதே.

இதன் மூலம் பாடசாலைக்கும் கிராமத்துக்கும் நாட்டுக்கும் கௌரவம் கிடைக்கும்.

சுபீட்சமான தூரநோக்கு அடிப்படையில் பாலர்வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படுமாயின் அதற்கு நாம் தென் மாகாண கல்வி அமைச்சின் சகல வசதிகளையும் வழங்கத் தயாராக உள்ளோம் என்றார்.

## விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் வழங்க நடவடிக்கை

இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க

**திறப்பனை தினகரன் நிருபர்**



சேனை பயிர்ச் செய்கையாளர்களுக்கு எரி பொருள் பாவனையின் மூலம் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரங்களுக்கு பதிலாக சூரிய ஒளி மின்சாரத்தில் மாத்திரம் இயங்கும் நீர் இறைக்கும் இயந்திரங்களை எதிர் காலத்தில் அறிமுகப் படுத்துவதற்கு தாம் தீர்மானித்துள்ளதாக சூரிய சக்தி,காற்று மற்றும் நீர் மின்சார உற்பத்தி,கருத்திட்ட ராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அநுராதபுரம் பரசங்கஸ்வெவ பகுதியில் உள்ள சேனை பயிர் செய்கை நிலங்களை அண்மையில் நேரடியாகச் சென்று மேற்பார்வையிட்ட பின்னர் அமைச்சர் அங்குள்ள விவசாயிகளிடம் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு வட்டக்காய் செய்கை பண்ணப்பட்டுள்ள சேனை நிலங்களுக்கு சென்ற அமைச்சர், அங்குள்ள விவசாய கிணறுகள் மற்றும் நீர் இறைக்கும் இயந்திரங்களையும் பார்வையிட்டதோடு,நீர் இறைப்பதற்கு எரிபொருள் பாவனைக்கு மாதமொன்றுக்கு செலவாகும் தொகை பற்றியும் கேட்டறிந்து கொண்டார். இங்கு அதிகமான பணத்தை தாம் இதற்காக செலவு செய்வதாக விவசாயிகள் இதன்போது அமைச்சரிடம் தெரிவித்தனர்.

எரி பொருளுக்காக செய்யும் செலவை விட, சூரிய ஒளி மூலம் நீர் இறைக்கும் மோட்டார் இயந்திரங்களை விவசாயிகளுக்கு அறிமுகப் படுத்துவதாகவும்,அதன் மூலம் அதிகமான பணத்தை மீதப்படுத்தும் வாய்ப்பு விவசாயிகளுக்கு கிடைக்குமெனவும் இதன் போது அமைச்சர் தெரிவித்தார்.

# ஆதிவாசிகளின் பாரம்பரிய வாழ்வியலை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில்





மாவத்தகம, ஊவா சுழற்சி நிருபர்கள்

ஆதிவாசிகளின் பாரம்பரிய வாழ்வியல் முறைகளையும் கலை கலாசார முறைகளையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாக ஊவா மாகாண ஆளுநர் ஏ. ஜே. எம். முஸம்மில் தெரிவித்தார்.

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே. எம். முஸம்மில், மஹியங்கனை, டம்பான ஆதிவாசிகளின் கிராமத்திற்கு விஜயம் செய்து, ஆதிவாசிகளின் தலைவர் வன்னில எத்தோவை சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஆதிவாசி மக்கள் தமது அன்றாட வாழ்வில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தமது பரம்பரையைப் பாதுகாப்பதற்கு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆதிவாசிகளின் தலைவர் ஆளுநருக்கு தெளிவுபடுத்தினார். அத்துடன் ஆதிவாசிகளின் கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றையும் ஆதிவாசிகளின் தலைவர் வன்னில எத்தோ ஆளுநரிடம் கையளித்தார்.

அதனைத்தொடர்ந்து ஆதிவாசிகளின் அருங்காட்சியகத்தைப் பார்வையிட்ட ஆளுநர், ஆதிவாசிகளின் பாரம்பரிய நடன நிகழ்ச்சியின் மூலம் வாழ்த்துக்களையும் தெரிவித்தனர்.

பின்னர் யானை தாக்குதலில் உயிரிழந்த ஆதிவாசி ஒருவரின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்தும் நிகழ்விலும் ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் கலந்துகொண்டார்.



மலையகத்தில் அமைக்கப்படவுள்ள பல்கலைக்கழகம் தொடர்பான கலந்துரையாடலொன்று உயர்கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸுக்கும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையில் உயர்கல்வி அமைச்சின் காரியாலயத்தில் இடம்பெற்றது. இச்சந்திப்பில், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன் மற்றும் பிரதமரின் பெருந்தோட்ட இணைப்புச்செயலாளர் செந்தில் தொண்டமான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கலவானையில் ஒரே தினத்தில் 10 பேருக்கு விசர் நாய்க்கடி

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

கலவானை நகரில் ஒரே நாளில் 10 பேர் ஒரே பிரதேசத்தில் விசர் நாய்க்கடிக்கு உட்பட்டுள்ளனர். கலவான அரச வைத்தியசாலையின் முன்னாலுள்ள எரிபொருள் நிலையத்துக்கு அருகில் இச்சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

விசர் நாய்க்கடிக்கு உள்ளான 10 பேரும் கலவான வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுதொடர்பில் வைத்திய துறை அதிகாரிகள் ஊழியர்களை ஈடுபடுத்தி நாயைப் பிடிப்பதற்கு தேடுதல் நடத்திய போதிலும் அது கிடைக்கவில்லை. நாயை தேடிப்பிடித்து நாய்க்கடிக்கு உள்ளானவர்களுக்கு சிகிச்சை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சட்டவிரோத கட்டடங்கள் தொடர்பில் ஆராயுமாறு ஆளுநர் பணிப்பு

(கண்டி தினகரன் சுழற்சி நிருபர், எம்.ஏ.அமீனுல்லா)



கண்டி மாநகரில் சர்ச்சைக்குரிய 256 கட்டடங்கள் தொடர்பாக ஆராய்ந்து உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே உத்தரவிட்டுள்ளார்.

மேலும் அனுமதியின்றி கட்டப்பட்ட கட்டடங்களுக்கு எதிராக உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் இந்த கட்டிடங்களுக்கு அனுமதி வழங்கிய உத்தியோகஸ்தருக்கு எதிராகவும், நிறுவனங்களுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

கண்டியிலுள்ள முறையற்ற மாடி கட்டடங்கள் தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட பத்து பேர் கொண்ட பொறியியலாளர்களின் கூட்டம் ஆளுநர் தலைமையில் அவரது காரியாலயத்தில் நடைபெற்றபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

பூவெலிகட சங்கராஜ மாவத்தையில் சரிந்து விழுந்த ஐந்து மாடி கட்டடத்தின் கட்டுமானம் தொடர்பாகவும், அதன் அத்திவாரம் தொடர்பாகவும் ஆராயவேண்டும்.

மேலும் கட்டட கட்டுமான அனுமதி பத்திரத்திற்காகவும் ஏனைய அனுமதிக்காகவும் சில நிறுவனங்களின் உத்தியோகஸ்தர்கள் ஒரு "பெகேஜ்" ஆக கட்டணத்தினை பெற்று சட்டத்திற்கு முரணாக அனுமதி பெற்று கொடுப்பதாக தாம் கேள்விபடுகின்றேன். தொடர்ந்தும் தனக்கு முறைபாடுகள் கிடைத்த வண்ணம் உள்ளது. மாநகர சபை, நகர அபிவிருத்தி சபை தேசிய கட்டட ஆய்வு நிலையம் ஆகியன இவற்றிற்கு பொறுப்புகூற வேண்டும் எனவும் ஆளுநர் மேலும் தெரிவித்தார்.

# ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரிக்கு இராஜாங்க அமைச்சர் ஜீவன் விஜயம்





ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரி, டன்பார் விளையாட்டு மைதானம், கொட்டகலை ஆசிரியர் கலாசாலை மற்றும் கேம்பிரிட்ஜ் கல்லூரி போன்ற இடங்களுக்கு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் எவ்வித முன்னறிவித்தலுமின்றி திடீர் பயணங்களை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது ஹற்றன் ஹைலண்ட்ஸ் கல்லூரியின் நீண்டகால தேவையாக திகழ்ந்த விளையாட்டு மைதானத்துக்கான எஞ்சிய கட்டுமான பணிகளுக்கான நிதியை ஒதுக்குவதோடு ஆரம்ப பிரிவில் காணப்பட்ட சிறுவர் விளையாட்டு திடலை புதுப்பிக்கும் செயற்பாடுகளுக்கும் நிதி ஒதுக்கப்படவுள்ளது. மேலும் டன்பார் மைதானத்தில் காணப்படும் குறைபாடுகளை தீர்த்துவைக்க தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் கொட்டகலை கேம்பிரிட்ஜ் கல்லூரியில் அடையாளம் காணப்பட்ட கல்லூரியின் நீர், மலசலகூடங்கள் மற்றும் மின்சார குறைபாடுகளை உடனடியாக தீர்ப்பதற்கான நடவடிக்கைகளும் இதன்போது மேற்கொள்ளப்பட்டன. இவ்விஜயத்தின் போது ஹற்றன் டிக்கோயா நகர சபை மற்றும் கொட்டகலை பிரதேச சபை தலைவர்களும் கலந்துகொண்டனர். எதிர்காலத்திலும் இவ்வாறான திடீர் விஜயங்கள் பிரதேசத்தின் ஏனைய பகுதிகளுக்கும் மேற்கொள்ளப்பட்டு அடையாளம் காணப்பட்ட குறைகள் நிவர்த்திசெய்யப்படும் என இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.



இர/பலாங்கொடை கனகநாயகம் கல்லூரி பழைய மாணவியும் பலாங்கொடை மனோகரன் ஹேமலதா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியுமான வைஷ்ணவி மனோகரன் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் உச்ச நீதிமன்றத்தில் அண்மையில் சட்டத்தரணியாக சத்திய பிரமாணம் செய்து கொண்டார்.

## சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட 8 பேர் கைது

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

கனரக உபகரணங்களைப் பயன்படுத்தி சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நிவித்திகல தேல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இரத்தினபுரி மாவட்ட விசேட பொலிஸ் பிரிவு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு செயலணி ஆகியவற்றின் கூட்டு முயற்சி மூலம் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இதன்போது இரத்தினக்கல் அகழ்வுக்கு பயன்படுத்திய உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

## ஊவா தமிழ் கல்வியின் எதிர்காலம்: ஆளுநருடன் செந்தில் தொண்டமான் விசேட கலந்துரையாடல்





ஊவா மாகாண தமிழ் கல்விச் செயற்பாடுகளின் எதிர்கால மேம்பாடு குறித்து பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமானுக்கும் ஊவா மாகண ஆளுநர் ஏ.ஜே. எம்.முஸாமிலுக்கும் இடையில் நேற்றுமுன்தினம் முக்கிய கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதன்போது தமிழ் கல்வி சார்ந்த பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

கடந்த காலங்களில் ஊவா தமிழ் கல்வி அமைச்சு ஒரு நிர்வாகத்தின் கீழ் அமைந்திருந்த காரணத்தினால் தமிழ் கல்வியின் தரம் சரியான முறையில் மேம்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாகவே தமிழ் கல்வி அமைச்சு தனியான நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருந்தது.

சிங்கள மொழி பாடசாலைகளை விட தமிழ் மொழி பாடசாலைகளிலேயே அதிகமான ஆசிரியர் பற்றாக்குறை காணப்பட்டது. இவ்விரண்டு மொழி ஆசிரியர்களை ஒரு நிர்வாக கட்டமைப்பில் ஒன்று சேர்க்கும் பட்சத்தில் இரண்டு மொழிமூலங்களும் சமமான நிலையிலேயே பார்க்கப்படும்.

ஆனால், தமிழ் மொழிமூலமான ஆசிரியர்களே அதிகமாக குறைப்பாடகவுள்ளனர். சமமாக பார்க்கப்படும் பட்சத்தில் புதிய தமிழ் மொழி ஆசிரியர்களை உள்வாங்க வேண்டிய கட்டாயத்துக்கும் தள்ளப்படமாட்டார்கள். ஆகவே, தமிழ் கல்வி அமைச்சு தனியான நிர்வாகத்தின் கீழே நிர்வகிக்கப்பட வேண்டும்.

அதேபோன்று நிதி ஒதுக்கீடு விடயத்திலும் சிக்கலான நிலைமையே எழக்கூடும். தமிழ் பாடசாலைகளிலேயே அதிகமான அடிப்படை வசதிகளுக்கான தேவைகள் உள்ளன. அதன் காரணமாக தமிழ் பள்ளிகள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், பொதுவான நிதி ஒதுக்கீடுகள் மூலம் சமாந்திரத்தை பேண முடியாது என்பதுடன், தமிழ் பாடசாலைகளுக்கு தனி பட்ஜெட்களை தயாரிப்பதே பொருத்தமானதாக அமையும்.

இடம்மாற்றம் தொடர்பிலான விடயத்தில் மொழிப்பிரச்சினைகள் எழக்கூடும் என்பதால் பெருந்தோட்டப் பகுதி ஆசிரியர்களை பெருந்தோட்டப் பாடசாலைகளுக்கே இடமாற்றங்களை வழங்குவது பொருத்தமானதாகும்.

இதன் மூலம் சிறந்த கல்வி தரங்கள் எளிய முறையில் கண்காணிக்க முடியும் போன்ற விடயங்கள் இதன்போது செந்தில் தொண்டமானால் ஆளுநருக்கு எடுத்துரைக்கப்பட்டது.

## பூண்டுலோயாவில் தோட்ட முகாமையாளர் தொழிலாளர்களுக்கிடையில் கைகலப்பு

பெண்தொழிலாளி, முகாமையாளர் வைத்தியசாலையில் அனுமதி

பூண்டுலோயா நிருபர்



கொத்மலை பிரதேச சபைக்குட்பட்ட வடக்கு பூண்டுலோயாவில் தோட்டமுகாமையாளருக்கும் பெண்தொழிலாளர்களுக்கும் இடையில் இடம்பெற்ற கைகலப்பில் பெண் தொழிலாளி ஒருவரும் முகாமையாளரும் கொத்மலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவத்தில் மல்லிகா எனும் பெண் தொழிலாளி காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழுந்து நிறுக்கும் இடத்தில் வைத்து தோட்டத்தொழிலாளர்கள் மழை காரணமாக தமது வீடுகள் உடைந்துள்ளமையை தோட்டமுகாமையாளருக்கு அறிவித்துள்ளனர். இச்சமயம் தோட்டமுகாமையாளருக்கும் தொழிலாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்வாக்குவாதம் கைகலப்பாக மாறியது. இதன்போது தோட்ட முகாமையாளர் தொழிலாளர்களை அநாகரிகமாக பேசியுள்ளார். இதனையடுத்து தோட்டமுகாமையாளர்களை பெண் தொழிலாளர்கள் தாக்க முற்பட்ட போது முகாமையாளர் பெண் தொழிலாளியை தாக்கியுள்ளார். இந்நேரத்தில் பெண் தொழிலாளர்களும் தோட்ட முகாமையாளரை தாக்கியுள்ளனர். இதனால் இருவருக்கும் காயம் ஏற்பட்டு கொத்மலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக மஸ்கன்ஸ் கம்பனியுடன் பேசி தோட்ட முகாமையாளரை இடமாற்றம் செய்ய கடிதம் அனுப்பியுள்ளதாக தொழிலாளர் தேசிய சங்கத்தின் மாநில அமைப்பாளர் சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார். அதுமட்டுமல்லாமல் கொத்மலை பிரதேச சபை உறுப்பினர் ரத்னம் சிவக்குமாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. தோட்டத் தொழிலாளர்கள் பணிபகிஷ்கரிப்பை முன்னெடுக்காமல் தோட்டமுகாமையாளரை இடமாற்றுவதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## கலவான அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நிறைவுசெய்வதில் தாமதம்

இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர

( பலாங்கொடை தினகரன் நிருபர்)

கலவான சபரிகம 129 அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பூர்த்தி அடையாமல் உள்ளதாக இரத்தினபுரி மாவட்ட இணைப்பு கமிட்டி கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர சுட்டிக்காட்டினார். இரத்தினபுரி மாவட்ட இணைப்பு கமிட்டி கூட்டம் சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ மற்றும் பலாங்கொடை பாராளுமன்ற உறுப்பினர் அகில சாலிய எல்லாவல ஆகிய சம தலைவர்களின் தலைமையில் மாவட்ட செயலகத்தின் மாவட்ட செயலாளர் மாலினி லொகுபோதாகமவின் பங்களிப்பில் இடம்பெற்றது.

இதன்போது கலவான சபரிகம 129 அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக 66 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த வேலைத்திட்டங்களில் இதுவரை எந்த ஒரு வேலைத்திட்டமாவது உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாமல் உள்ளது. அதேசமயம் 45 அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு இதுவரை எவ்வளவு செலவாகும் என கணக்கிடப்படவில்லை எனவும் இராஜாங்க அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

## விலைமனுக்கோரல் அறிவித்தல்

### ஸ்ரீ லங்கா ரெலிகொம் பிஎல்சிக்கு – (SLT) 2020/2021 காலப்பகுதிக்கு வாடகை வாகனங்கள் விநியோகத்துக்காக விண்ணப்பங்கள் மீளக்கோரல்

**குறியீட்டு இலக்கம்: #L/0458/2020**

ஸ்ரீ லங்கா ரெலிகொம் பிஎல்சிக்கு வாடகை வாகனங்களை (கார்கள், வேன்கள், டபிள் கெப்கள்) விநியோகிப்பதற்கான விண்ணப்பங்கள் இலங்கையின் போக்குவரத்துத் துறையில் புகழ்பெற்றுள்ள நிறுவனங்களிடமிருந்து கோரப்படுகின்றன. **2020 ஒக்டோபர் 13** ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

நாடு முழுவதிலும் 600 வாகனங்களை விநியோகிக்கும் ஆற்றலை விநியோகத்தர்கள் கொண்டிருக்க வேண்டும். வாகனத்தின் வயது உற்பத்தி வருடத்திலிருந்து ஐந்து (05) வருடங்களுக்கு குறைந்ததாக இருக்க வேண்டும். சேவை ஒப்பந்த காலம் இரண்டு வருடங்களுக்குரியது என்பதுடன், பரஸ்பர கலந்துரையாடல்களைப் பொறுத்து ஆகக்கூடியது மூன்று (03) வருடங்களுக்கு நீடித்துக் கொள்ள முடியும்.

இந்த அறிவித்தல் பிரசுரமான திகதியன்று மு.ப. 9.00 மணி முதல் ஏழு வேலை நாட்கள் வரையில், மீளச் வழங்கப்படாத வைப்புத் தொகையான ரூ. 1000 மற்றும் வரிகளை (8% வெட்) கொழும்பு கோட்டையிலுள்ள **SLT** ரெலிஷொப்பில் கொடுப்பனவை செலுத்திய வைப்புச் சீட்டை சமர்ப்பித்து கீழே தரப்பட்டுள்ள கொள்முதல் அலுவலகங்களிலிருந்து விண்ணப்பங்களையும் ஆவணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை நேரடியாக அல்லது பதிவு தபாலில் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்கும் படி அனுப்பி வைக்க வேண்டும்.
விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி **2020 ஒக்டோபர் 13.**
(தபால் உறையின் இடது மேல் மூலையில் மேற்படி குறியீட்டு இலக்கம் எழுதப்பட்டிருக்க வேண்டும்)

மேலதிக தகவல்கள் தேவைப்படின் **071-4302916** (ரவீந்திர குணவர்தன) உடன் தொடர்பு கொள்ளவும்.

தவிசாளர் - சிரேஷ்ட விலைமனுக்கோரல் பிரிவு
கொள்முதல் பிரிவு
6 ஆம் மாடி, SLT/HQ-A கட்டடம்
ஸ்ரீ லங்கா ரெலிகொம்
லோட்டஸ் வீதி, கொழும்பு 01

Sri Lanka Telecom

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### பரீட்சைகள் திணைக்களம்

### 2020ஆம் ஆண்டிற்கான க.பொ.த. (சா/த) மற்றும் ஏனைய பரீட்சைகளுக்கான அச்சடிக்கப்பட்ட மற்றும் அச்சடிக்கப்படாத கணனி தாள்களின் வழங்கலுக்கான பெறுகை

Contract No.: 4/10/02/2020 (02)

1. கீழே குறிப்பிட்டுள்ள ஆகக் குறைந்த அனுபவத்தையுடைய தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான அச்சடிக்கப்பட்ட மற்றும் அச்சடிக்கப்படாத கணனி தாள்களின் பெறுகைக்காக பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக்குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தில் அடக்கப்பட்டுள்ளன.

| Lot No. | Type | தொகுதியிலுள்ள தாள்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 13"x9" **White** Bond Two sides with holes Continues Certificates Paper (Daham Pasal) (100 ± 2 GSM) | 60 பக்கெட்டுக்கள் (ஒரு பக்கெட்டிற்கு 1000 தாள்கள்) |
| 2. | 15"x12" **White** Bond Two sides with holes and printed continues **Attendance** Sheets O/L (80 ± 2GSM) | 100 பக்கெட்டுக்கள் (ஒரு பக்கெட்டிற்கு 1000 தாள்கள்) |
| 3. | 15"x12" **White** Bond Two sides with holes and printed continues **Results** Sheets O/L - (80 ± 2GSM) | 300 பக்கெட்டுக்கள் (ஒரு பக்கெட்டிற்கு 1000 தாள்கள்) |
